₹10


fmpb

# அறைகூவல்

Volume 51 | Issue 10 | October 2021

## ...பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்?...

(ரோமர் 10: 14-15)



# ஆரம்ப வரிகள்...

## பணித்தளத்தில் இயேசு!



நிலவிற்குப் பயணம் செய்த விண்வெளி வீரர் ஜேம்ஸ் எர்வின் கூறிய வார்த்தைகள் என்னவெனில், 'சந்திரனில் மனிதன் நடந்தான் என்பதன் முக்கியத்துவத்தைவிட தேவன் மனிதனாக இப்பூமியில் நடந்தார் என்பதே அதிமுக்கியமாகும்.' பூமி, சந்திரன். செவ்வாய் போன்ற அனைத்து கிரகங்கள் மற்றும் விண்மீன் கூட்டங்கள் யாவையும் உருவாக்கிய 'அனாதி கர்த்தராகிய இயேசுகிறிஸ்து' (யோ. 1:15; கொலோ.1:15), மனுக்குலத்திற்கு இரட்சிப்பையும் சமாதானத்தையும் நம்பிக்கையையும் நல்குவதற்காக, விண்ணுலக கலாச்சாரத்தைத் துறந்து மண்ணுலக கலாச்சாரத்தை ஏற்று ஒரு கலாச்சாரம் கடந்த மிகப்பெரிய மிஷனெரி தெய்வமாக இப்பூமியில் வந்து வாசம் பண்ணினார் (யோ.1:1, 14).

ஆம், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கலாச்சாரம் கடந்து ஊழியம் செய்த ஒரு மிஷனெரி தெய்வம். பூமிதான் அவரது பணித்தளம்; அவரே நற்செய்தி! எனவே, பிதா அவரை இவ்வுலகிற்கு சுவிசேஷத்தை அறிவிக்க அனுப்பினார். அவர் எந்தவிதப் பாரபட்சமுமின்றி அக்காலத்திலுள்ள அனைத்து இன மக்கள் மத்தியிலும் ஊழியம் செய்தார். இவ்வுலகமாகிய தமது பணித்தளத்தில் "அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்," (மத்.9.37) என்பதை அறிந்தவராக, அவர் தமது சீடர்களுக்கு, "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்று அழைப்பு விடுத்தார் (மத்.4:19). ஆம், இயேசு தமது பணித்தளமாகிய இவ்வுலகில் முதன்முதலாக மிஷனெரிப்பணியை ஆரம்பித்து வைத்தார்! 'கிறிஸ்துவைக் கொண்ட ஒவ்வொரு இதயமும் ஒரு மிஷனெரி; கிறிஸ்து அல்லாத ஒவ்வொரு இதயமும் ஒரு மிஷனெரிப்பணித்தளம்" என்று சீனதேச மிஷனெரி டிக் ஹில்லிஸ், இதுதொடர்பாகக் கூறியுள்ள வார்த்தைகள் முற்றிலும் உண்மையே!

ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் வந்தாலே நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் நூற்றுக்கணக்கான நமது ஜெபக்குழுத்தலைவர்களும், அங்கத்தினர்களும், நண்பர்களும் சாரை சாரையாக நமது இயக்கத்தின் 264 பணித்தளங்களுக்கும் சென்று உபவாசித்து ஜெபித்து, மிஷனெரிகளை ஊக்குவித்து, பணித்தளத்தில் ஆவியானவரின் செயல்பாட்டை நேரடியாகக் கண்டு, தேவனை மகிமைப்படுத்தி வருவது வழக்கம். மிஷனெரிப் பணித்தளங்களைப் பார்த்து வந்த ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும், ஊழியப்பார்வையிலும், இலக்குகளிலும், அணுகுமுறை மற்றும் செயல்பாட்டிலும் பரந்த வல்லமையான ஒரு மாற்றத்தைக் காணலாம். பணித்தள விஜயத்தின் மூலம் அவர்கள் அடைகிற அறிவும், அனுபவமும் அவர்களை மேலான காரியங்களுக்காக ஞானமாக ஜெபிக்கத் தூண்டுகிறது. மேலும், அது மிஷனெரிகளோடு நல்ல உறவை ஏற்படுத்தி, அவர்களை ஊக்கப்படுத்தும்விதமாக, 'அவர்கள் தனியாக இல்லை; அவர்களின் பின்னால் நாங்களிருக்கிறோம்' என்பதை உறுதிபடுத்தும் நிகழ்வாகவும் காணப்படுகிறது. மேலும் அது கிறிஸ்துவின் மீதும், கிறிஸ்துவின் நற்செய்தியை வாழ்வில் ஒருமுறையேனும் கேட்டிராத மக்கள் மீதும் பணித்தள விஜயம் செய்யும் நமக்கு ஒரு வாஞ்சையை ஏற்படுத்துகிறது. அதன் விளைவாக, நாம் 'மிஷனெரிக் கிறிஸ்தவர்கள்' ஆவதுடன், பவுல் கூறுவதுபோல 'தேவனுடைய உடன்வேலையாட்களாகிறோம்' (1 கொரி.3:9). அதனால் நமது மிஷனெரிப்பணி ஈடுபாடும் அதிகரித்து, அது நமக்கு நல்ல ஊழிய திருப்தியையும், கிறிஸ்துவோடுகூட ஒரு நெருக்கமான பிணைப்பையும் உருவாக்குகிறது.

தற்போதைய தொற்றுநோயின் காரணமாக, கடந்த இரண்டு ஆண்டுகளாக நமது இயக்கத்தில் மிஷனெரிப்பணித்தள விஜயங்கள் கிரமமாக நடைபெற முடியாததை அறிவோம். ஆனாலும், இப்பூமிதான் கிறிஸ்துவின் பணித்தளம்; அதிலும் உலகிலேயே இந்தியாவில்தான் கிறிஸ்துவை அறியாத இனமக்கள் அதிகம். ஆதலால், நமதாண்டவர் இந்தியாவை அதிகம் நேசிப்பதுடன், பரிசுத்த ஆவியானவராகப் பணித்தளங்களில் அதிகம் செயல்பட்டும் வருகிறார். ஆகவே, தொடர்ந்து நமது மிஷனெரிகளுக்காகவும் பணித்தள ஊழியங்களுக்காகவும் நாம் ஜெபிக்கும்போதும், மிஷனெரிப்பணியில் நாம் ஈடுபடும்போதும் "வடதிசைவாழும் என்குடும்பம் உடன் என்நினைவில் கலந்துவிடும்" என்கிற பாடலின் வரிகளை நமது எண்ணத்திரையில் தொய்வில்லாமல் தொனிக்கச் செய்யலாமன்றோ!

- **JJ. ஹாரிஸ்** *(தகவல் தொடர்புத்துறை)*

நான் அனுப்புகிறவனை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான், என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.
– இயேசு (யோவான் 13:20)

உங்களுக்கு ஊழியஞ்செய்யும்படிக்கு, மற்றச் சபைகளிடத்தில் சம்பளத்தைப் பெற்று, அவர்களைக் கொள்ளையிட்டேன். – புனித பவுல் (2 கொரி.11:8)

“நீங்கள் போக வேண்டும் அல்லது உங்களுக்கு பதிலாக யாரையாவது அனுப்ப வேண்டும்”
– ஆஸ்வால்ட் ஜே. ஸ்மித்

“நற்செய்தியை நாம் பெற்றிருக்கின்ற அதே அளவிலேயே அதை மற்றவர்களுக்குக் கொடுக்கவும் நாம் கடன்பட்டிருக்கிறோம்.” – பி.எஃப். ப்ரெஸி

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

**நமது தரிசனம்:**
சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

**நமது ஊழியம்:**
தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும், இந்திய திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தை பகிர்ந்து கொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தன் சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச் சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள்.
நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம் :
**feedbackfmpb@fmpb.org**

# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப்பூ**
ஆசிரியர்: S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

| | |
|---|---|
| தனிப் பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |

*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*
**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப் பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை 53. தொலைபேசி 044-26570404
பேக்ஸ் 044-26573353 கைபேசி 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

# பொதுகாரியதரிசியிடமிருந்து...



கிறிஸ்துவின் பிரதான கட்டளையை நிறைவேற்றும் பணியில் எனது அன்பு உடன்பங்குதாரர்களே,

நமது இரட்சகரும் ஆண்டவருமான இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள ஈடுஇணையற்ற நாமத்தினாலே உங்களனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்!

எரேமியாவின் புத்தகம், யூத சாம்ராஜ்யத்தின் சோகக் கதைகளில் ஒன்றை நமக்கு விவரிக்கிறது. பாபிலோனியர்கள் எருசலேமை தீக்கிரையாக்கினர். பாபிலோனிய பேரரசைச் சார்ந்த காவற்சேனாதிபதி நேபுசராதான் எருசலேமிலுள்ள மக்களைப் பாபிலோனுக்கு நாடு கடத்திவிட்டு, தங்களுக்கென ஒன்றுமேயில்லாத சில ஏழைகளை மட்டும் யூதா தேசத்தில் விட்டுச் சென்றார் (எரே.39:10). மீதமுள்ள அந்த ஜனங்களில் சிலர், தங்களை ஆளும்படி நேபுசராதானால் விட்டுச் செல்லப்பட்ட மிஸ்பாவில் குடியிருந்த கெதலியாவிடம் வந்து, அவனைக் கொன்றனர். அதனால் விளையும் பழிவாங்குதலுக்குப் பயந்து அங்கிருந்த மீதமுள்ள ஜனங்களை அவர்கள் எகிப்திற்குக் கூட்டிச்செல்ல விரும்பினர். எகிப்திற்குச் செல்வதற்கு முன்னர் அவர்கள் எரேமியா தீர்க்கதரிசியிடம் வந்து, கர்த்தர் தங்களை எங்குச் செல்ல சித்தம் கொண்டுள்ளார் என்று கேட்டனர் (எரே. 42:2). அதற்கு எரேமியா, தேவனுடைய சித்தம், அவர்கள் எகிப்திற்குச் செல்லாமல் எருசலேமிலேயே இருக்க வேண்டும் என்று கூறியபோது, அவர்கள் எரேமியாவை நோக்கி, "நீ பொய் சொல்கிறாய்" (எரே.43:2) என்று கூறி, அவர்கள் எருசலேமிலிருப்பதைவிட எகிப்திற்குச் செல்வதே தங்களுக்குப் பாதுகாப்பு என எண்ணி, கர்த்தரின் வார்த்தைக்கு அவர்கள் கீழ்ப்படியவில்லை.

நமது சித்தம், தேவசித்தத்திற்கு முரண்பாடாகக் காணப்படும்போது, நாம் நமக்குச் சாதகமான, உள்நோக்கம்கொண்ட, நல்லதென நமக்குத் தோன்றுகிற தீர்மானங்களையே மேற்கொள்கிறோம். ஆனால், "என் நினைவுகள், உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல...உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது" என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஏசா.55:8). கிறிஸ்தவ ஜீவியத்தில் தேவனுடைய சித்தத்திற்குட்பட்டு வாழ்வதே அதிமுக்கியமானதாகும். எனவே, நமது சொந்த சித்தத்திலும் அறிவிலும் அல்ல, தேவசித்தத்திற்குட்பட்டு அவருடைய வழியிலே நடப்பதற்கென்றே நாம் அழைக்கப்படுகிறோம்.

## விரிவுப்பணி செயலாளருக்கான தரிசன விரிவாக்கக் கூடுகை:

கடந்த 2021 ஆகஸ்ட் 24-ம் தேதி முதல் 26-ம் தேதி வரை திருநெல்வேலியிலுள்ள நமது சிநேகாலயா கட்டிடத்தில் வைத்து இச்சிறப்புக் கூடுகை மூன்று நாட்கள் நடைபெற்றது. அக்கூடுகையில் நடந்த ஊழியத் தரிசன விளக்கவுரைகள் மற்றும் கலந்தாலோசனைகளில் பங்குகொண்ட அனைவரும் அநேக காரியங்களைக் கற்றுக் கொண்டதோடு, அக்கூடுகை அவர்களில் நல்லதொரு தாக்கத்தையும், பரந்த மனப்போக்கையும் ஏற்படுத்தின. நமது இயக்கத்தின் விரிவுப்பணி செயலாளர்களின் ஊழிய வாஞ்சைக்காகவும், அவர்களின் கடின பிரயாசங்களுக்காகவும் தேவனைத் துதிக்கிறேன்.

## மிஷனெரிப் பிரதிஷ்டை:

ஆகஸ்ட் 25-ம் தேதி மாலையில் பாளையங்கோட்டை, மிலிட்டரிலைன்ஸ் சி.எஸ்.ஐ கிறிஸ்து ஆலயத்தில் வைத்து, நமது மிஷனெரியோடு மற்ற ஸ்தாபனத்தைச் சேர்ந்த மிஷனெரிகளுமாக 5 பேர் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். நமது தேசத்தைச் சுவிசேஷத்தால் சந்திக்கிற பணியில் உயர்ந்த தரிசனத்துடன் ஆதரவுகளை நல்கிய குருவானவர் அருள்திரு. ஃபிரெட்ரிக் சத்ய சாமுவேல் அவர்களுக்கும், அத்திருச்சபை கமிட்டி அங்கத்தினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## கேரள மாநில மாநாடு:

இம்மாநாடு இணையதளத்தின் மூலம் கடந்த ஆகஸ்டு 27-29-ம் தேதிகளில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. தென்னிந்திய திருச்சபையின் மத்திய கேரள பேராய பிஷப் மாமறைதிரு. அறிவர். மலாயில் சாபு கோஷி செரியன் அவர்கள், அம் மாநாட்டின் முதல்நாளில் தேவவார்த்தையைப் பகர்ந்து கொண்டார். அதில் பங்குக்கொண்ட அனைவருக்கும் அம்மாநாடு மிகவும் ஆசீர் வாதமாக அமைந்தது.

## வடகிழக்கு லூத்தரன் திருச்சபை மாடரேட்டர் சந்திப்பு:

நமது இயக்கத்தின் பணித்தள செயலர் மற்றும் வடகிழக்கு மண்டல செயலரோடு வடகிழக்கு லூத்தரன் திருச்சபை மாடரேட்டர் மாமறைதிரு. பாஜெல் முர்மு அவர்களையும், திருச்சபைத் தலைவர்களையும் ஜார்க்கண்ட்டிலுள்ள தும்காவில் வைத்து சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. நமது பணித்தள ஊழிய விரிவாக்கத்தைக் குறித்து அவர்களுடன் கலந்தாலோசிக்கும்போது, அவர்கள் தங்களது முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் நமது ஊழியத்திற்குத் தருவதாக விருப்பம் தெரிவித்தார்கள்.

## ராஜ்மஹால் மறைமாவட்டத்தின் பேராயர் சந்திப்பு:

செப்டம்பர் 4-ம் தேதி அருள்திரு. சாலமோன் ஞானசேகரும், நானும் இ.சி.ஐ. ராஜ்மஹால் மறைமாவட்ட பேராயர் மாமறைதிரு. பத்ராஸ் மால்தோ அவர்களை சந்தித்து ஊழிய உறவையும், ஆதரவையும் மேம்படுத்துவதற்கான காரியங் களைக் குறித்து கலந்துரையாடல் செய்தோம். நமது இயக்கத்தின் மூலம் மால்தோ மக்கள் மத்தியில் நடைபெற்று வரும் ஆரம்பக்கால ஊழியங்களையும், அதனால் தேவன் தமது ராஜ்யத்தை மால்தோ மக்கள் மத்தியில் எவ்வாறு நிறுவி வருகிறார் என்பதையும் நினைவுக்கூர்ந்து அங்கிருந்த குருவானவர்களுடன் பகரும் தருண மாக அது காணப்பட்டது.

## லோகர்பச்சோ கிராம விசுவாசிகளுடன் கர்த்தரை ஆராதித்தல்:

செப்டம்பர் 5-ம் தேதி, நமது லோகர்பச்சோ கிராம விசுவாசிகளுடன் சேர்ந்து கர்த்தரை ஆராதிக்கும் வாய்ப்புக் கிட்டியது. அவ்வாராதனையில் ஒரு வயதான விசுவாசி, அநேக ஆண்டுகளுக்கு முன்னர் “எங்களைத் தேடிவந்த மிஷனெரிகள் தேவன் உங்களை ஆசீர்வதித்து, சகல தேவைகளையும் சந்திப்பார் என்று கூறினார்கள். அதன்படி இன்று தேவன் எங்களுக்குத் தேவையான சாலை, மின்சாரம் மற்றும் கல்வி வசதிகளையும், எல்லாவற்றிற்கும் மேலாக இரட்சிப்பையும் நல்கியுள்ளார்” என்று தனது சாட்சியைப் பகர்ந்துக் கொண்டார். அது, சுவிசேஷத்தினால் மறுமலர்ச்சிப் பெற்ற ஒரு சமுதாயத்தின் சாட்சியாக இருந்தது.

## நமது விடுதிப் பிள்ளைகள்:

9 முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் நமது விடுதி மாணவ மாணவிகள், நீண்ட தொற்றுநோய் காலங்களுக்குப் பிறகு மீண்டும் நமது விடுதி களுக்குத் திரும்பியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம். மற்ற சிறிய வகுப்புகளில் படிக்கும் சிறுவர்களின் பள்ளிகள் இன்னும் திறக்கப் படாததால், அவர்களுக்குப் பகல்நேர பராமரிப்பு மையங்களில் மற்றும் அவர்களது கிராமங்களில் வைத்து கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.

## குஜராத் எஸ்.எம்.வி.எம் கூட்டம்:


சஹயாத்ரி மைத்ரி விகாஸ் மண்டல் என்பது, FMPB சார்பாக குஜராத்தில் உள்ள ஜாவ்டா ஆங்கிலப்பள்ளியை நடத்திவரும் ஒரு அறக் கட்டளையாகும். இந்த அக்டோபர் மாதம் 21-ம் தேதி அதன் நிர்வாகக் கூட்டமும், பொதுக்குழு கூட்டமும் நடக்கவிருக்கின்றன. இக்கூட்டங்களுக்காக ஜெபிக்க உங்களை மிகவும் கேட்டுக் கொள்கிறேன்.

## குஜராத் சி.என்.ஐ பேராயர் சந்திப்பு:

இந்த அக்டோபர் மாதம் 22-ம் தேதி நமது இயக் கத்தின் தலைவரும், நானும், நமது பணித்தள பொறுப்பாளர்களுடன் சேர்ந்து குஜராத்திலுள்ள ஃபோக்டியில் சி.என்.ஐ பேராயர் மாமறை திரு. சில்வான்ஸ் கிறிஸ்டியன் அவர்களைச் சந்திக்கவிருக்கிறோம். இந்தச் சந்திப்பு அம்மறை மாவட்டத்துடன் உள்ள நமது ஊழிய உறவை மேலும் வலுப்படுத்தத்தக்கதாக அமைய தாங்கள் தயைகூர்ந்து ஜெபிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

உங்களனைவரையும் எங்கள் ஜெபங்களில் தாங்குகிறோம்.

தேவஊழியத்தில் தங்கள் சகஊழியன்,



**அருள்திரு. S. ஜாண் பெர்லின்**




# பரிசுத்த பவுலின் பயணங்களும், பணித்தள விஜயமும்

சவுல் தமஸ்குவிற்குப் பயணித்த காரணம், கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதற்காக. வழியிலே இயேசுவை தரிசித்ததால் அவன் வாழ்க்கைப்பயணம் மாறியது. தமஸ்கு பாதையின் பிரயாணத்தில், ஆண்டவர், சவுலோடு இடைப்பட்டதின் விளைவாக, அவன் மாபெரும் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டான். தமஸ்கு பிரயாணம்தான் அவனுடைய வாழ்க்கையைத் தலைகீழாக மாற்றியது. "துன்புறுத்தியவர், துன்புறுத்தப்பட்டார்." கிறிஸ்துவுக்காய் வைராக்கியம் கொண்டவராய், பவுல் பயணத்தை துவங்குகிறார். பரிசுத்த பவுல் ஊழியம் செய்த நாட்களில், அவர் மேற்கொண்ட மூன்று ஊழியப் பிரயாணங்களும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏசாயா 45:22-ல் சொன்ன வண்ணமாக, பூமியின் எல்லையெங்கும் உள்ளவர்கள், அவரை நோக்கிப்பார்த்து, அவரால் இரட்சிப்படைய வேண்டுமென்ற வைராக்கியத்தோடு, பவுல் தன் ஊழியத்தைச் செய்தார். தேவன் தந்த தரிசனமும், வழிநடத்துதலும் அவர் மனதைத் திடப்படுத்தியது. எருசலேம் துவக்கி இல்லிரிக்கம் வரை, என்பதுதான் அவரது குறிக்கோள். பூமியின் ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரை கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பறைசாற்ற உறுதிகொண்டார்.

ஒரு தரிசனத்தை நிறைவேற்றுவதானால், சவால்கள் தவிர்க்க முடியாதது. அக்காலத்தில் கடல் பயணமோ அல்லது தரைவழிப்பயணமோ எந்தப் பயணமானாலும் பாதுகாப்பற்றதும் ஆபத்துக்கள் நிறைந்ததும், சவால் நிறைந்ததுமாகக் காணப்பட்டது. நல்ல சமாரியன் உவமையில், எருசலேமிலிருந்து எரிகோ போவதே ஆபத்தான பாதையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. உள்ளூர் பயணமே பயத்தைக் கொடுக்கக்கூடியதானால், வெளிநாட்டுப்பயணம் எப்படிப்பட்டதாக இருந்திருக்கும்! பவுலின் பயணத்திற்கான காரணங்களை, மூன்று தலைப்புகளில் விவரிக்க காணலாம்.

## 1
## நான் அந்தப் பரம தரிசனத்திற்குக் கீழ்ப்படியாதவனாய் இருக்கவில்லை.

அந்தப் பரம தரிசனம் பவுலை அமர்ந்திருக்க விடவில்லை. அப்போஸ்தலர் 20:18-24, "என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன். அவரது இறையியல் அனுபவமும், பயண அனுபவங்களும், பதின் மூன்று நிருபங்களை எழுதுவதற்கு உதவியாகயிருந்தது. மற்ற அப்போஸ்தலர்களால் நாம் குறைவான நிருபங்களே பெற்றோம். அதற்குக் காரணம், வெளிப்பாடு குறைவே காரணம் (Lack of Exposure). பவுலைப் போல இவர்களும்

பயணித்திருந்தால், அநேக நிருபங்கள், நமக்குக் கூடுதலாகக் கிடைத்திருக்கும். 2 கொரிந்தியர் 11:23-27-ல் பவுல் தனது பாடுகளை விவரிக்கிறார். அவர் கிறிஸ்து தனக்கு தந்த தரிசனத்திற்குக் கீழ்ப்படிந்து பயணங்கள் செய்ததினால், இன்று வரை அவரது அனுபவங்கள் நமக்குச் சவால்களாக உள்ளன.

## 2

## கடனாளியாயிருக்கிறேன்.

ரோமர் 1:14 "கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன்." தவிர்க்க முடியாத பணி, உதறித்தள்ள இயலாத கடமை, சாக்குப்போக்கு சொல்லமுடியாத நிலை, மறந்துபோகக்கூடாத பொறுப்பு. பவுல் அப்போஸ்தலனுக்கு நித்திரை வரவொட்டாத அத்தரிசனம், அவரை "அழைத்துச் சென்றது" என்பதை விட, ''இழுத்துச் சென்றது'' என்றே கூற வேண்டும். அடிகள், அவமானங்கள், பாடுகள், பட்டினி, நிர்வாணம், கப்பல் பிரயாணத்தில் வந்த சேதம் ஆகிய அனைத்தும் கிறிஸ்துவின் மீதும், அவர் பெற்றுக்கொண்ட தரிசனத்தின் மீதும் உள்ள பற்றிலிருந்து அவரை எள்ளளவும் பின்வாங்கச்செய்யவில்லை. ரோமர் 8:38,39-ம் வசனம் அவரது வாழ்வில் முழுமையாக நிறைவேறியது. அவர் கால் வைத்த இடங்களில் எல்லாம் திருச்சபைகள் எழும்பின. கண்ணீரோடே விதைத்தவர், கெம்பீரத்தோடு அறுத்தார், சங்கீதம் 126:5. வைராக்கியத்தோடு பிரசங்கித்தவர், ஆத்துமாக்களைத் திரளாய் வரக்கண்டார். கிறிஸ்துவுக்குள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று பவுல் அப்போஸ்தலன் நன்கு அறிந்திருந்தார், 1 கொரிந்தியர் 15:58.

## 3

## நல்ல போராட்டம் போராடினேன்.

பவுல் தனது முதல் மிஷனெரிப்பயணத்தில், சீப்புரு தீவு, லிசியா மற்றும் கலாத்தியா நாடுகளில் பயணம் செய்து சுவிசேஷம் கூறினார். இரண்டாவது மிஷனெரிப் பயணத்தில் கலாத்தியா, மக்கெதோனியா மற்றும் அகாயா நாடுகளுக்குச் சென்று நற்செய்தி அறிவித்தார். மூன்றாவது மிஷனெரிப்பயணத்தில் கலாத்தியா, ஆசியா, மக்கெதோனியா, அகாயா மற்றும் எருசலேம் வரை சென்று ஊழியம் செய்தார். அவரது இறுதிப்பயணத்தில் கிரேத்தா, ஆசியா, மக்கெதோனியா மற்றும் அகாயா நாடுகளுக்குச் சென்று பிரசங்கித்தார். இத்தனை நாடுகளில், எந்த வசதியுமில்லாத நாட்களில் அவர் பயணம் செய்ததை நினைத்தால் நமக்கு ஆச்சரியமாக உள்ளது. அப்போஸ்தலர் நடபடிகளின் புஸ்தகமும், அவர் எழுதிய கடிதங்களும், அவருடைய மகத்தான ஊழியங்களின் சாட்சிகள். எனவேதான், 'நல்ல போராட்டம் போராடி, ஓட்டத்தை முடித்தேன்' என்று அவரால் உறுதியோடு சவாலிட முடிந்தது.

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, தனது ஆதரவாளர்களைப் பணித்தள விஜயத்திற்கு அன்புடன் அழைக்கிறது. மூலமாக 1971-ம் ஆண்டு வட இந்தியாவிற்கு ஊழியரை அனுப்பிய நமது இயக்கத்தின் தலைவர்கள், பணித்தளங்களையும் ஊழியர்களையும் பார்வையிட்டு, அவர்களுடைய வசதியில்லாத வீடுகளில் தங்கி, ஜெபித்து, ஊழியத்தில் அவர்களை உற்சாகப்படுத்தினர். அன்று ஆரம்பிக்கப்பட்ட பணித்தள விஜயம், 2019-ம் ஆண்டு வரை அனைத்து மாநிலங்

களிலும் தொடர்ச்சியாக நடைபெற்றன. அதனை ஊழியர்களும், தலைவர்களும், தாங்குவோர்களும், பொறுப்போடும், அக்கரையோடும், செய்ததின் விளைவாக, ஊழியம் அதிகமாகப் பெருகி வருகிறது. எனவே "பணித்தள விஜயம்" என்பது, ஒரு "சுற்றுலா பயணம் அல்ல," தரிசனம் பெற்ற தேவஜனங்கள், தியாகசிந்தையோடு தரும் அவர்களது காணிக்கையின் பலன், அவர்கள் கண்ணீரோடு ஏறெடுக்கும் ஜெபங்களின் விளைவு ஆகிய இரண்டினையும் தங்கள் சொந்தக்கண்களால் காணச்செல்லும் மிஷனெரிப்பயணம் தான், பணித்தள விஜயம். 1988-ம் ஆண்டு, போரியோ பணித்தளத்தில் நாங்கள் எங்களது இரண்டு வயது மகன் லிவிங்ஸ்டனுடன் அடிப்படை வசதி இல்லாத ஒரு சிறிய குடிசையில் தங்கி ஊழியம் செய்து வந்தோம். அப்பொழுது எங்களைச் சந்திக்க வந்த திரு. ஜீவராஜ் அண்ணன் அவர்கள் ( முன்னாள் செயற்குழு அங்கத்தினர் ), அந்த வீட்டைப்பார்த்து கண்கலங்கினார். எங்களுக்காகப் பாரத்தோடு ஜெபித்து சென்றார். ஆனால் இன்று " போரியோ பணித்தளம்" நூற்றுக்கணக்கான திருச்சபைகள், மற்றும் ஆயிரக்கணக்கான மால்தோ, மற்றும் சந்தாலி விசுவாசிகளைக் கொண்ட தேவனுடைய கூடாரமாகத் திகழ்கிறது. திருச்சி மாவட்டத்திற்கென்று நியமிக்கப்பட்ட பீகார் மாநிலம், ''ஊழியர்களின் கல்லறைத்தோட்டம்'' என்று அழைக்கப்பட்டது. ஆனால் வருடந்தோறும் ஜெபக்குழுத்தலைவர்கள் மற்றும் தாங்குவோர்கள் நமது ஊழியர்களோடு மூன்று நாட்கள் தங்கி ஆத்தும பாரத்தோடும் கண்ணீரோடும் உபவாசித்து ஜெபித்தார்கள். அதன் விளைவாக மால்தோ மக்கள் திரளாக இயேசுவை ஏற்றுக்கொண்டு திருமுழுக்கு பெற்றார்கள். "உலகிலேயே மிகவேகமாகக் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் மக்கள் இனமாக மால்தோ சமுதாயம் அழைக்கப்பட்டது." ''ஊழியர்களின் கல்லறைத்தோட்டம்'' என்று அழைக்கப்பட்ட ஜார்க்கண்ட் மாநிலம் (முந்தைய பீகார் மாநிலத்தின் ஒரு பகுதி இன்று "கர்த்தரின் திராட்சைத்தோட்டமாக மாறியது." பணித்தள விஜயம் சென்று நமது ஊழியர்களோடும், விசுவாசிகளோடும், நாம் ஜெபிப்பதின் விளைவாக அவர்களும் நமக்காக ஜெபிக்கின்ற நமது ஜெபப்பங்காளர்களாக மாறுகின்றனர். மிஷனெரிகளைப் பணித்தளங்களில் நேரில் காண்கின்ற உங்கள் இதயங்களில் ஏற்படுகிற தாக்கம், அதனால் பாரத்தோடு இடைவிடாமல் உங்களால் ஏறெடுக்கப்படும் ஜெபங்கள், மிஷனெரிகள் கால்வைக்கும் கிராமங்களையெல்லாம் திருச்சபைகளாக மாற்றி விடுகிறது. எனவே உங்கள் பயணமும், ஒரு வகையில் மிஷனெரிப்பயணம்தான். அத்தகைய சிந்தையோடு பணித்தள விஜயத்தில் பங்குபெற உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

**- அருட்திரு. ரூபன் சாமுவேல் &**
**திருமதி. மரகதமணி ரூபன்**

## அறுவடை நாயகரிடம் சிறப்பு ஜெபம்

"...எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்."
(லூக். 10.2)

# ‘பணித்தள விஜயத்தின் முன்னோடி’

## அருள்திரு. J. வின்பிரட் அண்ணன் அவர்கள்

அருள்திரு. வின்பிரட் அண்ணன் அவர்கள், நமது இயக்கத்தின் ஒரு மூத்த ஓய்வுப் பெற்ற மிஷனெரி ஆவார். இவர் பல வருடங்களாக நமது இயக்கத்தின் விரிவுப்பணியிலும், தலைமைச்செயலக நிர்வாகத்திலும், ஜெபக் குழுத்தலைவர்களைப் பயிற்றுவிப்பதிலும் ஈடுபட்டு வந்தார். வடஇந்தியப் பிரயாணம் பற்றி அதிக தகவல்கள் அறிந்திராத அந்நாட்களில், இந்திய ரயில்வேயில் தொடர்பிரயாண (Onward travel) கணினி வசதிகள் இல்லாத காலங்களில், இவர் இந்திய தேசம் முழுவதுமுள்ள நமது பணித்தளங்களை விஜயம் செய்வதற்கான திட்டங்களை அறிமுகப்படுத்தியதோடு, அதை தென்இந்திய ஜெபக்குழுத் தலைவர்கள் மற்றும் ஊழியத்தைத் தாங்குவோர் மத்தியில் நடைமுறைபடுத்தினார். ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் வடஇந்தியாவிற்குப் பயணம் செய்வதற்கு உகந்த காலசூழ்நிலை காணப்படுவதால், பணித்தள விஜயத்தைத் துல்லியமாகத் திட்டமிட்டு அநேகரைப் பணித்தளங்களுக்கு அழைத்துச் சென்று ஊக்குவித்ததின் விளைவாக, இந்நாட்களில் ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக்கானவர்கள். குழுகுழுவாகப் பணித்தள விஜயம் செய்வது, நமது ஊழியத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் ஏதுகரமாயிருக்கிறது.

**அருள்திரு. வின்பிரட் அண்ணன் அவர்கள், தனது பணித்தள விஜய ஆரம்ப நாட்களை இவ்வாறாக நினைவு கூருகிறார்-**



“நமது இயக்கத்தின் முன்னாள் பொதுச்செயலாளர் சகோ. பேட்ரிக் ஜாஷ்வா அண்ணன் அவர்கள், தென்னிந்தியாவிலுள்ள நமது ஜெபக்குழு நண்பர்களை வடஇந்தியாவிலுள்ள பணித்தளங்களுக்கு அழைத்துச் சென்று மிஷனெரிகளோடும் இளம் விசுவாசிகளோடும், பணித்தளத்தில் தேவன் நல்ல ஆத்தும அறுவடையைத் தரும்படி உபவாசித்து ஜெபிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்கள். எனவே, முதன்முதலாக 1978-ம் ஆண்டு நான் நமது ஜெபக்குழுத்தலைவர்களை உத்தரப்பிரதேசத்திலுள்ள வடஇந்திய முதல் பணித்தளமான பஸ்திக்கும், பின்னர் கோண்டாவிற்கும் ரயிலில் அழைத்துச் சென்று உபவாசித்து ஜெபித்தேன். மேலும், நமது தேசத்தின் அமைதி மற்றும் பாதுகாப்பிற்குச் சவாலாகக் காணப்பட்ட அயோத்தியாவிற்காக உத்தரப்பிரதேசத்தின் சில பகுதிகளுக்குச் சென்று ஜெபித்தோம்.

ரயில்பிரயாண செலவுகளைக் குறைப்பதற்காக, சுற்றுப்பிரயாண (Circular journey ticket) டிக்கெட்டுகளை வாங்கிக் கொண்டோம். பணித்தள பிரயாணங்களின்போது நமது மிஷனெரிகளான அருள்திரு. தேவவரம் சாம்ராஜ் மற்றும் அருள்திரு. இஸ்ரவேல் தேவதாஸ் அவர்கள், அநேக பணித்தளங்களை நாங்கள் விஜயம் செய்வதற்கும்,

தங்குவதற்கும் நல்ல ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். 2001-ம் ஆண்டு ஜனவரி 26-ம் தேதி, குஜராத்திலுள்ள காந்திதாம் என்கிற பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டபோது, நாங்கள் குஜராத் பணித்தள விஜயத்தில் இருந்த நாட்களை மறக்கவே முடியாது. தேவன் எங்கள் குழுவினரையும், மிஷனெரிகள் மற்றும் திருச்சபைகளையும் அற்புதமாக எல்லாத் தீங்கினின்றும் விலக்கிக் காத்தார்.

ஜனவரி 2002-ல் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களும், தந்தை பெர்க்மான்ஸ் அவர்களும் குஜராத்திலுள்ள பிப்பள்வாடா பணித்தளங்களை விஜயம் செய்து, அங்கு தேவன் கூட்டம்கூட்டமாகத் திரளான ஜனங்களை தமது மந்தையில் சேர்த்திருப்பதைக் கண்டு வியந்து தேவனுக்கு மகிமை செலுத்தினார்கள்.

போதுமான நவீன தகவல் தொடர்பு வசதிவாய்ப்புகள் ஏதும் கிட்டியிராத காலங்களிலேயே நமது பணித்தளங்களை விஜயம் செய்வதற்காக தேவன் நமது இயக்கத்தின் நண்பர்களை வழிநடத்தி, அதை செயல்படுத்துவதற்கான யுக்திகளை நல்கியமைக்காக தேவனை அதிகம் ஸ்தோத்தரிக்கிறேன். நமது ஜெபக்குழுத்தலைவர்களும், நண்பர்களும் இந்நாட்களில் இவ்வூழியப் பணித்தள விஜயத்தை நமது இயக்கத்தின் வளர்ச்சிப் பணிகளுக்காகப் பெருமளவு மிகச்சிறப்பாக நடைமுறைப்படுத்தி வருவதைக் கண்டு அவர்களைப் பாராட்டுவதோடு “அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை பண்ணலாம்?” (சகரியா 4:10) என உணர்ந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். தேவனுக்கே மகிமை!




**தாங்கும் மாநிலங்களுக்கான சிறப்பு ஜெப நாட்கள்**

**அக்டோபர் 1 முதல் 31 வரை**

நாம் தாங்கும் மாநிலங்களுக்காக நமது ஜெபக்குழுக்களில் சங்கிலித் தொடர் மற்றும் சிறப்பு ஜெப நேரங்களை நியமித்து ஜெபிக்க அன்புடன் வேண்டுகிறோம். ஜெபக் குறிப்புகளுக்கு தங்கள் பகுதி முன்னேற்றப் பணி செயலர்களைத் தொடர்பு கொள்ளுங்கள். நன்றி!

ஜெபப் பிரிவு


**புது புத்தகம் அறிமுகம்**




**ஏழு திருச்சபைகள்**

ஆசிரியர் அருள்திரு. P. ஸ்டீபன் ஜாய்சன்

*வாங்கி பயனடையுங்கள்*

தொடர்பு :

9445115757 / FMPB 044-26570404



## பணித்தள விஜயம் செய்த

# ‘அனுப்புவோரின் அனுபவங்கள்’

மிஷனெரி ஊழியத்தின் வெற்றிக்கு ‘செல்வோரின்’ பங்கு எவ்வளவு முக்கியமோ, அதுபோல ‘அனுப்புவோரின்’ பங்கும் மிக முக்கியம். மிஷனெரி ஊழியத்தில் மூன்று விதங்களில் நமது ஈடுபாட்டைக் காட்டலாம். அதாவது – ‘போ, அனுப்பு அல்லது கீழ்ப்படியாதே’ என்று ஜாண் பைப்பர் என்கிற மிஷனெரிப்பணியியலார் கூறுகிறார். மிஷனெரி ஊழியத்தில் சிலரை தேவன் கலாச்சாரம் கடந்த ஊழியம் செய்யவும், சிலரை அவ்வூழியத்தை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்குவதற்காகவும் அழைக்கிறார். இந்த உறவைத்தான் அப்போஸ்தலனாகிய பவுல், “அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்?” (ரோமர் 10:15) என்று குறிப்பிடுவதைப் பார்க்கிறோம். இந்தச் செல்லுவோர், அனுப்புவோர் இருவரும் அடையக்கூடிய பலனைத்தான் பவுல், பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தில் ‘கிருபையில் பங்குள்ளவர்கள்’ (பிலி.1:7) எனக் குறிப்பிடுவதைப் பார்க்கிறோம்.



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் மிஷனெரிகளை அனுப்பித் தாங்குவோர் வருடமொருமுறை நேரடியாகப் பணித்தளங்களுக்குச் செல்லுவது வழக்கம். இந்தப் பணித்தள விஜயத்திற்கு இரு முக்கிய நோக்கங்கள் உண்டு – 1. மிஷனெரிகளை நேரடியாகக் கண்டு அவர்களையும், அவர்களது ஊழியங்களையும் உற்சாகப்படுத்துவது! 2. அங்குள்ள ஊழிய விளைவுகளை அப்பணிக்கென ஜெபிக்கும், கொடுக்கும் மக்கள் மத்தியில் கூறி அவர்களை இப்பணியில் மேலும் ஈடுபட ஊக்குவிப்பது.

*கடந்த பல ஆண்டுகளாக பணித்தளங்களுக்கு நேரடியாகக் குழுவாக விஜயம் செய்து வந்த நமது ஜெபக்குழுத்தலைவர்கள் கொடுத்த அறிக்கைகளிலிருந்து சில குறிப்புகளை தேவனுக்கு மகிமையாகவும், இன்னும் அநேகரை இப்பணியில் ஊக்குவிப்பதற்காகவும் கீழே தருகிறோம்–*

சென்னை – தாம்பரம் பணிமாவட்டத்திலிருந்து: மத்தியப்பிரதேசத்திலுள்ள சிரியா, கர்கோன் பணித்தளங்களில், தேவன் நமது மிஷனெரிகளின் மூலமாகப் பல வியாதிகளில் சிக்கித்தவிக்கும் மக்களை விடுதலையாக்கி அவர்களை விசுவாசிகளாக்கியிருப்பதைக் காண முடிந்தது. ஒருமுறை கூட பள்ளி செல்லாத சுதேச ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் வேதாகமத்தைச் சரளமாக வாசிப்பதையும், மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதையும் கண்டு தேவனைத் துதித்தோம். (அறைகூவல், டிசம்பர் 2019)

நாசரேத் பணிமாவட்டத்திலிருந்து: ஆந்திரப்பிரதேசத்திலுள்ள பணித்தளங்களைப் பார்வையிட்ட நாட்களில் அங்குள்ள கிராமங்களுக்குச் சென்று சுவிசேஷ கைப்பிரதிகள் கொடுத்தோம். எதிர்ப்பு தெரிவித்த மக்களுக்காக ஜெபித்துவிட்டு, அங்குள்ள இஸ்லாபுரத்தில் ஆலயம் சீக்கிரம் கட்டவேண்டுமென தீர்மானித்து வந்தோம். (அறைகூவல், ஜனவரி 2017)

விருதுநகர் மாவட்டம் – சிவகாசியிலிருந்து: ஜார்க்கண்ட் மாநிலத்திலுள்ள சந்தால் இனமக்கள் மத்தியில் நடைபெறும் ஊழியத்தைக் காணச்சென்றிருந்தபோது, அங்கு நடந்த ஆராதனை வேளையின்போது நமது இளம் ஏழை விசுவாசிகள் ஆலயத்திற்குத் தேவையான பொருட்களை காணிக்கையாகக் கொண்டு வந்திருந்ததைப் பார்க்கும்போது அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சி எங்களுக்குச் சவாலாக அமைந்தது! (அறைகூவல் ஜூலை 2017)

சென்னை – சாந்தோம் பிராந்தியத்திலிருந்து: தெலங்கானா மாநிலத்திலுள்ள பணித்தளங்களில் ஜெபத்தால் சுகம் பெற்றவர்கள், மரித்து உயிரோடெழுந்தவர் மற்றும் சுவிசேஷத்தால் மாற்றம் பெற்ற நக்சலைட்டுகளைப் பார்த்தபோது மிகவும் பரவசம் அடைந்தோம். அக்காட்சிகள் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்தின் வல்லமையை எங்களுக்கு மேலும் உணர்த்தியது! (அறைகூவல், நவம்பர் 2017)

பணித்தள விஜயம், கேரளாவில் நமது விரிவுப்பணி ஊழிய வளர்ச்சிக்கு மிகவும் ஆசீர்வாத மாக அமைந்துள்ளது. எங்களது பணித்தள விஜயக்குழுவிலிருந்து 4 பேர் தங்களை மிஷனெரிப்பணிக்கென அர்ப்பணித்து, அவர்களில் 2 பேர் நமது ஊழியத்தில் இணைந்தும் விட்டார்கள். (சகோ. C.S. ஐசாயா & திருமதி. பரிமளகுமாரி, FMPB – திருவனந்தபுரம்.)

சென்னை – திருவான்மியூர் பணிமாவட்டத்திலிருந்து: மத்தியப்பிரதேசத்திலுள்ள ஒரு மலைமேலிருக்கும் மக்கர்கேடா பணித்தளத்திற்குப் படகிலும், பின்னர் நடந்தும் சென்றமை, நமது மிஷனெரிகள் எவ்வளவு கடினமானப் பகுதிகளுக்குச் சென்று ஊழியம் செய்கிறார்கள் என அறிய முடிந்தது. நாங்கள் சென்ற இடங்களிலெல்லாம் கடினமான மலைப்பகுதிகள், பள்ளத்தாக்குகள், ஆறுகள், கொடிய விலங்குகள் மற்றும் கொடூர மனிதர்களைக் காண முடிந்தது. ஒரு பக்கம் ஆடு மாடுகள், இன்னொரு பக்கம் டுங்ராபீல் இனமக்கள் வாழும் வீடுகளில் நாங்கள் யாவரும் தங்கியது எங்களுக்கு ஒரு பெரிய சவாலாக அமைந்தது. (அறைகூவல், டிசம்பர் 2017)

நெல்லை மாவட்டம் – அம்பை, கடையம் பகுதிகளிலிருந்து: ஹிமாச்சல் பிரதேசத்திலுள்ள ராம்பூர் பணித்தளத்தின் மலைப்பாங்கான படகம்பா கிராமத்தில் நடந்த ஒரு இரவுநேர ஜெபக்கூடுகையில் நமது விசுவாசி ஒருவர் தன் சொந்த நிலத்தை ஆலயம் கட்டுவதற்காகக் கொடுக்க முன்வரவே, நாங்கள் அங்கு ஆலயம் கட்டுவோம் என்ற சவாலுடன் திரும்பி வந்தோம். (அறைகூவல், டிசம்பர் 2017)

சென்னை – அண்ணாநகர் பிராந்தியத்திலிருந்து: ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள ஆல்வார் சிறுவர் விடுதிக்குச் சென்று அங்குள்ள 47 ஆண்பிள்ளைகளைக் கிறிஸ்தவ ஒழுக்கத்தில் வளர்க்கவும், நல்ல முறையில் கல்வி பயிற்றுவிக்கவும் முனைப்போடு செயல்படுகிற நமது மிஷனெரிகளைக் கண்டு உளமார பாராட்டினோம். ராம்நகரிலுள்ள நகோமா கிராமத்தில் நடைபெற்ற சத்சங் கூட்டத்தில் இளம் விசுவாசிகள் பஞ்சாபி மொழியில் தேவனை உளமார ஆராதித்த காட்சி, எங்களுக்கு மிகவும் வியப்பாக அமைந்தது. (அறைகூவல், டிசம்பர் 2019)

கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து: அஸோம் மாநிலத்திற்குப் பணித்தள விஜயம் சென்றிருந்தபோது, மஜுலி விசுவாசிகளின் வைராக்கியம் நிறைந்த சாட்சி, குறிப்பாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதால் தங்களது குடும்பத்தார் மற்றும் கிராமமக்களிடமிருந்து எவ்வளவு எதிர்ப்பைச் சம்பாதிக்கிறார்கள் என உணர முடிந்தது. திரும்பி வரும்போது, பிரம்மபுத்திரா நதியைக் கடக்க 3 மணி நேரம் படகில் பயணிக்க வேண்டிய பிரயாணத்தை அபாயகரமான வெள்ளப்பெருக்கால் 9 மணிநேரமாகக் கடந்து வந்தது, தேவப்பணியில் இன்னும் நாங்கள் அதிகமாகச் செயல்படவேண்டுமென தூண்டிற்று. (அறைகூவல், டிசம்பர் 2017)

கடலூர் மாவட்டம் – பாண்டிச்சேரியிலிருந்து: இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பணித்தளங்களைப் பார்வையிடும்போது, அங்குள்ள இளம் விசுவாசிகளோடு தேவனை ஆராதனை செய்தது எங்களது ஆவிக்குரிய வாழ்விற்கு மிகவும் சவாலாக அமைந்தது. பின்னர் வரும் வழியில் ஜான்சியிலுள்ள மிஷனெரிகள் பயிற்சி மையத்தில் பயிற்சி பெறும் இளம் மிஷனெரிகளிடம் கிடைத்த ஐக்கியத்தில், அவர்களின் எதிர்கால ஊழியங்களுக்காக ஜெபிக்க வேண்டுமென்ற உந்துதலைப் பெற்றோம். (அறைகூவல், டிசம்பர் 2017)

கோயம்புத்தூரிலிருந்து: பஞ்சாப் மாநிலத்திலுள்ள புத்லாடா மற்றும் பரித்கோட் பணித்தளங்களில் நமது மிஷனெரிப்பணிகளைப் பற்றி நன்கு அறிந்து கொண்டு, ஊழியத்தேவைகளைப் பகிர்ந்துகொள்ள பாரத்துடனும், வாஞ்சையுடனும் திரும்பி வந்தோம். (அறைகூவல், ஜனவரி 2020)

சென்னை – ஊரப்பாக்கம் மற்றும் சென்னை வேளாண்மை பொறியியல் துறை ஜெபக்குழுவினர்கள்: மகாராஷ்டிராவிலுள்ள எட்டப்பள்ளி பணித்தளத்தில் விசுவாசிகளின் சாட்சியையும், கடினமான இப்பகுதிகளில் எதிர்ப்புகளின் மத்தியில் ஆலயங்கள் எழுப்பப்பட்ட சரித்திரங்களையும் கேட்டு தேவனை மிகவும் துதித்தோம். இப்பணித்தளத்தில் நமது மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர்களின் அர்ப்பணிப்பு, தேவசித்தம் செய்வதில் உறுதி, சோராது அயராது செய்யும் ஆத்தும ஆதாயப்பணியில் எதிர்ப்புகளை எதிர்கொள்வதில் அவர்களின் வைராக்கியம் ஆகியவைகள் எங்களை மிகவும் வியக்க வைத்தது. எங்களால் இயலாததை நமது மிஷனெரிகள் செய்துவரும் இந்த இராஜரீக தேவப்பணியில் விவரிக்க இயலாத விளைவுகளை தேவன் நல்க தொடர்ந்து ஜெபிக்கிறோம். (அறைகூவல், ஜனவரி 2020)

2007-ம் ஆண்டு ஜார்க்கண்டிற்கு நாங்கள் முதன்முதலாகப் பணித்தள விஜயம் செய்யும்போது டாக்டர். வில்செட் குடும்பம் எங்கள் குழுவில் இருந்தது. அவ்விஜயம், டாக்டர். வில்செட் அவர்களை அம்மக்கள் மத்தியில் மருத்துவப்பணியாற்ற அர்ப்பணிக்க வழிநடத்தியதால், கடந்த சில ஆண்டுகளாக அவர்கள் அங்கு மருத்துவப்பணியாற்றி வருகிறார்கள். மேலும், திருமதி. பொன்னம்மா ஆபிரகாம் அவர்களின் பணித்தள விஜயம் அவர்களை கௌரவ விரிவுப்பணி செயலராக நமது ஊழியத்தில் செயல்பட வழிநடத்தியது. (அருள்திரு. வாவச்சன் & திருமதி. லிஸி வாவச்சன், FMPB விரிவுப்பணி செயலர் – கேரள மண்டலம்)

சென்னை – அம்பத்தூர் மற்றும் திருமுல்லைவாயில் பகுதிகளிலிருந்து: மகாராஷ்டிரா விலுள்ள பெயிண்ட் பணித்தளத்தைப் பார்வையிடும்போது அங்கு ஒரே நாளில் புதிதாக 30 நபர்கள் கிறிஸ்துவை அறிக்கை செய்து திருச்சபையில் இணைந்த காட்சி, எங்களுக்கு மிகவும் சவாலாக அமைந்தது. அங்கு மரித்துப்போன சிறுவன் ஜெபத்தினால் உயிர்பெற்று சாட்சியாக வாழ்வதையும், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட மந்திரவாதியையும் கண்டு தேவனைத் துதித்தோம். (அறைகூவல், டிசம்பர் 2019)

2018 மார்ச் மாதத்தில் காக்கிநாடா மற்றும் விசாகப்பட்டினத்தைச் சேர்ந்த போதகர்கள் மற்றும் ஊழிய ஆதரவாளர்கள் குழு: சந்தால், மால்பஹாடியா மற்றும் மால்தோ பணித்தளங்களுக்கு விஜயம் செய்தபோது நமது இளம் விசுவாசிகளின் ஆவிக்குரிய மற்றும் சமுதாய மேம்பாட்டிற்காக நமது மிஷனெரிகளின் கடின பிரயாசத்தைக்கண்டு அவர்கள் மிகவும் உந்துதல் பெற்றனர். இதன் விளைவாக, ஒவ்வொரு ஆண்டும் குழுவாகப் பணித்தளங்களை விஜயம் செய்வதுமட்டுமல்லாமல், மால்தோ பிள்ளைகளுடைய கல்வியின் மேம்பாட்டிற்கான ஆதரவைப் பெருக்குவதற்காக கார்னிவெல்-ஐ நடத்தி வருகிறார்கள். தேவனுக்கே மகிமை! (சகோ. JBV பிரசாத், விரிவுப்பணி செயலர், ஆந்திரப் பிரதேசம்)

ஈரோடு மாவட்டத்திலிருந்து மத்தியப்பிரதேசத்திலுள்ள கால்வா பணித்தளத்தில் நமது மிஷனெரிகளின் ஊழிய அனுபவம், எதிர்ப்புகளைச் சந்திக்கும் சாட்சிகள் யாவையும் கேட்டு கண்ணீருடன் அப்பணிகளுக்காக ஜெபிக்கத் தீர்மானித்தோம். பின்னர் பஜார் குதிரா என்கிற இடத்திற்குப் பல மலைகளினூடே பயணித்தது, எங்களை மெய்சிலிர்க்க வைத்தது. அங்கு வைத்து நடைபெற்ற உபவாசஜெபக்கூடுகை எங்களனைவரையும் அசைத்தது. பின்னர் பால் பணித்தளத்திலுள்ள பிப்போரோ கிராமத்தில் நமது ஜெபத்தினால் ஏற்பட்ட ஊழிய ஆசீர்வாதங்களைக் கண்டு தேவனை மனதார துதித்தோம். (அறைகூவல், பிப்ரவரி 2018)

கன்னியாகுமரி மாவட்டம் – கருங்கலிலிருந்து: குஜராத் மாநிலத்திலுள்ள பாண்டுவெல் என்ற இடத்தில் நமது ஜெபங்களின் விளைவாக வார்லி, குக்னா ஆகிய இனமக்கள் மத்தியில் தேவன் தந்துவரும் மாபெரும் ஆத்தும அறுவடை, எங்களை மிஷனெரிப்பணிக்கென கண்ணீருடன் அதிக ஊக்கமாக ஜெபிக்கவும், செயல்படவும் தூண்டிற்று. (அறைகூவல், டிசம்பர் 2019)

மதுரை மாவட்டத்திலிருந்து: ஒடிசா மாநிலத்திலுள்ள ஜஷிப்பூர் பணித்தளத்திற்குச் சென்று சாக்டி சிறுவர் விடுதியைப் பிரதிஷ்டை செய்து, பல புதிய தீர்மானங்களை எடுக்க தேவன் வழிநடத்தினார். (அறைகூவல், டிசம்பர் 2019)

திருவண்ணாமலை, வேலூர் மற்றும் வாலாஜாபாத் ஆகிய பகுதிகளிலிருந்து: ஹரியானா மற்றும் பஞ்சாப் மாநிலங்களிலுள்ள பணித்தளங்களில் பணித்தள விஜயம் செய்யும்போது, நமது மிஷனெரிகளின் ஜெபத்துடன் கூடிய கடின உழைப்பும், இளம் விசுவாசிகளின் கண்ணீர் மல்க வைக்கும் சாட்சிகளும் எங்கள் குழுவினரை அதிகமாக மிஷனெரிப்பணிக்கென ஜெபிக்கவும், கொடுக்கவும் ஊக்கப்படுத்தின. (அறைகூவல், டிசம்பர் 2019)

திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து: அஸோம் மாநிலத்தின் நாராயண்பூர் பணித்தளத்தி லுள்ள விசுவாசிகளின் பாடல்கள், சாட்சிகள், மிஷனெரிகளின் ஊழியப்பகிர்வு எங்களை ஆழமான அர்ப்பணிப்பிற்கு நேராக வழிநடத்தியது. மஜுலி பணித்தளத்திலுள்ள விசுவாசிகளுடன் ஞாயிறு ஆராதனையில் கலந்து கொண்டபோது, மிஷனெரிப் பணிகளுக்காக அதிகமாக ஜெபிக்கவும், கொடுக்கவும், செயல்படவும் வேண்டுமென தீர்மானித்தோம். (அறைகூவல், டிசம்பர் 2018)

ஜார்க்கண்ட் மாநிலம், தெலோ பணித்தளத்தில் வைத்து நடந்த விசுவாசிகளின் மேளாவில் சுமார் பத்தாயிரத்திற்கும் அதிகமான இளம் விசுவாசிகள் கலந்துகொண்டு தேவனை ஆராதித்த விதம் எங்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தையும், மகிழ்ச்சியையும் அளித்தது. இந்த மேளாவிற்கான அனைத்துச் செலவீனங்களையும் விசுவாசிகளே பொறுப்பெடுத்து நடத்திய விதம் எங்களுக்கு மிகுந்த சவாலாக இருந்தது. மிஷனெரிகளின் தியாகமான வாழ்க்கை, விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்வின் செயல்பாடு எங்களுக்கு மிகச் சவாலாக இருந்தது. (அறைகூவல், ஏப்ரல் 2018)

பெங்களூரு பட்டணத்திலிருந்து கடந்த 12 வருடங்களாக அநேகப் பணித்தளங்களுக்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நாங்கள் முதன்முதலாக ஹிமாச்சலப்பிரதேசத்திலுள்ள பணித்தளங்களைப் பார்க்கும்போது, எனக்கு மனதில் எழுந்த சவால் என்னவெனில், ‘இவ்வாறு எந்தச் சாலை வசதிகளுமற்ற மலைப்பாங்கான இடங்களில் எவ்வளவு வல்லமையாக ஊழியங்கள் நடைபெறுகிறது. நாமும் ஏன் அருகாமையிலுள்ள அறியப்படாத மக்கள் மத்தியில் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லக் கூடாது’ என்பதே. அதன் விளைவு, நாங்கள் இவ்வூழியத்தைத் தாங்குவதுமட்டுமில்லால், கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக சுவிசேஷப்பணியை 88 கிராமங்களில் அறியப்படாத மக்கள் மத்தியில் குழுவாகச் செய்துவருகிறோம். ஆம், FMPB ஊழியங்கள் எங்கள் கண்களைத் திறந்தது! (போதகர். எபநேசர் மனோகர், யூத் காஸ்பல் மிஷன், பெங்களூரு)

தூத்துக்குடி மாவட்டம் வடக்குப்பிராந்தியத்திலிருந்து: மத்தியப்பிரதேசத்திலுள்ள தட்கோன் பணித்தளத்தின் அடர்ந்த காடு மற்றும் மலைப்பகுதிகளில் வாழும் மக்கள் மத்தியில் சுவிசேஷம் பரவியிருப்பது, எங்களுக்கு மிகவும் சவாலாக அமைந்தது. மிஷனெரிப்பணிகளுக்காகப் பாரத்துடன் ஜெபிப்போம் என நாங்கள் தீர்மானித்ததுடன், நாங்களும் எங்கள் பகுதியில் ஒரு கிராமத்தைத் தத்து எடுத்து சுவிசேஷ ஊழியம் செய்வோம் என்றும் தீர்மானித்தோம். (அறைகூவல், ஜனவரி 2018)

வால்பாறை பணிமாவட்டத்தின் சார்பாகப் பஞ்சாப் மாநிலத்திலுள்ள பணித்தளங்களைப் பார்வையிட்டபோது, அங்கு சுவிசேஷத்திற்குத் திறந்தவாசல் இருப்பதைக் காணமுடிந்தது. நம்முடைய மிஷனெரிகள் மூலமாகத் திரளான மக்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் வந்திருப்பது, எங்களை மிகவும் மெய்சிலிர்க்க வைத்தது. ஆலயம் இல்லாமல் விசுவாசிகள் திறந்த வெளியில் ஆராதனை செய்தது, எங்களை அங்கு அநேக ஆலயங்கள் எழும்ப வேண்டுமென ஜெபிக்கத் தூண்டியது. (அறைகூவல், நவம்பர் 2018)

டோனாவூர் ஜெபக்குழுவின் சார்பாகப் பெரியமலை பணித்தளங்களை விஜயம் செய்யும்போது, அதிகமாக ஆத்துமபாரம் பெற்றதுடன், ஜெபக்குழுக்களை உருவாக்கவும், திருவீதி கிராமத்தில் ஒரு ஆலயத்தைக் கட்டியெழுப்பவும் தீர்மானித்தோம். (அறைகூவல், ஜனவரி 2019)

பாண்டிச்சேரி வாலிபர்குழுவின் சார்பாக கர்நாடகாவிலுள்ள ஹுப்ளி பணித்தளத்திற்குச் சென்றபோது நமது மிஷனெரிகள் பகர்ந்து கொண்ட ஊழியச்சவால்கள், தேவராஜ்ய பணிக்கான எங்கள் பொறுப்பு மற்றும் அர்ப்பணத்தைக் குறித்து மீண்டும் எங்களைச் சிந்திக்க வைத்தது. முதல் தலைமுறை கிறிஸ்தவர்களோடு நல்ல ஐக்கியத்தை நல்கிய தேவனைத் துதிக்கிறோம். (அறைகூவல், ஜனவரி 2019)

கடந்த இரண்டு வருடங்களாக மட்டும் தொற்றுநோயின் காரணமாகப் பணித்தள விஜயங்கள் நடைபெறவில்லையெனினும் வருகிற நாட்களில் தேவன் இம்முக்கியமானப்பணி நடைபெறக்கூடிய சாதகமான சூழ்நிலைகளைத் தரவும், இன்னும் பணித்தளங்களைப் பார்த்திராத ஊழிய நண்பர்கள் கூடிய சீக்கிரம் அப்பேர்ப்பட்ட வாய்ப்புகளைத் தேடி கண்டுபிடிக்க தேவனால் வழிநடத்தப்படவும் ஜெபிப்போம்.

# ஆராதனை அறை வாடகைக்கான நிதித்தேவையைச் சந்திக்க முன்வாருங்கள்



கிறிஸ்துவைப் பற்றி சற்றும் அறியாமல் மூடப்பழக்கவழக்கங்களிலும். பாவ அடிமைத் தனத்திற்குள்ளும் சிக்கிக் கிடக்கும் நம் பாரத மண்ணின் மாந்தர்களைக் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தி, அவர்களை ஒழுக்க சீலர்களாக்குவதற்கு நமது மிஷனெரிகள் கிராமம் கிராமமாகச் சென்று சுவிசேஷம் அறிவித்து வருகின்றனர். அப்படிப் புதிதாக கிறிஸ்துவுக்குள் வந்தவர்கள் அக்கம்பக்கத்திலுள்ளவர்களுக்குத் தங்கள் சாட்சிகளைப் பகிர்ந்துகொள்ளும்போது அவர்களும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை மேலும் கேட்க ஆசையாய்க் கூடி வருகின்றனர். இப்படிக் கூடி வருகிறவர்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியடையவும், கிறிஸ்துவில் வேரூன்றவும் அவர்களுக்கு வேதத்தின் நெறிமுறைகள் கற்றுக்கொடுக்கப்படுகிறது. இப்படி 10 முதல் 20 பேர் வரைக் கூடும்போது அவர்களும் தேவனை ஆராதிக்க வேண்டுமென்று நமது மிஷனெரிகள் விருப்பம் கொண்டு, அந்தந்த இடங்களில் சிறு ஆராதனைக்குழுக்களை ஆரம்பித்து மரத்தடிகளிலும், வீடுகளிலும் ஆண்டவரை ஆராதிக்க வழி வகுக்கின்றனர். சில கிராமங்களில் இப்படி ஆராதித்து வருபவர்களின் அலைவட்டம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கும்போதோ அல்லது சீதோஷ்ண நிலை மாற்றங்களினாலோ, அல்லது மத அடிப்படைவாதிகளின் அச்சுறுத்தல் களினால் வீடுகளைத் திறந்துகொடுக்க விசுவாசிகள் ஐயப்படுவதினாலோ ஒழுங்காக ஆராதனை நடத்த தடை ஏற்படுவதினால் அக்கிராமங்களில் ஆலயங்கள் கட்டுவதற்கு முன்பாக அறை ஒன்றை வாடகைக்கு எடுத்து ஆண்டவரை ஆராதிக்கின்றனர். இப்படி ஆராதனை அறை வாடகைக்கும், ஆராதனைக்கான மின்சாரச் செலவு போன்ற பிற தேவைகளுக்கும் கணிசமான பணம் செலவு செய்யப்படுகிறது.

**2021 – 22 ஆம் நிதி ஆண்டில் ஆராதனை அறை வாடகைக்கான நிதித் தேவை ரூ.21,14,903/–** என்று இயக்கமாகத் தீர்மானித்துள்ளோம். தனி நபராகவோ, குடும்ப மாகவோ, திருச்சபையாகவோ அல்லது ஜெபக்குழுக்களாகவோ இவ்வூழியத்தை ஆதரிக்க முன்வருவீர்களானால் உங்கள் மூலம் பல ஆத்துமாக்கள் கிறிஸ்துவை விடுதலையோடு ஆராதிக்கவும், தங்கள் தலைமுறைகளும் கிறிஸ்துவை ஆராதிக்கவும், கிறிஸ்தவ ஒழுக்க நெறிக்குள் வரவும் ஏதுவாகும்.

இவ்வூழியங்களில் ஈடுபடும் ஊழியர்கள் மற்றும் சுதேச ஊழியர்களின் பாதுகாப்பிற்காக ஜெபியுங்கள். மத அடிப்படைவாதிகள் மூலம் ஆராதனைக்குழுக்களுக்கு இடையூறுகள் நேரிடாமலிருக்க ஜெபியுங்கள். விசுவாசிகளும் ஆவிக்குரிய ஜீவியத்தில் அனுதினமும் வளரவும், கிறிஸ்துவில் வேரூன்றவும் ஜெபியுங்கள்.

**மேலும் கூடுதல் விபரமறிய விரும்பினால் உங்கள் அருகில் வாழும் முன்னேற்றப்பணி செயலரையோ, கௌரவ முன்னேற்றப்பணி செயலரையோ அல்லது ஜெபக்குழுத் தலைவர்களையோ தொடர்பு கொள்ள பட்சமாய்க் கேட்கிறோம்.** – நிதித்துறை

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



நாகர்கோவில் ரூரல் பணிமாவட்டம் சாரதா நகரைச் சேர்ந்த திருமதி. கிரேஸ் சாம் அவர்கள், கடந்த 30.12.2020 அன்று கர்த்தருடைய மகிமைக்குள் பிரவேசித்தார்கள். இவர் பல ஆண்டுகளாக நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் ஜெபக்குழுத்தலைவியாக ஊழியம் செய்தவர். இவருடைய கணவர் திரு. சாம் பொன்னையா அவர்கள், நாகர்கோவில் ரூரல் பணி மாவட்டத்தின் கௌரவ முன்னேற்றப்பணி செயலாளராக ஊழியம் செய்து வருகிறார்கள். இவருடைய பிரிவினால் துயரத்திலிருக்கும் இவரது கணவர், மகள், மகன் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.



நாகர்கோவில் அர்பன் பணிமாவட்டம், ஈஸ்டாப் தெருவைச் சேர்ந்த திரு. டார்வின் ஜாண் அவர்கள், கடந்த 07.04.2021 அன்று கர்த்தருடைய மகிமைக்குள் பிரவேசித்தார்கள். இவருடைய மனைவி திருமதி. பிரமிளா ஜாய் நமது இயக்கத்தில் ஒரு ஜெபக்குழுத்தலைவியாக உள்ளார். இவர்கள் தங்கள் சார்பில் வட இந்தியாவில் ஒரு ஆலயம் கட்டிக்கொடுத்துள்ளார்கள். இவருடைய பிரிவினால் துயரத்திலிருக்கும் இவரது மனைவி, மகள் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.



திருமதி. நேசக்கனி அவர்கள், திருநெல்வேலியிலுள்ள பெருமாள்புரம் பகுதியில் ஜெபக்குழுத்தலைவியாக கடந்த பத்து ஆண்டுகள் ஆண்டவருக்காக தீவிரமாக பணி செய்தார்கள். தனது பகுதியில் நமது இயக்கத்தின் காரியங்களை சொல்லி அநேக பெண் ஜெபவீரர்களை உருவாக்கியவர்கள். ஒரு புது நபரையாவது ஒவ்வொரு மாதமும் கண்டுபிடித்து, ஜெபிக்க, காணிக்கை கொடுக்க ஊக்குவிப்பார்கள். இவர்கள் கடந்த 15.04.2021 அன்று தனது சுகவீனத்தின் நிமித்தம், 64-வது வயதில் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசித்தார்கள். இவரை இழந்து வாடும் இவரது அன்பு கணவர், மகன் மற்றும் மகள் குடும்பத்தினரின் ஆறுதலுக்காக ஜெபித்துக்கொள்வோம்.



திருமதி. விமலா கஸ்தூரிபாய் ஸ்டீபன் அவர்கள், திருநெல்வேலியிலுள்ள பழையப்பேட்டையில் அநேக பெண்களைக் கூட்டி, புதன்கிழமைதோறும் உபவாசம் இருந்து தேசத்திற்காக, ஊழியங்களுக்காக பாரத்தோடு ஜெபத்தை நடத்தி வந்தவர்கள். அதோடு, பழையப்பேட்டையிலுள்ள திருச்சபையில் பெண்களுக்குத் தலைவியாக இருந்து பெண்கள் கூடுகையை ஆரம்பித்து, அறைகூவல் பத்திரிக்கையை வைத்து ஜெபிக்கவும், கொடுக்கவும் கற்றுக்கொடுத்தார்கள். இவர்களது 71-வது வயதில் 28.04.2021 அன்று தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசித்தார்கள். இவர்களின் தியாகமான வாழ்வும், ஆழ்ந்த அர்ப்பணமும் பலருடைய வாழ்வைத் தொட்டது. இவர் விட்டுச் சென்றுள்ள இவரது அன்பு கணவர், மற்றும் பிள்ளைகளின் குடும்ப ஆறுதலுக்காக ஜெபித்துக்கொள்வோம்.



FMPB உடுமலைப்பேட்டை பகுதியின் ஜெபக்குழுத்தலைவர் திரு. ஹரன் மோகனசிங் அவர்கள், கடந்த 1990-ம் ஆண்டு முதல் 2015-ம் ஆண்டு வரை நமது ஊழியத்தில் ஜெபக்குழுத்தலைவராகப் பணியாற்றினார்கள். 13.05.2021 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். அவர்களின் மனைவி திருமதி. டெய்சி சுலோச்சனாவிற்கும், 4 மகள்கள் மற்றும் 6 பேரப்பிள்ளைகளுக்கும் தேவன் தமது ஆறுதலைத் தர ஜெபிப்போம்.



நாகர்கோவில் பணிமாவட்டம், ஆசீர்வாதம் காம்பவுண்டைச் சேர்ந்த திருமதி. ஞான மேரி அவர்கள், கடந்த 20.05.2021 அன்று கர்த்தருடைய மகிமைக்குள் பிரவேசித்தார்கள். இவர் நமது ஊழியத்தில் ஒரு மிஷனெரி மற்றும் ஒரு குழந்தை ஆதரவாளர். இவர் தன்னுடைய முதிர் வயதிலும்கூட நமது இயக்கத்தினுடைய அனைத்து உபவாச ஜெபக்கூடுகைகளிலும் ஒழுங்காகப் பங்கேற்றவர். இவருடைய பிரிவினால் துயரத்திலிருக்கும் இவரது பிள்ளைகள், பிள்ளைகளின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.



நாகர்கோவில் ரூரல் பணிமாவட்டம், களியங்காடு சர்ச் தெருவைச் சேர்ந்த திருமதி. செலஸ்டி ஜோஸ்லின் அவர்கள், கடந்த 21.05.2021 அன்று கர்த்தருடைய மகிமைக்குள் பிரவேசித்தார்கள். இவர் தன் வீட்டில் ஒழுங்காக ஜெபக்கூட்டங்களை நடத்தி ஊழியத்திற்காகப் பாரத்துடன் ஜெபித்து வந்தவர். அன்னாரின் பிரிவினால் துயரத்திலிருக்கும் இவருடைய இரண்டு பெண் பிள்ளைகள், ஒரே மகன் மற்றும் குடும்பத்தாரனைவருக்கும் தேவன் தாமே ஆறுதல் கொடுக்குமாறு ஜெபிப்போம்.



நாகர்கோவில் அர்பன் பணிமாவட்டம், நேசமணி நகர் மெயின் தெருவைச் சேர்ந்த திரு. ஞான மோகன் றாஸ் அவர்கள், கடந்த 21.05.2021 அன்று கர்த்தருடைய மகிமைக்குள் பிரவேசித்தார்கள். இவருடைய குடும்பத்தினர் ஒரு மிஷனெரியையும், ஒரு குழந்தையையும் தாங்கி வருகிறார்கள். இவருடைய பிரிவினால் துயரத்திலிருக்கும் இவரது மனைவி, பிள்ளைகள், பிள்ளைகளின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.



சகோ. S. ராஜேந்திரன் அவர்கள், சைதாப்பேட்டை முன்னேற்றப்பணி மாவட்டத்தில் ஒரு புதிய ஜெபக்குழு பகுதிக்குப் பொறுப்பாக இருந்து முன்னேற்றப்பணி செய்தார்கள். இவர் தன்னுடைய 65-வது வயதில் இதய பெலவீனத்தால் பாதிக்கப்பட்டு, கடந்த 21.05.2021 அன்று தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசித்தார். இவரது மகன் R. கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் நமது இயக்கத்தில் மிஷனெரியாக மேற்கு வங்காள மாநிலத்தில் தபான் பணித்தளத்தில் குடும்பமாகச் சுவிசேஷப்பணி செய்து வருகிறார். இவர் விட்டுச்சென்றுள்ள இவரது மனைவி, மகன், மகள் குடும்பங்கள் மற்றும் பேரப்பிள்ளைகளுக்கு தேவன் தாமே ஆறுதலையும் சமாதானத்தையும் கட்டளையிட ஜெபிப்போம்.



நாகர்கோவில் சவுத் பணிமாவட்டம், பொன்னப்ப நாடார் காலனியில் உள்ள திரு. பீட்டர் ராஜேஷ் அவர்கள், கடந்த 24.05.2021 அன்று கர்த்தருடைய நித்திய மகிமைக்குள் பிரவேசித்தார்கள். இவரது குடும்பம் ஒரு மிஷனெரியைத் தாங்கி வருகிறது. திரு. பீட்டர் ராஜேஷ் அவர்களைப் பிரிந்து துயரத்திலிருக்கும் இவருடைய தந்தை, தாய், மனைவி மற்றும் பிள்ளைகளின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.



நாகர்கோவில் அர்பன் பணிமாவட்டம், வெட்டூர்ணிமடம் வேதாந்தா தெருவிலுள்ள ஜெபக்குழுத்தலைவர் திரு. அரோன்சன் சந்திரா அவர்களின் மனைவி திருமதி. கஸ்தூரி சந்திரா அவர்கள், கடந்த 01.06.2021 அன்று கர்த்தருடைய நித்திய மகிமைக்குள் பிரவேசித்தார்கள். இவர் தனது கணவரோடு சேர்ந்து நமது ஊழியத்திற்கு மிகவும் உதவியாக இருந்தவர். இவரைப் பிரிந்து துயரத்திலிருக்கும் இவருடைய கணவர், ஒரே மகன், மருமகள், இரண்டு பேரப்பிள்ளைகள் ஆகியோருடைய ஆறுதலுக்காக ஜெபிப்போம்.



வில்லிவாக்கம் பணி மாவட்டம், சீயாளம் தெரு - ஜெபக்குழுத்தலைவர் திரு. தேவ பாக்கிய ரெஜி (வயது 76) அண்ணன் அவர்கள், கடந்த 09.07.2021 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவர் தனது பணியின் மத்தியிலும் மாதந்தோறும் மிகுந்த பொறுப்புடன் கிரமமாக காணிக்கை சேகரித்து அனுப்பி, ஊழியத்தை ஆதரித்து வந்தார். ஊழியர்களிடம் மிகுந்த பாசம் காட்டி உபசரிப்பதிலும், ஊழியம் செய்வதிலும் அதிக அக்கறை கொண்டவர். இவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளின் மனஆறுதலுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.



திரு. M. ஞானபிரகாசம் அவர்கள் (வயது 92), கடந்த 02.09.2021 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்கள். இவர் 1971 முதல் 1991 வரை சுமார் 20 ஆண்டுகள் திண்டிவனம் பகுதி ஜெபக்குழுத்தலைவராக இருந்து நமது ஊழியத்திற்குப் பெரும் ஆதரவைத் திரட்டியவர். இவருடைய முன் மாதிரியான வாழ்விற்காக தேவனைத் துதிக்கிறோம். இவருடைய மூன்று பிள்ளைகளின் குடும்பங்களையும் நமது ஜெபத்தில் நினைவு கூருவோம்.

## சீறிய சிறுத்தைபுலி!

குஜராத், அஹ்வா பணித்தளம், பவாரியா கிராம நமது விசுவாசி கைலாஷ்பாய் எரிவிறகு சேகரிக்கக் காட்டுக்குள் சென்றபோது, திடீரென ஒரு சிறுத்தைபுலி அவர் மேல் சீறிப் பாய்ந்தது. விறகு வெட்டுவதற்கென தன் கையில் வைத்திருந்த கோடாரியால் அவர் அந்த சிறுத்தையைத் தாக்கவே, அது காட்டுக்குள் ஓட்டமாக ஓடி மறைந்தது. எனினும், சிறுத்தைபுலியின் நகக்கீறல்கள் அவர் சரீரம் முழுவதும் பதிந்திருந்தபொழுதும், கர்த்தர் அவருடைய ஜீவனைப் பெரும் ஆபத்தினின்று பாதுகாத்தார். அல்லேலூயா!

## 1 அக்டோபர்
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. சுசீலா சாமுவேல்
திரு. யுவனேஷ் T.

# ஜம்மு

## ஆர். எஸ். புரா & அக்னூர்:
### டேவிட் அய்யனார் & மன்பிரீத் கௌர்

**துதிக்க:** புதிதாக 5 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 4 கிராமங்களில் புதிதாக நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகளில் அநேக பிள்ளைகள் கலந்து கொண்டு தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றனர். குல்லியன் கிராம நமது விசுவாசி நிராஜிற்கு ஹுண்டாய் கம்பெனியில் வேலை கிடைக்கவும், ரித்திகாவிற்கு வங்கியில் வேலை கிடைக்கவும் தேவன் உதவி செய்தார். கோட்டே கிராமத்தைச் சேர்ந்த 3 குடும்பங்கள் சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காட்டுகின்றனர். படியல் கிராம கலாவை மூல வியாதியிலிருந்தும், காதர்பூர் கிராம ஜான்வியைப் பக்கவாதத்திலிருந்தும், குல்தீப் குடும்பத்தினருக்கு நாள்பட்ட வைரஸ் தொற்றிலிருந்தும் தேவன் சுகம் கொடுத்தார். சினோர் கிராம அனுராதாவைப் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து விடுவித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது இப்பணித்தளத்தில் தேவனை ஆராதிப்பதற்குப் பொருத்தமான ஒரு இடம் கிடைக்க; ஆக்ரா சாக் கிராம சபீலால் பட்டேல் கோவிட்-19னின் அறிகுறியிலிருந்து விரைவாகப் பூரண சுகமடைய; சோகாலா கிராம மனோகர்லால் நெஞ்சு சளி தொற்றிலிருந்து குணமாக; சாக்ராய் கிராம சுனிதா மனநோயிலிருந்தும், சாக் தலாப் கிராம ராஜ்பாஞ்சம் தைராய்டு நோயிலிருந்தும் சுகமடைய; படியல் கிராம ராஜன், ஜெகதீஷ், சாக் தலாப் கிராம சுமன் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற; கோட்டே கிராம ராகேஷிற்கு நல்ல ஒரு வேலை கிடைக்க ஜெபிப்போம்.

## *எவ்வித மருத்துவ உதவியுமில்லாது பிறந்த அழகிய குழந்தை!*

*மகாராஷ்டிரா மாநிலம், டெக்கான் பிராந்தியம். எட்டப்பள்ளி பணித்தளத்திலுள்ள குட்ரி கிராமத்தில் தேவு துகா மற்றும் அவரது மனைவி பேபி துகா வசித்து வருகின்றனர். இவர்களுக்குத் திருமணமாகி 14 வருடங்கள் ஆகியும் குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தனர். கடந்த 2016-ம் ஆண்டு இவர்களுக்கு எதிர்பாராத விதமாக சுவிசேஷத்தைக் கேட்கும் வாய்ப்பு கிடைத்தது. உடனே இவர்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தங்களது விசுவாசத்தை அறிக்கையிட்டனர். அந்நாள் முதற்கொண்டு தவறாமல் ஆலய ஆராதனைகளிலும், ஜெபக்கூட்டங்களிலும் கலந்து கொண்டு சபையாரைத் தங்களுக்காக ஜெபிக்கக் கேட்டு கொண்டனர். அதன் பொருட்டு மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள், மூப்பர்கள் மற்றும் விசுவாசிகள் கூடி இவர்களுக்காக மிகவும் பாரத்தோடு ஜெபித்தனர். அற்புத அதிசயங்களைச் செய்யும் நமது தேவன் சபையாரின் ஊக்கமான ஜெபத்திற்குப் பதில் தந்து, கடந்த மாதத்தில் ஒரு அழகான குழந்தையைப் பெற்றெடுக்கச் செய்து இக்குடும்பத்தை ஆசீர்வதித்தார். பிரசவிக்கப் பண்ணுகிறவராகிய நமது தேவன், 14 ஆண்டுகளுக்குப் பிறகு எந்த ஒரு மருத்துவ உதவியும் இல்லாமல் கொடுத்த இக்குழந்தை ஆசீர்வாதம் மிகவும் ஆச்சரியமன்றோ! தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*

## 2 அக்டோபர்
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. வீரேந்திர குமார்
திரு. டேவிட்சன் ராஜாசிங்
திருமதி. சுனிதா வீரேந்திர குமார்
திரு. தேசாய் திலீப்பாய்

# ஹிமாச்சலப் பிரதேசம்

## ஹிமாச்சல் பிராந்திய அலுவலகம் :

**த்சாங்சே சங்தம் & சுச்சானோ**

**துதிக்க:** ரோஹ்ரு பணித்தளத்தில் வேதாகம கல்வித் திட்டத்தில் நமது விசுவாசிகள் 10 பேர் இணைந்துள்ளனர். நமது விசுவாசிகள் பங்கஜ் காய்கறி அங்காடி ஒன்றும், ராகேஷ் கோழி இறைச்சிக் கடை ஒன்றும் தங்கள் வாழ்வாதாரத்திற்காகப் புதிதாகத் துவங்க தேவன் கிருபை செய்தார். புதிய தொடர்பாளரான மாயா சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டுகின்றார். நமது விசுவாசிகள் திரிலோக், ஜாபிலால், ராம்காலி, தேஜ் பஹதூர், கங்கா ஆகியோரை ஜெபத்தின் பலனால் கோவிட்-19னிலிருந்து தேவன் சுகமாக்கினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாக்கன், மீரு கிராமங்களில் ஆராதனைக்குழுக்கள் ஆரம்பிக்க; நமது இளம் விசுவாசிகளுக்கு நல்ல வேலைவாய்ப்புகள் கிடைக்க; லால்ஸா, தான்ஸா, நிர்மண்ட், கௌரா மாஸ்னு, ஸர்பாரா, டெலாத் ஆகிய பகுதிகளில் சுவிசேஷத்திற்கான வாசல்கள் திறக்கப்பட; கேக்கார், பந்தால், நீத்தார் பகுதிகளில் உள்ள சபைகள் ஆவிக்குரிய வளர்ச்சியில் உயிர் மீட்சியடைய; தீபக், ஆஷா, அர்ஜுன் ஆகிய புதிய குடும்பங்கள் இயேசுவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; டியூனி, மோரா பகுதிகளில் ஆராதனை நடத்துவதற்கு நல்ல இடம் கிடைக்க; தேவேலி, ஸரஸ் கிராமங்களில் புதிதாக சபை ஆராதனைகள் துவங்கப்பட; இந்த மழைக்காலங்களில் ஏற்படும் நிலச்சரிவு, மேக உடைதல், திடீர் வெள்ளம் போன்ற சம்பவங்களில் தேவனுடைய பாதுகாப்பிற்காக; கிரண் குடும்பத்தினரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; நமது விசுவாசி நேகா ஊரடங்கு காலங்களில் தான் இழந்த வேலையை மறுபடியும் பெற்றுக்கொள்ள; நமது சுதேச ஊழியரின் மனைவி விதேஷ்குமாரி தைராய்டு நோயிலிருந்து சுகம் பெறவும் மழலைச்செல்வத் தினால் ஆசீர்வதிக்கப்படவும்; பாங்கல் விசுவாசிகள் எந்தவொரு தடையு மில்லாமல் கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தை தைரியமாய் அறிக்கையிட; தங்கள் குடும்பத்தினரை ஆராதனையில் கலந்துகொள்ள தடைவிதிக்கும் துளசிராம், சுரேந்திர குமார், மோத்திராம் ஆகியோரின் மனந் திரும்புதலுக்காக; நேர்வா கிராமத்தைச் சார்ந்த ஆஷு, மங்கத்ராம் ஷர்மா, ரமேஷ் மோக்தா, நந்த்லால், லலித், ராம்லால், ராம்பர், சக்குராம் அஜய்குமார், நரேந்தர், விஜய்சந்த், நாராயன் பகத், ஷிவ்கார், யசோதா, பூனம், சச்சின், பூபேஷ், கிரண், சத்யஜித், நாராயன் சிங் ஆகிய சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் இரட்சிக்கப்பட; கசாபட் பகுதியில் ஆலயம் கட்டப்பட ஜெபிப்போம்.

## 3 அக்டோபர்
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ராபின்சன் ஹஸ்தக்

### தானேதார்:
**உம் பியாக் லால் &**
**நியாங் கான் மான்**

**துதிக்க:** புதிதாக 12 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 9 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். விசுவாசிகளின் இடைவிடாத ஜெபத்தின் மூலம் தேவன் சோனியைப் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து விடுவித்தார். நமது விசுவாசி தீபக்கை பாம்பு கடியிலிருந்து பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நேபாள புதிய தொடர்பாளர்களின் மத்தியிலும், மேத்தா, தாக்கூர், சௌகான் மற்றும் ஷர்மா இனமக்கள் மத்தியிலும் சுவிசேஷத்திற்கான வாசல்கள் திறக்கப்பட; முஸ்கான் குடற்புண்களிலிருந்து சுகமடைய; நரேந்தாஸி மற்றும் பாரமணி புற்று நோயிலிருந்து குணமடைய ஜெபிப்போம்.

## பஞ்சாப்

### புத்லாடா பிராந்தியம் :
**கிருபா ரக்ஷனா பரே & ஷகினா**

**துதிக்க:** நமது உள்ளூர் விசுவாசிகள் பாய்ருபா கிராம சபை ஆராதனையில் பயன்படுத்துவதற்காக ஒலிவாங்கி ஒன்றை வாங்கிக் கொடுக்க முன்வந்துள்ளனர். சத்பால் சிங், குர்பிரீத் சிங் மற்றும் சூரஜ் சிங் ஆகியோரின் குடும்பங்களில் காணப்பட்ட குடும்பத் தகராறில் தேவன் சமாதானத்தைக் கொடுத்து ஆசீர்வதித்தார். கொடுதுனா கிராம விசுவாசி லவ்பிரீத் சிங்கின் தகப்பனார் திடீரென மரித்த தினிமித்தம் குடும்பத்திலுள்ள 5 நபர்களைக் காப்பாற்ற வேண்டிய இக்கட்டான சூழ்நிலை வந்தபோது, லவ்பிரீத் சிங்கிற்கு வங்கியில் ஒரு நல்ல வேலை கொடுத்து தேவன் ஆசீர்வதித்தார். வெளிப்புற சந்திப்பு சுவிசேஷப் பணியில் பர்ணாலா பணித்தளத்திலுள்ள இரண்டு சுவிசேஷ குழுக்கள் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. நமது தன்னார்வ ஊழியர் ஆஞ்சரேஷை காசநோயிலிருந்தும், பாய்ருபாவிலுள்ள அர்ஸ்தீர் சிங்கை குடிப்பழக்கத்திலிருந்தும், கொடுதுனா கிராம கிரண் கௌரைத் தீய ஆவியின் பிடியிலிருந்தும் விடுவித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆஷ்பல்கலான், கராடி, கரேடா, ஜாங்கியானி, குணாஸ், ஜியாண்ட், ரூடிகலான், குடிபின்டி ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் உட்புக வாய்ப்புகள் கிடைக்க; ஷைனா, டிக்ரிவாலா ஆகிய கிராமங்களில் மூடப்பட்டுள்ள நமது கிளை மையங்கள் மீண்டும் திறக்கப்பட; நமது விசுவாசிகள் சஞ்சு, யோகன் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட; பல்லியவாலா கிராம விசுவாசிகளான ராஜாசிங், கோல்டிசிங், பாபுசிங் ஆகியோருக்கு நல்ல வாழ்க்கைத்துணைகள் அமைய; ரீனாவின் குடும்பப் பிரச்சனை சுமூகமாகத் தீர்க்கப்பட; நமது இளம் வாலிப விசுவாசிகள் உற்சாகமாய்ச் சபை நிகழ்ச்சிகளில் பங்குபெற; கொடுதுனா கிராமத்திலுள்ள நீலம் ராணி, சாணி, கரண், மோஸிமி, நிர்மலா தேவி ஆகியோர் இழுப்பு வியாதியிலிருந்தும், குருமால் சிங் பக்கவாதத்திலிருந்தும் குணமடைய; சோனி மண்டிர் கிராம பேபி கௌர் சமீபத்தில் தன் கணவரை இழந்ததினிமித்தம் ஏற்பட்ட மன அழுத்தத்திலிருந்து தேவன் தாமே அவர்களை ஆறுதல்படுத்தி பெலப்படுத்த ஜெபிப்போம்.

## 4 அக்டோபர் திங்கள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. தனேதி உத்தமஸ்ரீ இஸ்ரேல்

### மலோட்: ஜாண்சன் & பெனிட்டா

**துதிக்க:** நமது விசுவாசி பரம்ஜீத் படிக்காத வராக இருந்தாலும் வேதாகமத்தை வாசிக்க முயற்சி செய்தார். நமது விசுவாசிகளை விமர்சித்த ராகுல் திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டு, நமது விசுவாசிகளிடமும் தேவனிடமும் தான் செய்த தவறுக்காக மன்னிப்பு கேட்டபோது அற்புதவிதமாக குணமாக்கின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜஸ்வீந்தர், ராமன் குடும்பங்களில் சமாதானம் நிலவ; குர்பீரித் கௌர் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து பாதுகாக்கப்பட; நமது ஊழியம் விரிவாக்கப்படுவதற்குத் தேவையான சுவிசேஷகர்கள், தன்னார்வ ஊழியர்கள் பணித்தளங்களில் பணிய மர்த்தப்பட; ராஜ்குமார், சுனிதா, சுஸ்மா, ஆர்த்தி, தீப்சந்த் மற்றும் சிம்ரன் ஆகியோர் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து விரைவில் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

### அம்ரித்சர்:

### கொன்கனி சம்பத்பாய் & ஆஷாபேன்

**துதிக்க:** இரண்டு நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். நமது விசுவாசிகள் ஜஸ்பால்சிங், ஜஸ்வீந்தர் சிங் தங்களுடைய வீடுகளை மறுசீரமைத்து புதுப்பிக்க தேவன் கிருபை செய்தார். நமது விசுவாசி மன்பீரித் சிங்கிற்கு நடந்த அறுவை சிகிச்சையின்போது நாம் ஜெபித்த ஜெபத்தின் பலனால் தெளிவான கண்பார்வை கிடைக்க தேவன் உதவி செய்தார். ராஜசன்ஸி கிராமத்தினர் தங்கள் விசுவாசத்தை கிறிஸ்து வில் அறிக்கையிடும் வண்ணமாக ஞானஸ் நான தொட்டி ஒன்றைக் கட்டுவதற்கு தேவன் உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது உள்ளூர் சபை ஊழியர் தர்ஷன் சிங் சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து குணமடைய; கரம்சிங், அனிதா, மஞ்சீத், சரப்ஜித் கௌர், பீரித்பால் சிங் ஆகியோர் இரட்சிக்கப்பட; பூனமின் தாயார் சமீபத்தில் மரித்துப்போனதினிமித்தம் அக்குடும்ப ஆறுதலுக்காக; நமது விசுவாசிகள் தாமஸ் மற்றும் குகன் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

### பகாபூரானா:

### ராஜேந்திரன் & ஹேனா மேரி ஸ்லெஸ்ஸர்

**துதிக்க:** நமது தொடர்பாளர் ஹர்பஜன் சிங்கை குடிப்பழக்கத்திலிருந்து தேவன் விடுதலையாக்கினார். முதன் முதலாக நத்துவாலா துணை மையத்தில் ஞாயிறு ஆராதனை துவங்க தேவன் கிருபை செய்தார். நமது ஊழியத்திற்கு கலா குடும்பத்தினர் ஆதரவு காட்ட தாமாகவே முன்வந்துள்ளனர். சாந்த்பூர்ணா சபையில் வாலிபர்களுக்காகத் திட்டமிட்டு நடத்தப்பட்ட ஐக்கியக் கூடுகையில் அநேக வாலிபர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று ஆசீர்வாதம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய விசுவாசிகளான பல்ஜீந்தர் சிங், ரீனா ராஜேந்தரின் ஆவிக் குரிய வளர்ச்சிக்காக; நமது விசுவாசிகள் நீந்தர், பிந்து, சாந்தி, பிந்தர்கௌர் ஆகியோர் விசுவாசப்பாதையிலிருந்து விலகிப்போகாமல், தவறான உபதேசங் களைக் கூறுபவர்களுக்கு வீடுகளில் இடம் கொடுக்காமல் கிறிஸ்துவில் ஸ்திரமாக நிலைத்து நிற்க; பாகபூர்ணா, ஜெய்மல்வாலா பகுதிகளில் நல்ல சபைத் தலைவர்களை ஏற்படுத்தி சபைகளை விரிவுப்படுத்த; ஜஸ்வீந்தர், சத்பால் சிங் ஆகியோர் போதை பழக்கத்திலிருந்து விடுதலையாக; நமது விசுவாசிகள் வீரி, பாபரோடுபஸ்தி ஆகியோர் தேவன் பேரில் வைத்த நம்பிக்கையில் உறுதியாய் நிலைத்து நிற்க ஜெபிப்போம்.

## 5 அக்டோபர்
செவ்வாய்

### நிஹால் சிங் வாலா:
**சிவசங்கரன் & மெர்சி எலிசபெத்**

**துதிக்க:** நமது விசுவாசி சரப்ஜித்தின் விசுவாசமும், நற்சாட்சியுள்ள வாழ்க்கையும் அவரது கணவரை குடிப்பழக்கத்திலிருந்து மாற்றியது. கர்த்தருடைய பெரிதான கிருபையால் 5 நாட்கள் நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகளில் 43 பிள்ளைகள் கலந்து கொண்டு தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நீலுவின் குடும்பத்தில் அமைதியும் சமாதானமும் நிலவ; சோனி விரல் வீக்கத்திலிருந்தும், ரேஷ்மா நாள்பட்ட முழங்கால் வலியிலிருந்தும் குணமாக; மாலதியின் சுகப்பிரசவத்திற்காக ஜெபிப்போம்.

### முக்த்சார்:
**ஜித்தேந்திர டிகல் & ஊர்பசி**

**துதிக்க:** புதிதாக 17 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். புதிதாக ராஜ்பூர் கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதினால் 3 புதிய தொடர்பாளர்கள் நமது ஊழியத்திற்கு கிடைத்துள்ளனர். நமது விசுவாசிகள் உஷா ராணி கௌர், சிம்ரன் கௌர், ரவிகுமார் ஆகியோர் கோவிட்-19 அறிகுறி பெலவீனங்களிலிருந்து பூரண சுகமடைந்தனர். நமது புதிய தொடர்பாளர்கள் ஊரடங்கு காலத்தில் பல்வேறு வித சவாலான சூழ்நிலைகள் மத்தியிலும் சத்தியத்தில் உறுதியாக நிற்க தேவன் உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவுக்குள் தனது விசுவாசத்தை அறிக்கையிட தயாராகயிருக்கும் டிங்கு குடும்பத்தினரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; இரத்த அணுக்கள் குறைவாக உள்ள கேவலின் மனைவிக்காகவும், புற்று நோயினால் அவதிப்படும் மல்கீத் சிங்கிற்காகவும் ஜெபிப்போம்.

### புத்லாடா:
**சஞ்சீப் ஆனந்த் & பிரஸ்துதா**

**துதிக்க:** புதிதாக 13 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நமது தொடர்பாளர்கள் ராஜீந்தர் சிங், தர்மேந்திர சிங் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றனர். நமது உள்ளூர் விசுவாசிகள் புத்லாடா சபையின் கழிவறைகளைப் புதுப்பிக்கும் பணியின் தேவைகளைத் தாங்களாகவே முன்வந்து சந்தித்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தாமாகவே முன்வந்து நமது ஊழியத்திற்கு ஆதரவு தரும் பிட்டு சிங், பரம்ஜித் கௌர் ஆகியோரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; ராலி, காலிபூர், கனக்வால், போடாவால், சிர்ஸிவால், பச்சோனா, தோடா, பாத்டா மற்றும் மல்சிங்வால் ஆகிய கிராமங்களில் அநேக முறை சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட போதிலும் நமது ஊழியம் வளர முடியாதபடி காணப்படும் தடைகள் விலக; ஜீவன் சிங்கிற்குக் காணப்படும் சிறுநீர் தொற்றிற்காகவும், ஜாகி சிங்கின் மகன் சாமுவேலின் இருதய அறுவை சிகிச்சைக்காகவும்; மன்வீர், கரம்ஜித் கௌர், ராஜு கௌர் ஆகியோர் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து விடுதலையாக்கப்பட; விசுவாச வாலிபப் பிள்ளைகள் வெளிப்புற சந்திப்பு ஊழியங்களில் உற்சாகமாய் வந்து கலந்து கொள்ள ஜெபிப்போம்.

## 6 அக்டோபர்
புதன்
உபவாச ஜெபநாள்

# ஹரியானா

## கலான்வாலி:

### விஜயகுமார் & ஜெபலா

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு நபர் ஓதன் துணை மையத்திலிருந்து கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளார். இங்கு நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சியில் 50 பிள்ளைகள் கலந்து கொண்டு தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றனர். ஆசீர் தேவாலயத்தில் கூரை பொருத்துதல் மற்றும் பூச்சு வேலை வெற்றி கரமாக முடிய தேவன் உதவி செய்தார். நமது புதிய தொடர்பாளரான ஜேஷனிற்கு ஜெபத்தின் மூலமாக அலைக்கழித்துக் கொண்டிருந்த பிசாசின் பிடியிலிருந்து விடுதலை கொடுத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோவிட்-19னால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட ஜக்மால்வாலி கிராமத்தினர் பணஉதவி பெறுவதற்காக தங்களுடைய அறியாமையினால் ஆசிரமம் நோக்கி செல்கின்ற இவர்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொண்டு மனந்திரும்ப; கலான்வாலி சபை விசுவாசி கோவிந்த் பொய்யான குற்றச்சாட்டால் கடுமையாக அடிக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ள அவருக்குச் சரியான நீதி கிடைத்து கூடிய சீக்கிரத்தில் விடுதலை பெற; நமது புதிய தொடர்பாளரான மங்கா குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற; கலான்வாலி, ஆசீர் மற்றும் ஓதன் சபை களில் தகுதியான நபர்களைக் கொண்ட சுவிசேஷ குழுக்கள் உருவாக்கப்பட; சுவிசேஷத்தை ஆர்வமாய்க் கேட்கும் ஓதன் துணை மையத்தைச் சார்ந்த பாட் இனமக்கள் இரட்சிக்கப்பட; சுயாதீன திருச்சபைப்போதகர்கள் நமது ஊழியங் களுக்கு விரோதமாகச் செயல்படுகின்ற செயல்களிலிருந்து மனந்திரும்ப; ஜோதி மற்றும் ராஜ் கௌர் பொல்லாத ஆவிகளின் பிடியிலிருந்து விடுதலை பெற; புதிய தொடர்பாளரான ஜாஸ்பிரீத் ஒவ்வாமை நோயிலிருந்தும், கமல்தீப் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும், அம்ரீத் பால் நரம்புப் பிரச்சனையிலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.

## *இடி மற்றும் மின்னலிலிருந்து பாதுகாப்பு!*

*சத்தீஸ்கட் மாநிலம், காட்கோரா பணித்தள நமது விசுவாசி ஜெய்ராமும் அவரது மனைவி பாஸந்தியும் தங்களது ஒரு வயது மகன் சாமுவேலுடன் பய்சிமர் கிராமத்தில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுடைய வீடு கிராமத்திற்குச் சற்றுத்தொலைவில் வனப்பகுதியில் உள்ளது. இவர்களுடைய வீட்டிலிருந்து 10 மீட்டர் தூரத்தில் ஒரு பெரிய காய்ந்துபோன மரம் இருந்தது. திடீரென ஒருநாள் மாலைவேளையில் பெய்த கனமழை யால் இடி, மின்னல் அம்மரத்தைத் தாக்கியது. பலத்த காற்றுக் காரணமாக அனைத்து கிளைகளும் உடைந்து ஜெய்ராமின் வீட்டின் முன்பாகத் தரையில் வந்து விழுந்தன. மின்னல் மரத்தைத் தாக்கியதால் மரத்தின் பெரிய தண்டு மேலிருந்து நடுவரை இரண்டுப் பகுதிகளாக உடைந்தது. ஜெய்ராமின் அண்டை வீட்டார் மின்னல் மிகவும் வலுவானதாக இருந்தது என்றும் அது அனைத்து மின் இணைப்புகளையும் சேதப்படுத்தியது என்றும் பேசிக்கொண்டனர். ஆனால் கர்த்தருடைய மகா பெரிதான கிருபையினால் ஜெய்ராம் குடும்பத்தினர் அவ்வேளையில் வீட்டிலில்லை. இவர்கள் அந்த நாளில் வேறு கிராமத்திற்குச் சென்றிருந்ததால், அந்த ஆபத்தான சூழ்நிலையிலிருந்து காப்பாற்றப் பட்டனர். ஆனால், வீட்டிற்குள் மின் இணைப்பில் வைத்துச் சென்றிருந்த கைபேசி மின்னூட்டல் சுக்கு நூறாக உடைந்திருந்தது. இவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து ஜெய்ராமின் குடும்பத்தினரை அற்புதமாகப் பாதுகாத்த தேவனின் இரக்கத்தை அக்கிராமத்தார் நன்கு அறிந்து கொண்டார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! அல்லேலூயா!*

## 7 அக்டோபர்
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. விஜய் பிரசன்னா ஐசக்
திருமதி. சரோஜினி நர்சாரி

### ஃபத்தேஹ்பாத்:
**டேவிட் எஸ். & ஜெப கிரேஸ்**

**துதிக்க:** புதிதாக 12 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். மத்தானா, அசோக் நகர், பட்லிடாபார், டாரியாபூர் ஆகிய பகுதிகளில் நடைபெற்ற விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சி களில் 220 பிள்ளைகள் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். அசோக் நகரி லுள்ள 9-ம் வகுப்பு படிக்கும் ராகுல் புதுடெல்லியிலுள்ள இனம் தெரியாத புதிய நபர்களால் கடத்தப்பட்ட சூழ்நிலையில் ஜெபத்தின் பலனால் தேவன் அவனைப் பாதுகாப்போடு மறுபடியும் வீட்டிற்கு கொண்டு வந்து சேர்த்தார். பட்லிடாபார் சபையின் சுற்றுச்சுவர் கட்டுமானப் பணியின் நிதித்தேவைகளை உள்ளூர் சபை விசுவாசிகளே தன்னார்வமாகக் கொடுத்து பூர்த்தி செய்ய தேவன் அநுக்கிரகம் ஈந்தார். அசோக் நகர் ரஞ்சித் திற்கு சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்து பூரண சுகம் கொடுத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பால்மீகி சோவுக் கிராம ஹரீஷ், சார்மர்லா காலனியிலுள்ள ஊர்மிளா, பூனம், பத்ரா காலனி ரீனா, கமலேஷ், பாட்டியா காலனி கண்ணய்யா, பாலா ராஜேந்தர், அஜய், ராஜேஷ் அனில், சுபாஷ், ராஜேந்தர், சுரேஷ், சிம்லா மற்றும் கத்தா ஆகிய புதிய தொடர்பாளர்களின் குடும்பங்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; அசோக் நகரில் ஆலயம் கட்டுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட நிலம் கிடைக்க; பால்மீகி சோவுக் கிராம தனுஜா முஞ்சல், பாட்டியா காலனி சந்தியா, ஹஜ்ராவன் கலான் கிராம நிர்மலா ஆகிய விசுவாசிகள் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட; அஜய் பக்கவாதத்திலிருந்து குணமடையவும், நமது இளம் விசுவாசிகள் காலு, சரோஜ், ராஜேந்தர் ஆகியோருக்கு நல்ல வாழ்க்கைத்துணைகள் அமையவும் ஜெபிப்போம்.

### ஜீவன் நகர்:
**அலியாக்கீம் ஜெனா & தீபிகா**

**துதிக்க:** புதிதாக 10 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். புதிதாக தெடி என்ற கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் மூலமாக சிர்ஸா, ரணியா மையங்களில் நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகளை தேவன் ஆசீர்வதித்தார். தபாவாலி, சிர்ஸா மற்றும் ஹிஸார் கிராம விசுவாசிகள் தேவன் மேலுள்ள விசுவாசத்தில் வளர்ச்சி யடைகின்றனர். சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டிருந்த மதன் குடும்பத்தினர் தற்போது இயேசு கிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். தேவன் ரணியா மையத்திலுள்ள நவ்ஜோத் ரந்தாவை இருளான வாழ்விலிருந்து விடுதலை யாக்கினார். நம்தாரி மற்றும் ராணியா பகுதிகளிலிருந்து புதிதாக இரண்டு குடும் பங்கள் நமது ஆராதனைகளில் வந்து கலந்து கொள்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மாண்டி தபாவாலி துணை மையத்திலுள்ள நமது சுதேச ஊழியர் சாம் சுந்தர் பக்கவாதத்திலிருந்து குண மடைய; நமது இளம் வாலிபர்கள் சஜன், சாகர் சர்க்கரை நோயிலிருந்து சுக மடைய; குர்ணாம் கௌர் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

## 8 அக்டோபர்
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. பால் பியர்சன் பிரின்ஸ் J.

### தோஷம்:
### ஜாண் டேவிட்சன் செல்வராஜ்

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். எவ்விதத் தடங்கலுமின்றி போக்ராய் கிராமத்தில் பெரியளவில் முதன் முறையாக ராஜ்புத் இனமக்கள் மத்தியில் வெளிப்புற சந்திப்பு ஊழியம் நடத்த தேவன் உதவி நல்கினார். புதிதாக இரண்டு குடும்பங்களை போக்ராய் கிராமத்திலும், ஒரு நபரை அலக்புரா கிராமத்திலும் ஈவாக தந்த தேவாதி தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிஷன்புரா கிராம நமது புதிய தொடர்பாளர் சஞ்சய் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து விடுதலையடைய; தானிமாகு, அலக்புரா கிராம விசுவாசிகளின் வாழ்க்கையில் காணப்படும் மந்த நிலைகள் மறையவும், சில சமயங்களில் பலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள தயங்கும் சூழ்நிலைகளும், தடைகளும் மறையவும்; தோஷம் பணித்தளத்திலுள்ள வால்மீகி இனமக்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் எழுப்புதலையும், மறுமலர்ச்சியையும் பெற்று ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

## உத்தரகாண்ட்

### நானக்மட்டா:
### சிவகுமார் & சுசிலா மராக்

**துதிக்க:** கர்த்தருடைய கிருபையால் நமது மிஷனெரிகள் இப்புதிய பணித்தளத்தைத் திறக்கவும், புதிதாக 5 கிராமங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கவும் தேவன் உதவி செய்தார். 27 நபர்கள் சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காட்டுகின்றனர். இஸ்லாம் நகர், ஹரயா, பஸ்கார், மட்டிகா மற்றும் ரோஸியா ஃபாரம் ஆகிய பகுதிகளிலிருந்து 5 புதிய தொடர்பாளர்களை தேவன் கொடுத்துள்ளார். சந்தன் கௌர் நீண்ட நாட்களாகக் காணப்பட்ட முழங்கால் வலியிலிருந்து சுகமடைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராய் சீக், தாரு, பஹாரி, பெங்காளி மற்றும் நேபாளி இனமக்களிடையே சுவிசேஷத்திற்கான வாசல்கள் திறக்கப்பட; சுவிசேஷத்தை விருப்பத்துடன் கேட்கும் மட்டிகா கிராம மஹேந்தர் கௌர் குடும்பம் ஆத்ம இரட்சிப்படைய; ரோஸியா ஃபாரம் கிராம ஜஷ்வீந்தர் சிங் குடும்பம் விரும்பி ஜெபிக்கிற அவர்களது மனவிருப்பங்களை தேவன் நிறைவேற்ற; இஸ்லாம் நகர் இந்தர் கௌரின் தாயார் இருதய நோயிலிருந்தும், மரியா கிராம அமர் கௌரின் தாயார் மூளை நரம்பு பிரச்சனை மற்றும், சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும் குணமாக ஜெபிப்போம்.

### பஸ்பூர்: கிறிஸ்டியன் பிரகாஷ் & கோகனி சுமித்ராபேன்

**துதிக்க:** பின்மாற்றமடைந்துள்ள 6 விசுவாசிகள் மீண்டும் திருச்சபைக்கு வரத் தொடங்கினர். விடுமுறை வேதாகமப் பள்ளி நிகழ்ச்சிகளை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்தார். சத்பாலை இருதய நோயிலிருந்தும், தீக்சித்தை தோல் வியாதியிலிருந்தும் குணமடையச் செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளில் சிலருக்கு இந்திய இராணுவத்தில் சேர வேண்டும் என்றிருக்கின்ற ஆசைகளை தேவன் நிறைவேற்ற; நமது புதிய தொடர்பாளர் அஜய் குமார் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற; தேவேந்திர குமார் ஊமைத் தன்மையிலிருந்து குணமாக; தீராத மூட்டு வலியினால் அவதியுறும் ரமேஷ் பாய், லஸியாபாய், இதுபேன் ஆகியோர் முற்றிலுமாகக் குணப்பட ஜெபிப்போம்.

## 9 அக்டோபர்
சனி

# ராஜஸ்தான்

### ஸ்ரீ கங்காநகர்: வி. குமார் & பெட்ரிஷியா தமிழ்ச்செல்வி

**துதிக்க:** ரேணுகா 5H பகுதியிலிருந்து 3 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். 16S கிராமத்திலுள்ள நமது புதிய தொடர்பாளர் ரூபாராம் தனது வீட்டில் விடுமுறை வேதாகமப்பள்ளியை நடத்துவதற்கு அனுமதி அளித்துள்ளார். நமது பட்டேல் நகர் விசுவாசி கமல்ஜீத் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப் பட்டார். 5H கிராம பூபேந்தருக்கு ஏற்பட்ட மிகப்பெரிய விபத்திலிருந்து அவரைப் பாதுகாத்த தேவனின் அன்பிற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரேணுகா கிராமத்தில் நடத்தத் திட்டமிட்டிருக்கும் சத்சங் கூடுகையை தேவன் ஆசீர்வதித்துத் தர; மஜிவாலா கிராம புதிய தொடர்பாளரான ரஞ்சித் கண்பார்வை கோளாறிலிருந்து சுகமடைய; பின்வாங்கிப்போன சபை மூப்பர் அமர்ஜீத் குடும்பம் மனந்திரும்ப; மணிப்புரா கிராம ஹக்கும் சிங் போதை பழக்கத்திலிருந்து விடுதலை பெறவும், அவருக்கு நல்ல வேலை கிடைக்கவும் ஜெபிப்போம்.

### பாவோட்டா:
### சத்திய பிரகாஷ் & அஞ்சனா

**துதிக்க:** படாடு ஜோகி கிராமத்திலிருந்து ஒரு நபர் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளார். புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. கோத் புட்லி கிராம சங்கீதாவை கோவிட்-19 நோய்த்தொற்று அறிகுறியிலிருந்து சுகம் கொடுத்த தேவாதி தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அஜீபுரா கிராம கோமலைப் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுவிக்க; படாடுஜோகி கிராம மனீஷ் & சுமித்ரா தம்பதிக்கு குழந்தை பாக்கியம் கொடுத்து தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

### ராஜஸ்தான் பிராந்திய அலுவலகம்:
### அமிர்காந்த் டிகல் & நிரோலா

**துதிக்க:** ஆல்வார் பணித்தளத்திலுள்ள தில் வாடா, கண்டிகா, சம்மாபாஸ், சிக்கனி ஆகிய கிராமங்களில் உள்ள மக்கள் சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காட்டுகின்றனர். ஹன்ஸா தேவி, சுந்தரி கௌர், சபீதா தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுதலை பெற்றுள்ளனர். தபுகேடா கிராம ஃபோஜா சிங் தவறான குற்றச்சாட்டினால் குற்றஞ்சாட்டப்பட்டு சிறையிலடைக்கப்பட்டிருந்த சூழ்நிலையில் ஜெபத்தின் பலனால் சிறையிலிருந்து விடுதலையாக்கப்பட்டு வீடு திரும்ப தேவன் பாராட்டிய தயவிற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காரிதால் பணித்தளத்திலுள்ள நட் இனமக்கள் ஒட்டுமொத்தமாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; ஓட் ராஜ்புத், நாயக், ராய்ஜர் இனமக்களின் இரட்சிப் பிற்காக; ஆல்வார் விடுதிப்பிள்ளைகள் ஊரடங்கிற்குப் பின் பள்ளிகள் திறக்கும் பொழுது நன்றாகப் படிக்கவும், பாதுகாக் கப்படவும்; சுவிசேஷத்தைத் தங்கள் வாழ்வில் கேட்டிருக்கும் நமது புதிய தொடர்பாளர்கள் தங்களது விசுவாசத்தைத் துணிவுடன் அறிக்கையிட; புதிய தொடர்பாளர்களான மதன்லால், ஜலாசிங், சுக்வீந்தர், மல்கித் சிங், லக்சிங், பிரின்ஸ், விக்ரம், பல்ஜீந்தர் ஆகியோருடைய குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவைத் தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, விசுவாசத்தை அறிக்கையிட; கரம்ஜீத் வயிற்றுப் புற்று நோயிலிருந்தும், சுந்தர் கௌர் மார்பக புற்றுநோயிலிருந்தும் சுகம் பெற; சாங்ரியா பணித்தளத்தில் சதுல்ஷாகர் என்ற இடத்தில் ஆலயம் கட்டுவதற்குத் தேவையான நல்ல நிலம் கிடைக்க ஜெபிப்போம்.

## 10 அக்டோபர்
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சித்ரா பொன்னுசாமி
திரு. ஹரிபாபு குந்த்ரா, திரு. சாந்து மராண்டி

# உத்தரப் பிரதேசம்

## ஜின்ஜக்:

**சமரேந்திர சிங் & சுஸ்மித்தா**

**துதிக்க:** புதிதாக 6 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. டோய்ஹி கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட தேவன் திறந்த வாசலைக் கொடுத்தார். கோகோஷி, குலாவ்பூர் கிராம விசுவாசிகள் கூடுகையை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்தார். கடந்த 5 ஆண்டுகளாகப் பிசாசின் பிடியில் அகப்பட்டிருந்த குஸ்புவை ஜெபத்தின் பலனால் தேவன் விடுதலையாக்கி ஆசீர்வதித்தார். ரசுலாபாத் ஆலயக் கட்டுமானப்பணிகள் நல்ல முறையில் நடக்க தேவன் ஒத்தாசை நல்குவதற் காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது பணித்தளத்தி லுள்ள 5 துணை மையங்களில் நடத்தத் திட்டமிட்டிருக்கும் விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகள் நல்ல முறையில் நடக்க; நமது தன்னார்வ ஊழியர் ரதிசாம், சுரேஷ் ஆகியோர் ஊழியப்பாதையில் வல்லமையாகச் செயல்பட; நமது உள்ளூர் விசுவாசிகள் வெளிப்புற சந்திப்பு ஊழியங்களில் உற்சாகமாய் வந்து கலந்து கொள்ள; ஜின்ஜக், போலாநகர் சபைகளில் நடக்கப்போகும் சபை மூப்பர்கள் பயிற்சிக்கூடுகையை தேவன் ஆசீர் வதித்துத் தர ஜெபிப்போம்.

## ரணியா:

**மாங்வெய் ஃபோம் & நிஷா**

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நமது சுதேச ஊழியர் வேத் பிரகாஷ் குடும்பத்தினர் சுவிசேஷம் அறிவிக்க முடியாதபடி பல எதிர்ப்புகளும், மிரட்டல்களும் அச்சுறுத்தல்களும் சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் மூலம் அவர் களுக்கு வந்தபோதிலும் தேவன் அந்த முழுக்குடும்பத்தையும் ஒரு சேதமும் அணுகாமல் பாதுகாத்தார். மல்வாரி கிராமத்தைச் சார்ந்த நமது விசுவாசி ராஜ்குமாரின் மகன் கடந்த ஒருமாத காலமாக குடும்ப சூழ்நிலைகளைத் தவறாகப் புரிந்து கொண்டு வீட்டை விட்டு வெளியேறிப் போயிருந்த அவர், மீண்டும் வீட்டிற்குத் திரும்பி வர தேவன் உதவி செய்தார். ஜெபத்தின் பலனால் சுமன் பிசாசின் பிடியிலிருந்து விடுபட கர்த்தர் உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது தொடர்பாளர்களான ஹய்கீம், பெரோஸ், ஆவ்தேஷ், ராஜ் குமார், பரன்ஜால் ஆகியோர் தாங்கள் அடிமைப்பட்டிருக்கும் குடிப்பழக்கம் மற்றும் சமுதாய தீயப்பழக்கங்கள் யாவையும் முற்றிலுமாக விட்டு மனந் திரும்ப; ரஞ்சித் குப்தா, மோல்சந்த் பால், கியான் சிங், அமன், சத்தேந்தர் ஆகியோர் சுவிசேஷத்திற்குக் கீழ்ப் படிந்து இரட்சிக்கப்பட; பில்லி சூனியத் தினால் பாதிக்கப்பட்டிருக்கும் திலீப் குடும்பத்தினரை தேவன் விடுதலையாக்கி ஆசீர்வதிக்கக் கருத்தாய் ஜெபிப்போம்.

## 11 அக்டோபர்
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மேரி புஷ்பம் டேனியல்

திரு. கஜன் சம்பிரமரி

### சிக்கந்ரா & பாக்ய நகர்:
### பொன்னுசாமி & சித்ரா

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவை இரட்சகராக அறிந்துள்ளனர். புதிதாக 9 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. நாராயண்பூர் பகுதியில் ஊரடங் கிற்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட ஆராதனையில் நமது புதிய விசுவாசிகளான கஞ்சார் இனமக்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதிக்கின்றனர். கர்த்தருடைய கிருபையால் 60 கிராமங்களில் பின்தொடர்பணி ஊழியங்களைச் செய்ய தேவன் கிருபை பாராட்டினார். சத்வாபூர் கிராம நமது விசுவாசி அஹிகரன் அரசாங்க வீட்டுவசதி திட்டத்தின் மூலம் புதிதாக ஒரு வீட்டைக் கட்டி முடிக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தலுவாபூர் மற்றும் தனலுகாபூர்வா திருச்சபைகளில் உள்ள விசுவாசிகள் சபை ஆராதனைகளில் சரியாகக் கலந்து கொள்ளாமல் காணப்படும் மந்த நிலைகள் மாறி, அவர்கள் மத்தியில் எழுப்புதல் வர; அரையா, பாபுண்ட், நித்தாரா கிராமங்களில் ஆலயம் கட்ட நிலம் கிடைக்க; பாசிபூர் கிராம மக்கள் இரட்சிக்கப்பட; கோபால்பூர், சத்ரோவா, பாசிபூர் கிராமங்களில் சபை ஆராதனைகள் மீண்டும் துவங்கப்பட; ராம் பேட்டி டெங்கு காய்ச்சலிலிருந்தும், அனுபம் மனநோயிலிருந்தும் குணமடைய; அகாஷா தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு குணமடைய ஜெபிப்போம்.

# மத்தியப் பிரதேசம்

### கால்வா: பினித் பிரசாத் பர்தன் & அமோஜிதா பர்தன்

**துதிக்க:** சிமாய்பூர் கிராமத்தில் நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சியை தேவன் இதன் மூலமாக ஆசீர்வதித்தார்; அதில் 30 நபர்கள் முதன் முறையாக சுவி சேஷத்தைக் கேட்க தேவன் உதவி செய்தார். ரனாய், குலாய் மற்றும் தாமா கிராமங்களில் பின்தொடர்பணி ஊழியங்கள் வாயிலாக 75 நபர்கள் கிறிஸ்துவில் பெலப்பட்டனர். 50 விசுவாசிகள் கால்வா திருச்சபையில் நடைபெற்ற விசுவாசிகள் முகாமில் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். மோஜ் வாடி கிராம சபை விசுவாசிகள் தங்களது நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கின்றனர். சிக்காலி கிராம ரினாய்பாயிற்கு நீண்ட நாட்களாகக் காணப்பட்ட வயிற்றுவலியிலிருந்தும், மாய்தரணி கிராம ராஞ்சுவிற்கு அதிகமான நெஞ்சு வலியிலிருந்தும், சிக்காலி கிராம சீமாபாயிற்கு சிரங்கு நோயிலிருந்தும் தேவன் சுகம் கொடுத்தார். சிக்காலி கிராம பாஹிராமின் மனைவி பொல்லாத ஆவியினால் அலைக் கழிக்கப்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் சாலிதந்த் கிராம நமது சபை மூப்பர்களும் விசுவாசிகளும் இடைவிடாமல் அவருக்காக ஜெபித்ததின் விளைவாக அச்சகோதரிக்கு முழுமையான விடுதலையை கொடுத்து ஆசீர்வதித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தை வாஞ்சையுடன் கேட்கும் சிக்தலை கிராமத்தைச் சார்ந்த சுசீலாபாயும், அவரது மகனும், மருமகளும் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கையிட; தாமா கிராமத்தைச் சார்ந்த கர்ப்பிணி பெண் சங்கீதாபாய் பாதிக்கப்பட்ட இரத்த சோகை நோயிலிருந்து குணமாக் கப்பட; சிக்தலை கிராம சகாராம் விபத்து காரணமாக ஏற்பட்ட கால் முறிவிலிருந்து குணமாகவும், சபை ஆராதனைகளில் கலந்து கொள்வதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பைராபாயின் கணவர் இரட்சிக்கப்பட; கர்வேடி கிராமத்தில் நடைபெறவிருக்கும் சிறப்புக் கூட்டங்களில் சாதகமான கால சூழ்நிலையை தேவன் அமைத்துத் தர; குர்கு இனமக்கள் மத்தியில் ஊழியம் செய்ய ஆத்தும பாரமுள்ள சுவிசேஷகர் கிடைக்க ஜெபிப்போம்.

## 12 அக்டோபர்
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. சோன்பு சிங்சன்

### நிவாலி:
**சன்னமல்லப்பா &**
**ரூபா ஏலவாகி**

**துதிக்க:** புதிதாக 5 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஷில்தாத் கிராமத்தில் நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சி யின் மூலமாக புதிதாக 60 நபர்கள் சுவிசேஷத்தைக் கேட்க தேவன் கிருபை செய்தார். கோல்யாபானி கிராமத்தில் நடைபெற்ற மாலைநேர ஜெபக்கூடுகைகளையும், வெய்தியா பாளையத்தில் நடைபெற்ற பஜன் கூடுகைகளையும், ஷில்தாத் கிராமத்தில் நடைபெற்ற இயேசு திரைப்பட நிகழ்ச்சி களையும், நகதிந்தி கிராமத்தில் நடைபெற்ற வேதாகம வகுப்புகளையும் சிறப்பாக நடத்திட தேவன் பாராட்டிய நன்மைகளுக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக 3 கிராமங்களில் ஆராதனைக்குழுக்கள் துவங்கப்பட; நிவாலி பணித்தளத்திலுள்ள மக்கள் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொள்வதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் எதிர்ப்பாளர்கள் மனந்திரும்ப; லயிதாய் கண் பிரச்சனையிலிருந்து சுகமடைய; பன்வா பகுதியிலுள்ள நமது சபை ஆவிக்குரிய வளர்ச்சியடைய; சத்தாலி கிராமத்தில் ஆலயம் கட்டுவதற்குத் தேவையான ஒரு நல்ல நிலம் கிடைக்க; நிவாலி பணித்தளத்திலுள்ள மிஷனெரிகள், சுதேச ஊழியர்களைச் சுவிசேஷத்தை அறிவிக்க முடியாதபடி தடைசெய்யும் எதிரிகளின் கைகள் உயராதபடிக்கு தேவன் தடைசெய்யவும், மிஷனெரிகளுக்குத் தேவையான பாதுகாப்பைத் தரவும் பாரத்துடன் ஜெபிப்போம்.

### நேப்பாநகர்:
**ஜுபராஜ் பர்தன் &**
**ஷீபா ஜாஸ்மின்**

**துதிக்க:** இரண்டு நாட்கள் நடந்த உபவாச ஜெபக் கூட்டத்தில் 65 விசுவாசிகள் கலந்துகொண்டு ஆசீர் வதிக்கப்பட்டனர். துகைதாத், சஹாடா காலனியில் நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளை தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். சயன்புரா கிராம மத்ரிபாயிற்கு காணப்பட்ட இரத்தப்போக்கு நோயிலிருந்து பரிபூரண சுகம் கொடுத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பத்னாபூர் கிராம சூர்யா, ரூமன் ஆகிய சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் மனந்திரும்ப; இருசக்கர வாகன விபத்தில் கண்பார்வையை இழந்த பால்சாரைச் சேர்ந்த கணேஷ் என்ற 22 வயது வாலிபனுக்கு தேவன் அற்புதம் செய்ய; சயன்புரா கிராம பானுபாய் கழுத்தில் காணப்படும் கட்டி மறைய; நமது ஊழிய வளர்ச்சி நாளுக்கு நாள் முன்னேறும்போது நமது எதிர்ப்பாளர்கள் மற்றும் தொற்று நோய் சூழ்நிலைகளால் அரசாங்கம் கட்டளையிடும் கட்டுப்பாடுகள் நமது ஊழிய வளர்ச்சிக்குத் தடையாக மாறாதபடிக்கு பாரத்தோடு ஜெபிப்போம்.

## 13 அக்டோபர்
புதன்
உபவாச ஜெபநாள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி. அனுஷ் பீட்டர் ஜெபராஜ்
திருமதி. தெபோராள் விஜயராணி எட்வர்ட்

### பன்சேமால்: வசாவா பாங்சிங் மௌலியா & ஏமன்பேன்

**துதிக்க:** புதிதாக 5 நபர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ளனர். புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 9 கிராமங்களில் நடத்தப்பட்ட பெண்கள் கூடுகைகளையும் 7 கிராமங்களில் நடத்தப்பட்ட சிறுவர் கூடுகைகளையும் ஆசீர்வதித்து தந்த நமது தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தனது 2 வயது மகளைச் சமீபத்தில் இழந்து தவிக்கும் நமது விசுவாசி தனசிங் குடும்பத்தினரின் ஆறுதலுக்காக; மோய்தா கிராம ஷிவானியின் சரீரத்தில் காணப்படும் கட்டிகள் மறைய ஜெபிப்போம்.

## ஜார்க்கண்ட்

### ராம்கார்: செந்தில் குமார் தீமோத்தேயு & முத்துச்செல்வி

**துதிக்க:** புதிதாக 10 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் 3 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். பகல்நேர பராமரிப்பு மையம் ஒன்றைத் துவங்க தேவன் கிருபை செய்துள்ளார். நமது சுதேச ஊழியர் மைக்கேலின் தகப்பனார் இறந்து போனச் சூழ்நிலையிலும், நமது மிஷனெரி குடும்ப நபர்களுக்கு ஏற்பட்ட பல்வேறு சுகவீனங்கள் மத்தியிலும் தேவனுடைய ஊழியங்கள் தடைபடாதபடி தொடர்ந்து நடைபெற தேவன் அநுக்கிரகம் பாராட்டினார். மஹாரோ, கெய்ராபானி மற்றும் சாந்தனா விடுதிப்பிள்ளைகளுக்கு மறுபடியும் பள்ளிகள் திறக்க உதவிசெய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஒரு வீட்டைக் கட்டுவதற்காக நமது ஊழியத்தை விட்டு வெளியேறின நமது உள்ளூர் சுதேச ஊழியர் லோஹன் ஹன்ஸ்தாவின் மனந்திரும்புதலுக்காக; நமது சுதேச ஊழியர் அசோக் முர்மு மூல வியாதியிலிருந்தும், குடலிறக்கத்திலிருந்தும் முழு ஆரோக்கியம் பெற; நமது விசுவாசிகள் உள்ளூர் சுதேச ஊழியர்களின் மாதாந்திர ஊதியத்தை முழுவதும் தாங்களாகவே சந்திக்க; நமது ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் மனந்திரும்ப ஜெபிப்போம்.

## எதிர்ப்புகளையும் ஆளுகிற தேவன்!

*குஜராத், கொர்காம் பணித்தளத்தில் அநேக எதிர்ப்புகளின் மத்தியில் ஒரு ஆலயத்தைக் கட்டி தேவ நாம மகிமைக்கென்று சமீபத்தில் அதைப் பிரதிஷ்டை பண்ணியிருந்தோம். இந்த ஆலயம் கட்டுவதற்குத் தன் நிலத்தை நன்கொடையாகத் தந்த பொயில்யாபாய் எதிர்பாராதவிதமாக இடி தாக்கி உயிரிழந்தார். அதன் விளைவாக அவரது சகோதரர், கிராமத்தலைவர் மற்றும் சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் எதிர்ப்பாளர்கள் அனைவரும் ஒன்றுக்கூடி எதிர்க்க ஆரம்பித்தனர். தொடர்ந்து அங்கு ஊழியத்தைச் செய்வது சவாலாகவும், மிகுந்த கேள்விக்குறியாகவும் இருந்தது. ஆனால் அகில உலகத்தையே தம் ஆளுகையின்கீழ் வைத்திருக்கும் நமது ஆண்டவர், அக்கிராமத்தில் மிக முக்கியமானவராகிய சாவுலுபாய் மற்றும் அவரது மனைவி ஊர்மிளாபேன் இருவரையும் நமது ஊழியத்திற்குச் சாதகமானவர்களாக மாற்றினதும் அல்லாமல், இயேசுகிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக அவர்கள் ஏற்றுக்கொள்ளவும் செய்தார். இதன் பலனாக சூழ்நிலை சமாதானமாக மாறவும், அநேகர் இயேசுகிறிஸ்துவின் அடியவராக மாறவும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த தேவனைத் துதிப்போம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! அல்லேலூயா!*

## 14 அக்டோபர்
வியாழன்

### பதரியா:
### அகஸ்டின் பிஜி & மன்னா ராஜ வித்யா

**துதிக்க:** சிபி மற்றும் ஆடுகொடா கிராமங்களில் ஆலயக் கட்டுமானப் பணிகளும், சாத்பேடா ஆலய சுற்றுச் சுவர் கட்டுமானப் பணியும் சுமூகமான முறையில் நடைபெற தேவன் உதவி செய்தார். பெடோ சப்பேடி கிராம தாவுத் மால்தோவிற்கு நாள்பட்ட பல்வேறு விதமான நோய்களிலிருந்தும், அகோயா கிராமத்தின் லூக்கா மால்தோ வின் மகள் மேரிக்கு காலஜார் நோயி லிருந்தும், சோனி மால்தோவிற்கு தலையில் ஏற்பட்ட காயத்திலிருந்தும், அனில்பாய், கங்காபாய் ஆகியோருக்கு மலேரியா காய்ச்சலிலிருந்தும் தேவன் பூரண சுகத்தைக் கொடுத்தார். நமது விசுவாசி டேனியேல் அவர்களின் மகனுடைய திருமணத்தை கிறிஸ்தவ முறைப்படி நடத்த தேவன் கிருபை செய்தார். கங்குபாடா மற்றும் பந்தேனி விடுதிப்பிள்ளைகள் ஊரடங்கு காலத் திலும் தங்களுடைய தேர்வுகளை நல்ல முறையில் எழுதி முடிக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வெளி இடங்களுக்கு வேலை வாய்ப்புகளுக்காக கடந்து சென்றுள்ள நமது விசுவாசிகளின் பிள்ளைகளுடைய பாதுகாப்பிற்காக; மகள் விமோலா மால்தோவை இழந்து தவிக்கும் கண்டியாமு கிராம இஸ்ரேல் மால்தோ மற்றும் தனது மனைவி சுமித்ராவை இழந்து தவிக்கும் சாமுவேல் மால்தோ ஆகியோரது குடும்பங்களின் மன ஆறுதலுக்காக; சுந்தர் அணை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள ராஜபோக்ரா கிராம விசுவாசிகளின் பாதுகாப்பிற்காக; கோக்டா கிராம நமது விசுவாசி பத்ராஸ் மால்தோவின் வீட்டில் திருடப்பட்ட பொருட்கள் திரும்பக் கிடைக்க ஜெபிப்போம்.

### பாக்குடியா:
### இம்மானுவேல் முர்மு & நிலா ஹன்ஸ்தா

**துதிக்க:** புதிதாக 5 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 16 நபர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். நமது விசுவாசிகள் மழைக்காலத்தில் எந்த ஒரு இழப்பும் இல்லாமல் அறுவடை செய்ய தேவன் கிருபை பாராட்டியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பன்ஸ்பஹாரி, பதாபஹாரி, பெந்த்ரா, ரோலாகிராம், போர்லாங் மற்றும் தோஹாதங்கா பகுதிகளில் ஆலயங்கள் கட்டப்பட; சபைகளைத் தன்னிச்சையான திருச்சபைகளாக மாற்ற எடுக்கப்படும் முயற்சிகள் வாய்க்கப்பெற; வரும்நாட்களில் நடக்க வுள்ள ஊழிய நிகழ்ச்சிகளை தேவன் ஆசீர்வதித்துத் தர; பிஸன்பூர் கிராம மாறன் கௌரி மற்றும் ஜோபா ஹெம்ரோம் காசநோயிலிருந்தும், ஜூனஸ் முர்மு வலிப்பு நோயிலிருந்தும், குன்புரா தாங்கரா கிராம ஜோசப் முர்மு குருட்டுத்தன்மையிலிருந்தும், பால் முர்மு காலெலும்பு முறிவிலிருந்தும், நமது சபையின் மூப்பர் ஜோகன் ஹெம்ரோம் நாள்பட்ட பல்வேறு விதமான நோய்களிலிருந்தும் பூரண சுகம் பெற ஜெபிப்போம்.

## 15 அக்டோபர்
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. பாகி சதீஷ்

**தம்னி : ஜாண்பால் ஹாரிஸ் & விமலா டெய்சி**

**துதிக்க:** பட்பஹாடி, லெங்தகோடா கிராமங்களில் 19 நபர்கள் இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர். உள்ளூர் சுதேச ஊழியர்களுக்கு நடைபெற்ற பயிற்சிக்கூடுகையை தேவன் ஆசீர்வதித்தார். சடிமாகோ கிராம விசுவாசி பர்னபாஸ் மால்தோவிற்கும், குந்திகோடா கிராம நகோமி மால்தோவிற்கும் காணப்பட்ட அதிகமான வயிற்று வலியிலிருந்து தேவன் சுகம் கொடுத்தார். பட்பஹாடி கிராம ஜோஹன் மால்தோவிற்கும் லெங்தகோடா கிராம தாவூத் மால்தோவிற்கும் பேச்சுத்திறன் இல்லாத நிலையில் ஜெபத்தின் பலனால் வாய் பேசுவதற்கு தேவன் கிருபை செய்தார். பட்பஹாடி கிராம எலியாஸ் மால்தோவிற்கு தேவன் ஜெபத்தின் பலனால் பொல்லாத பிசாசின் பிடியிலிருந்து விடுதலை கொடுத்தார். நமது விசுவாசிகளான தாகுபேடா கிராம சுசீலா மால்தோ, சடிமாக்கோ கிராம அனிதா மால்தோ ஆகியோருக்கு சுகப்பிரசவத்தைக் கொடுத்து மழலை செல்வத்தினால் ஆசீர்வதித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தாகுபேடா கிராம தேவா, காரே, மேஸா, நாகோ, கிஷோர், ராமா, பொகாடி கிராமத்தைச் சார்ந்த ஜாலியா, குயா, துர்கா, மற்றும் தண்டிகுடியா கிராம டேனி, தர்மா ஆகிய விசுவாசிகளையும் ஊழியத்தையும் பல விதங்களில் தடை செய்யும் சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் மனந்திரும்ப; நமது விசுவாசிகளான குந்திகோடா கிராம ராபர்ட் மால்தோ, சுகில் மால்தோ, தண்டிகுடியா கிராம ஜோயல் மால்தோ ஆகியோர் சபை ஆராதனைகளில் தவறாமல் கலந்துகொண்டு தேவ ஆசீர்வாதம் பெற; குந்திகோடா கிராம தேவதாஸ் மால்தோ, பெடுபோரா கிராம யாகப் மால்தோ, தேவதாஸ் மால்தோ இவர்களது கால் வீக்கத்திலிருந்து பூரண குணமடைய; கிறிஸ்தவரல்லாத மங்கிஸ்பிரி கிராமத்தில் தங்கி வசிக்கும் கிறிஸ்தவர்கள் சபை ஆராதனையில் கலந்துகொள்ளுவதற்கு ஏற்ற வாய்ப்புகளை தேவன் அமைத்துத் தர; சேனா கிராம விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் விசுவாசத்தைக் காத்துக் கொள்ளவும், சபை ஆராதனையில் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலையிலுள்ளவர்களின் தடைகள் மாறவும்; பெடுபோரா, லெங்தகோடா கிராம புதிய விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

### ஜெபத்தின் மேன்மை!

*ஒடிசா, ராய்ரங்பூர் பணித்தளம். சபீதா நாயக்கின் காலில் நெருப்பு பற்றிக்கொண்டது. அதனால் அவருடைய இரண்டு கால்களில் ஒன்று அதனுடைய இடுப்புப் பகுதியிலிருந்து கால்விரல்கள் வரை முழுவதுமாக எரிந்து விட்டது. சிலமாத சிகிட்சைகளுக்குப் பின் இறுதியாக, மருத்துவர்கள் அந்தக் காலை சரிசெய்ய முடியும் என்ற நம்பிக்கையை முற்றிலுமாக இழந்தனர். ஆனால் தன்னுடைய நம்பிக்கையை இழக்காத அப்பெண், நமது ஆராதனையில் கலந்துக்கொண்டு, நமது ஊழியர்களிடம் தனது காலின் சுகத்திற்காக ஜெபிக்கக் கேட்டார். ஜெபத்தின் விளைவு, அவருடைய எரிந்த கால் செயல்படத் தொடங்கியது. காலில் இருந்த தீக்காயங்கள் அனைத்தும் ஆற ஆரம்பித்தன. இதனைக் கண்ட எல்லா விசுவாசிகளும் கர்த்தரின் இந்த அற்புத கிரியையைக் குறித்து மிகுந்த ஆச்சரியப்பட்டனர். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது. அல்லேலூயா!*

## 16 அக்டோபர்
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. விஜயராணி ரூபன் ரவி
திரு. சுச்சாவோ S.

### கிழக்குப் பிராந்திய மேம்பாட்டுப்பணி:
**ஜாண்சன் ராஜதுரை & வினோதினி**

**துதிக்க:** பலவிதமான சவால்களின் மத்தியிலும் மால்தோ விரிவாக்கப்பணிகள் வாயிலாக பல பகுதிகளில் 3000 சிறுவர்களுக்கு குழந்தைகள் கல்வித் திட்டமும், 2000 வாலிபர் (ஆண், பெண்) பெரியவர்களுக்கான முதியோர் கல்வித் திட்டமும், 2000 விதவைகளுக்கான வாழ்வாதார உதவித் திட்டமும், வேளாண்மை, கால் நடை, மரம் வளர்த்தல், தோட்டக்கலை ஆகியவற்றில் புதிய யுக்திகளைக் கையாண்டு அதன் மூலம் மால்தோ வாலிபர் மற்றும் பெரியோர்களுக்கு வாழ்வாதார வேலை வாய்ப்புகளை உருவாக்கும் திட்டத்தையும், ஊடகம் மற்றும் இலக்கிய ஊழியத்தை மால்தோ மொழியில் மொழிப்பெயர்த்து மால்தோ வாலிபர்களைப் பலவிதங்களில் ஊக்குவிக்க உதவிசெய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 21 இடங்களில் நடத்தப்படுகிற குழந்தைகள் கல்வித்திட்டத்தின் மூலம் பிள்ளைகள் கல்வியறிவு பெற்று சீக்கிரத்தில் வேதாகமத்தை தெளிவாக வாசிக்க; மால்தோ இளம் வாலிபர்கள் கல்வி கற்றல் மூலம் மறுமலர்ச்சியடைய; முதியோர் கல்வித் திட்ட நிகழ்ச்சி அறிமுகப்படுத்துவதன் மூலம் முதியவர்களும் படிப்பில் ஆர்வம் காட்ட; மால்தோ வாழ்வாதாரத் திட்ட நிகழ்ச்சியைப் பயன்படுத்தி மக்கள் தங்கள் சொந்த வாழ்க்கையில் வருமானங்களைப் பெற்று முன்னேறி ஆசீர்வதிக்கப்பட; இளைஞர் உயர்வு பெறும் திட்டம் மூலமாக அநேக வாலிபர்கள் தங்களுடைய வாழ்க்கையில் பல்வேறு வழிகளில் உயர்வுபெற்று அநேகரின் கவனத்தை ஈர்க்க; கணவனை இழந்த மால்தோ இன விதவைப்பெண்கள் கிட்டத்தட்ட 2000 பேர் சிறு தொழிலில் ஈடுபட்டு தங்கள் வாழ்வாதாரத்தைப் பெருக்கிக் கொண்டு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

### பகையா & தீன்பஹாட்:
**ஜெபக்குமார் & பொன்லதா**

**துதிக்க:** மசூரியா கிராம விசுவாசிகள் தங்களுடைய பகுதியில் ஒன்று சேர்ந்து ஊழியம் செய்ய தேவன் உதவி செய்தார். முசாஹர் இனமக்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கப்பட தேவன் வாசல்களைத் திறந்துள்ளார். ஜடேரி, நிம்னியாகிதா, பாரிகதா, லக்கிபூர், பக்தர்கனி கிராம மக்கள் சுவிசேஷத்தைக் கேட்கும் வாய்ப்பை தேவன் அருளினார். நமது காலபன்னா சபையின் விசுவாசி மாண்டி லக்தா திருமணம் முடிந்து தன் கணவருடன் மேற்கு வங்காளம் சென்ற இடத்தில் சுவிசேஷத்தை அங்குள்ள மக்களுக்கு அறிவித்து புதிதாக 20 நபர்கள் கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்தப்படுத்தியுள்ளார். பத்லா கிராம பதியா தவறான மருத்துவ சிகிச்சை எடுத்ததன் மூலம் உடல் முழுவதும் ஏற்பட்ட புண்களிலிருந்து பூரண சுகத்தைக் கொடுத்து ஆசீர்வதித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முசாஹர், மஹ்தோ, மண்டல் இன மக்களிடையே கிறிஸ்துவின் சுவிசேஷம் அறிவிக்கப்படும்போது மாபெரும் மாற்றம் மக்களிடையே நிகழ; தின்பஹாட் பணித் தளத்தில் மாடன்சாகி கிராமத்தில் ஆலயம் கட்டுவதற்கு எடுக்கப்படும் எல்லா முயற்சிகளையும் தேவன் ஆசீர்வதிக்க; இந்தப் பணித்தளத்திலுள்ள சிறுவர் விடுதியின் விரிவாக்கப் பணிக்காக; பிப்ரா கிராமத்தைச் சார்ந்த தோப்போ & ராம்நாத் தோப்போ நமது ஊழியத்திற்குப் பல்வேறு விதங்களில் இடையூறு விளைவிக்கும் இவர்கள் மனந் திரும்ப பாரத்தோடு ஜெபிப்போம்.

## 17 அக்டோபர்
ஞாயிறு

### ஜமா / மஹாரோ விடுதி:
**வடேகர் திலீப் பாய் &**
**கொன்கனி பாரதிபேன்**

**துதிக்க:** புதிதாக 14 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். புதிதாக 20 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 'விசுவாசிகள் முகாம்,' மூப்பர்கள் முதியவர்கள் முகாமை தேவன் ஆசீர்வதித்தார். கோவிட்-19 நோய்த் தொற்றில் பாதிக்கப்பட்டிருந்த நமது விசுவாசிகள் பலரை தேவன் குணமாக்கி, உயிரோடு பாதுகாத்ததற்காய் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகள் பலநேரங்களில் தவறான உபதேசங்களுக்கு இடங்கொடுத்து, ஆவிக்குரிய வாழ்வில் திசைதிருப்பப்படாதபடிக்கு விசுவாசத்தில் நிலைநிற்க; புதிய தொடர்பாளர்களான துய்லா டுடு, துலாரி முர்மு மற்றும் பிலிப் சோரேன் குடும்பங்கள் கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; துதியானி சபையின் சுற்றுச்சுவர் கட்டும் பணி விரைவில் அமைக்கப்பட; ஊரடங்கிற்குப் பிறகு 9-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை மாணவர்களுக்குப் பள்ளிகள் திறக்கப்பட்ட சூழ்நிலையில் நமது விடுதிப்பிள்ளைகளின் பாதுகாப்பிற்காகவும் நன்றாகப் படிக்க தேவ ஞானம் அருளப்படும்படியும் ஜெபிப்போம்.

### மசலியா:
**முன்னா மொகந்தியர் &**
**சுமித்தா தாஸ்**

**துதிக்க:** புதிதாக 16 நபர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். புதிதாக 7 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 3 இடங்களில் நடத்தப்பட்ட ஆவிக்குரிய கூட்டங்களின் தேவைகளை நமது விசுவாசிகளே முழுவதும் நிவிர்த்தி செய்ய தேவன் கிருபை பாராட்டினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும்நாட்களில் நடக்கவுள்ள அனைத்து நிகழ்ச்சிகளையும் தேவன் ஆசீர்வதிக்க; மனிசோல் ஹெம்ரோம் கண்பார்வையின்மையிலிருந்தும், ஜீப்லால் மனநோயிலிருந்தும், மஞ்சுலோடா ஹன்ஸ்தக் மஞ்சள் காமாலையிலிருந்தும் குணப்பட ஜெபிப்போம்.

### நோனிஹாட்:
**லெட்கோலுன் பெய்ட் &**
**ஹேட்நெய்கிம்**

**துதிக்க:** புதிதாக 9 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். புதிதாக 5 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. கோர்டியா கிராம ஆலயக் கட்டுமானப்பணிகள் நல்ல முறையில் நடைபெறுகிறது. விசுவாசிகள் முகாம், பெண்கள் முகாம், வாலிபர் முகாம் ஆசீர்வாதமாக நடைபெற தேவன் உதவி செய்தார். சேகா கிராம பான்முனி முர்மு, போக்னா கிராம புதின் கிஸ்கு ஆகியோரை வலிப்பு நோயிலிருந்தும் பாரமஸியா கிராம தீனா முர்முவை வாய்ப் புற்றுநோயிலிருந்தும் தேவன் சுகமாக்கினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிற ஆலயக்கட்டுமானப் பணிகள் விரைவில் துவங்கப்பட; நமது விசுவாசி முகியா ஹன்ஸ்தக் அவரது நிலத்தை அபகரிக்க நினைக்கும் நபர்களால் வரும் பிரச்சனைகளிலிருந்து காக்கப்பட; சர்தார் முர்மு, சாத்முனி கிஸ்கு பக்கவாதத்திலிருந்து சுகம் பெற; ஹரிலால் ஹன்ஸ்தக்கிற்கும் அவரது மனைவி சாந்திக்கும் இடையிலுள்ள குடும்பப் பிரச்சனைகள் மாறி சமாதானம் நிலவ ஜெபிப்போம்.

## 18 அக்டோபர்
திங்கள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. சுமிதா தாஸ் மொஹன்தியர்
திரு. ஸ்ரீதர் மொபிடெனி
திரு. டேனியல் சேனாபதி

### ஸஹர்ஜுடி:
### ஹென்றி கே. & பியூலா

**துதிக்க:** புதிதாக 14 நபர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ளனர். புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. சபையின் மூப்பர் களுக்கான கூட்டம் அனைத்து திருச்சபை களிலும் சிறப்பாக நடத்தப்பட்டது. பல்தான் கிஸ்குவிற்கு ஏற்பட்ட மிகப்பெரிய வாகன விபத்தினால் அவர் சுயநினைவின்றி இருந்த சூழ்நிலையிலும் அவருக்கு ஜீவனைத் தந்து பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பத்கோபாத், பாதர்கோடா கிராம திருச்சபைகளுக்கு சபையின் மூப்பராக சரியான நபர்களைத் தேர்ந்தெடுக்க; ருடோன், பொக்கோவா, பிந்தோனி, சிப்தோலா, அஸன்பஹாடி கிராமங்களில் சுவிசேஷத்திற்கான வாசல்கள் திறக்கப்பட; ஆஸோ முர்மு வலிப்பு வியாதியிலிருந்து குணமடைய; நமது விசுவாசி சங்சித் டுடு குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

### ஹன்ஸ்டிகா: மனோஜ்குமார் பானி & சந்தானி பானி

**துதிக்க:** புதிதாக 20 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. லூசியா சபை விசுவாசிகளுக்குள்ளே சில தவறான புரிந்து கொள்ளுதலினால் காணப் பட்ட பிரச்சனைகளில் தேவன் சமாதானத் தைக் கட்டளையிட்டார். நிப்போனியா கிராம விசுவாசிகள் கூடுகையையும் சுவிசேஷகர்கள் கூடுகையையும் தேவன் ஆசீர்வதித்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லதீபாரி, ஜமுனியா, சல்வா மற்றும் லூசியா கிராமங்களில் ஆவிக்குரிய மறுமலர்ச்சிக்கான கூட்டங்கள் நடத்தப்பட; புலம்பெயர்ந்த விசுவாசிகளின் பாதுகாப் பிற்காக; ரங்கனியா கிராம ஹரிலால் சோரேனின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; கோர்டா கிராம கோரான் ஹெம்ரோம், துலர்தான் கிராம மித்லால் ஹெம்ரோம், கோயட்டாலா கிராம தினேஷ் ஹெம்ரோம் ஆகியோர் கிறிஸ்துவுக்குள் விசுவாசத்தை அறிக்கையிட ஜெபிப்போம்.

### *காணும்படி இருந்த கட்டி காணாமல் மறைந்தது!*

*மத்தியப்பிரதேசம், கால்வா பணித்தளத்தி லுள்ள 23 வயது நிரம்பிய சரஸ்வதி என்பவர் தனது கழுத்திலுள்ள வளர்ந்த கட்டியினால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அவரது கிராமத்திலுள்ள நபர்கள் “இது கடவுளின் ஒரு சாபம்!” எனக் கூறி, அவரை மற்றவர்களுடைய தொடர்பிலிருந்து ஒதுக்கி வைத்து விட்டனர். மருத்துவர்கள் மற்றும் மந்திரவாதிகள் எடுத்த எந்த முயற்சியும் சரஸ்வதியைக் குணமாக்க முடியாமல் தோல்விதான் எஞ்சியது. அதனால் அவர் மனச்சோர்வடைந்து போன சூழ்நிலையில் பிசாசின் பிடியிலும் சிக்கி அலைக்கழிக்கப்பட்டார். இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான், நமது பெண் விசுவாசி ஒருவர் அவரைச் சந்தித்துத் தனது சாட்சியைக் கூறி, லோன்கோத்தியில் நடைபெறும் நமது சபை ஆராதனைக்கு அழைத்து வந்தார். ஏறக்குறைய 4 மாதங்களாக ஊழியர்களும் சபை விசுவாசிகளும் கூடி, தேவனுடைய சமூகத்தில் போராடி ஜெபித்ததின் பயனால், தேவன் அவருக்குப் பூரண சுகம் கொடுத்து கட்டி மறையவும், சாபத்திலிருந்து விடுதலை பெறவும் தேவன் உதவி செய்தார். தற்போது சரஸ்வதியும் அவரது குடும்பத்தினரும் நமது சபையில் இணைந்து தீவிரமான விசுவாசி களாக தேவனைத் தொழுதுகொள்கின்றனர். அல்லேலூயா! தேவனுக்கே துதி உண்டாவதாக!*

## 19 அக்டோபர்
செவ்வாய்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி. ஹவிலா பரமானந்த்

### மண்ட்ரோ: மிர்ஜியோ கிஸ்கு & செலினா ஹன்ஸ்தக்

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் இயேசுவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். புதிதாக 6 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஃபல்பேரியா சபை விசுவாசிகள் ஒவ்வொரு வாரமும் வேதவசனங்களை மனப்பாடம் செய்து சபைகளில் கூறுகின்றனர். நமது சபை மூப்பர் சந்தோஷ் சோரேனிற்கு முதியோர் கல்வித் திட்டம் மூலம் எழுத்துகளைக் கற்றுக்கொண்டு சந்தால் மொழியில் வேதத்தை நன்றாக வாசிக்கக் கூடிய கிருபையைத் தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகள் மது விற்கும் தொழிலைச் செய்வதினால் மாம்சத்தில் சோதிக்கப்பட்டு, பாவத்தில் விழாதபடிக்கு வாழ்வாதாரத்திற்குத் தேவையான வேறு தொழிலைச் செய்ய; அதிகமான மழையினால் ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு நீர் வரத்து அதிகமாக இருப்பதால் ஜாடுகிட்டா சபை விசுவாசிகள் தேவனை ஆராதிக்க ஆலயம் செல்ல மாற்று வழியை தேவன் வாய்க்கப்பண்ண; பக்மாரா கிராம சபை மூப்பர் சைமன் மராண்டிக்கு விரோதமாய்ச் செயல்படும் சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் மனந்திரும்ப; ஒவ்வொரு சபைகளிலும் ஊழிய வாஞ்சையுள்ள பாரமுள்ள சரியான நபர்களைத் தேர்ந்தெடுத்து சபை மூப்பர்களாக அவர்கள் பணியமர்த்தப்பட; பஸாகா சபையைச் சார்ந்த விசுவாசிகள் தங்களுடைய சபையின் பழுதுகளைத் தாங்களாகவே சரிபார்த்துக் கொள்ள ஜெபிப்போம்.

## அஸோம்

### தேமாஜி: நாத்தான் குமார் பெபர்த்தா & நிருபோமா

**துதிக்க:** புதிதாக 15 நபர்கள் சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காட்டுகின்றனர். நமது மிஷனெரியின் மகள் நெகலேயேல் நான்சி பெபர்த்தாவிற்கு12-ம் வகுப்புத் தேர்வில் நல்ல மதிப்பெண்களைக் கொடுத்து ஆசீர்வதித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது இப்பணித்தளத்தில் உள்ள புதிய பகுதிகளுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க உள்ளூர் சுவிசேஷகர்கள் பணியமர்த்தப்பட; தேமாஜி கிராம மிஸ்ஸிங் மக்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் வாசலைத் திறக்கும்படியாக; சுவிசேஷத்தின் மீது வாஞ்சையுள்ள உஜல் பட்ர் இரட்சிக்கப்படவும், கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தை அறிக்கையிடவும் ஜெபிப்போம்.

### காணாமல் போன அதிசயம்!

*ஹரியானா, பஸ்பூர் பணித்தளம், ராஜ்புரா கிராமத்தில் கோலு என்பவர் கிறிஸ்துவின் அன்பை ருசித்து நல்லாவிக்குரிய வாழ்க்கை வாழ்ந்து வந்தார். ஒருநாள் திடீரென இவர் அதிக வயிற்றுவலியினால் துடித்துப்போனார். உடனே மருத்துவரை அணுகியபோது, இவரது வயிற்றினுள் அநேக கட்டிகள் இருப்பது தெரிய வந்தது. இருப்பினும் இவர் விடாப்பிடியாகக் கர்த்தர் தனக்கு நிச்சயம் அற்புதம் செய்வார் என்று விசுவாசத்தோடு கர்த்தரை நம்பி, தனது சுகத்திற்காக ஜெபித்து வந்தார். பின்பு சிலநாட்கள் கழித்து, மருத்துவ பரிசோதனைக்குச் சென்றபோது, என்ன ஆச்சரியம்! வயிற்றிற்குள் இருந்த கட்டிகள் அனைத்தும் காணாமல் போயிருந்தன. மருத்துவர்களும் 'இது தெய்வ செயல், மருத்துவ அதிசயம்!' என்றுக் கூறி வியந்தனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*

**20 அக்டோபர்**
**புதன்**
*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. மார்த்தா சோரேன்

# சத்தீஸ்கட்

## பையாதன் - 1:

### முத்துக்குமார் & நேத்ரவதி

**துதிக்க:** தர்கா மற்றும் சவர்வான் பகுதிகளில் சுவிசேஷத்தை அறிவிக்க தேவன் கிருபை பாராட்டினார். ராம்ஸ்வரூப், மன்சாய் மற்றும் சோனா சிங் குடும்பங்கள் சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டுகின்றனர். மாதர், போத்ரபாரா பகுதி மக்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். பட்டீர், கர்கோதி, பஸ்கர்பாரா பகுதிகளில் முதன் முறையாக நடத்தப்பட்ட மாலைநேரக் கூடுகைகளில் அநேகர் கலந்துகொண்டு சுவிசேஷத்தைக் கேட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாப்பு, லலிதா குடும்பங்களில் அமைதியும் சமாதானமும் நிலவ; நமது தேகிபூர் விசுவாசி சிபால் & பரமேஸ்வரி, குஸ்முலி கிராம லால்மணி & சஞ்சாப் ஆகியோர் மழலை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட; சந்தீப் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து விடுதலையாக்கப்பட; நீலிமா கர்ப்பப்பை பிரச்சனையிலிருந்தும், ஷியாம்லால் பிஹாரி சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும், மகேந்திர சிங் மற்றும் மன்சாய் ஷர்மா பக்கவாதத்திலிருந்தும் குணமடைய ஜெபிப்போம்.

## பையாதன் - 2:

### தாங் சின் லியான் & உங் தியான்சிங்

**துதிக்க:** புதிதாக 15 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பாட்னா பகுதியில் செய்யப்பட்டு வந்த பணித்தள ஆய்வு சிறப்பாக முடிந்தது. இங்குள்ள மக்கள் சுவிசேஷத்திற்கு செவி சாய்க்கின்றனர். சிர்மிரி கிராம விஷ்ணு நமது ஊழியத்திற்குத் தாமாகவே முன்வந்து உதவிசெய்வதாகக் கூறிய அன்பிற்காக நன்றியோடு தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோண்ட்ஸ் இனமக்கள் மத்தியில் ஆவிக்குரிய உயிர்மீட்சி உண்டாக; மக்களின் இதயங்களை ஊடுருவிப் போகக்கூடிய சுவிசேஷ வார்த்தைகள் நமது ஊழியர்கள் மூலம் பிரசங்கிக்கப்பட கருத்தாய் ஜெபிப்போம்.

## சம்ப்பா:

### ரமேஷ்வர் தயாள் நிர்மல் & மதுகலா

**துதிக்க:** புதிதாக 5 நபர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். தாவுலிதிக், கார்கோட் ஆகிய இரண்டு கிராமங்களில் புதிதாகச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ரஸோண்டா, சமரியா, மேக்ரி பகுதிகளில் நடத்தப்பட்ட உபவாச ஜெபக் கூட்டங்களில் 48 விசுவாசிகள் கலந்துகொண்டு தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றனர். கோவிட்-19 நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த புலி கிலாஸ், ஜாகேஷ்வர் ரனாகர், தேவ்பிரசாத் காண்டே, ராஜ் பரத்வாஜ், ராகுல் பஞ்சாரே, உஷா குரே மற்றும் நரேஷ் ஜாங்டே ஆகியோருக்கு பூரண சுகம் அருளி ஆசீர்வதித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சமரியா மற்றும் சோனா கிராமங்களில் ஆலயத்திற்கென்று வாங்கப்பட்ட நிலங்கள் துரிதமாக அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட; சட்டானமி, சாகு, பயனிகா, யாதவ், நிஸாத், பட்டேல், சபரியா, தங்சாகா, கும்கார், காகர், தோபி, நய், தேவர், சர்தி, கொர்வா மற்றும் திமார் இனமக்கள் சுவிசேஷத்தை ஆர்வமாய்க் கேட்கிறவர்களாய் மட்டுமல்லாமல் இரட்சிக்கப்படவும், இயேசுகிறிஸ்துவே இரட்சகர் என்று அறிக்கையிடவும்; நமது ஊழிய விரிவாக்கப் பணிக்கு புதிதாக உள்ளூர் சுவிசேஷகர்கள் பணியமர்த்தப்பட பாரத்துடன் ஜெபிப்போம்.

## 21 அக்டோபர்
வியாழன்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி. சாரா ஜோதி ஆனந்தன்

### கர்கோடா:
**கிங்ஸ்லி ஐசக் ஜாண்சன் & மீனா**

**துதிக்க:** கர்த்தருடைய கிருபையால் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் மூலம் பஜன் கூடுகைகளை 25 இடங்களில் நடத்த தேவன் உதவி செய்தார். காஞ்சன்பூர் கிராம பஜன் கூடுகையில் நமது விசுவாசிகளில் பலர் அனுபவ சாட்சிகளைப் பகிர்ந்து கொண்டனர். சஞ்சக் சாகு, தியாகுராம் சாகு ஆகியோர் நமது ஊழியத்தில் தன்னார்வ ஊழியராக இணைந்து கொள்ள தேவன் பாராட்டிய கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சமூகக் கட்டுப்பாடுகளை நீக்கி மிகப் பெரிய அளவில் ரத்தியா இனமக்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; சௌஹான், சாரதி சாகு மற்றும் சிதார் இன மக்கள் மத்தியில் சுவிசேஷத்திற்கான வாசல்கள் திறக்கப்பட ஜெபிப்போம்.

### காட்கோரா -1:
**டிட்டிங்பௌ & மலங்மெய் சனாலுங்**

**துதிக்க:** புதிதாக 5 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 3 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். பய்சீமர் மற்றும் பங்கேடா கிராமங்களில் நடைபெற்ற விசுவாசிகள் முகாம்களை தேவன் ஆசீர்வதித்தார். பிரேம்பாயைத் தோல் நோய்த் தொற்றிலிருந்தும், ராஹா கிராம அஜீத் அகர்யாவைக் கழுத்து வலியிலிருந்தும் சுகமாக்கிய தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பின்மாற்றமடைந்துள்ள நமது ராஹா கிராம விசுவாசிகள் மணிபாய், சன்னிபாய் மனம் மாறி மறுபடியும் ஆராதனைகளில் கலந்துகொள்ள; பலவழிகளில் நமது ஊழியத்தை கடுமையாக எதிர்க்கவும், வளர்ச்சியைத் தடுக்கவும் செய்கிற பன்ஹானி கிராம ஜெய்பால் சிங் மனம்மாறி இரட்சிக்கப்பட; சுவிசேஷத்தின் மீது ஆர்வம்காட்டும் தெண்டு முடா கிராம பர்ஷோதம் சாந்த்ரி இரட்சிக்கப்பட; நமது புதிய தொடர்பாளர்கள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்து நிற்க ஜெபிப்போம்.

### காட்கோரா-2:
**வால்வி தினா தானா & ஷைலா**

**துதிக்க:** புதிதாக 10 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. கர்த்தருடைய கிருபையால் எந்தவிதப் பிரச்சனையும் இன்றி ஊழியங்கள் நடைபெற்றது. கோவிட்-19 நோய்த்தொற்றிலிருந்து காட்வினைச் சுகப்படுத்தி பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பொல்லாத ஆவியின் பிடியில் அகப்பட்டிருக்கும் ஆஸிஷ் முர்மு, ஷான்சிங் ஆகியோரை தேவன் விடுவிக்க; ஜீன் குமார், சஞ்சய் குடும்பங்கள் சபை ஆராதனைகளில் தவறாமல் கலந்து கொண்டு தேவனை ஆராதிக்க ஜெபிப்போம்.

### தேடுவோர் முகாமைவிட்டுத் திரும்பியோடிய பிசாசு!

*சத்தீஸ்கட், பாண்டே பணித்தளம். மோடெமார்கா கிராமத்தில் நடைபெற்ற தேடுவோர் முகாமில் 20 நபர்கள் கலந்து கொண்டனர். அசுத்த ஆவியினால் பிடிக்கப்பட்டிருந்த ஒரு நபர் அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தார். மூன்று மாதமாக மந்திரவாதியின் கட்டுப்பாட்டில் இருந்தும் அந்த நபருக்கு ஒரு விடுதலையும் கிடைக்கவில்லை. விசுவாசத்துடன் அந்நபரின் பெற்றோர் அவரை இக்கூட்டத்திற்கு அழைத்து வந்தனர். இரண்டாம் நாள் கூட்டத்தில் அவரை அலைக்கழித்துக் கொண்டிருந்த அசுத்த ஆவி அவரை விட்டு ஓடினது. இதன் விளைவாக அவரது முழுக்குடும்பமும் கிறிஸ்தேசுவின் மேலுள்ள விசுவாசத்தை அறிக்கை செய்தனர். தேவனுக்கே எல்லாத் துதியும் கனமும் மகிமையும் உண்டாவதாக!*

## 22 அக்டோபர்
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஜெபராணி அசரியா ராஜ்குமார்
திருமதி. மரிதாய் லியோனா பிரத்யூஷ்

### பாலி:
### ராபின்சன் ஹஸ்தக் & ஜான்சி

**துதிக்க:** புதிதாக 5 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. தக்தோயா கிராமத்தைச் சார்ந்த 5 நபர்கள் இயேசுகிறிஸ்துவின் அன்பிற்குள் வந்துள்ளனர் தக்தோயா கிராம ஆலயக் கட்டுமானப் பணிக்கென்று ஒரு பகுதி நிலத்தை வழங்குவதற்கு தேவன் அமர்சிங்கிற்கு உதவி செய்தார். பின் வாங்கிப்போன நமது விசுவாசி கணேஷ் மறுபடியும் நமது சபை ஆராதனைகளில் தவறாமல் கலந்துகொள்ள ஆரம் பித்துள்ளார். கோராமர், பிரங்கிபாரா, குசம்கேரா மற்றும் சில்லி கிராமங்களில் புதிதாக பஜன் கூடுகைகளை நடத்த உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடியா சபையின் உள்ளூர் போதகராக நியமிக்கப்பட்டுள்ள நீட்டு விற்குத் தேவையான வல்லமையையும், ஊழியத்தை உற்சாகமாய்ச் செய்யக்கூடிய கிருபைகளையும் தேவன் தர; காஞ்சன்பூர் ஆலய நிதிப் பொறுப்பாளராக இருக்கும் தரம்சந்த் குடும்பத்தில் நிலவும் பொருளா தாரப் பிரச்சனைகள் தீர; புதிய தொடர் பாளர்களான சந்திரிகா, பைரன், மனோஜ், ராம்குமார், சூரஜ் விசுவாசத்தில் பெலப்பட; காஞ்சன்பூர் சபை மக்கள் ராஜ்குமார், ஹர்பயரி, ராம்குமார் ஆகியோர் அடிமைப் பட்டிருக்கும் புகையிலை போடும் பழக்கத்தி லிருந்து முற்றிலும் விடுதலை பெற; தனஞ்ஜெய், நிஷா, மீனாபாய், ராஜு, பிங்கி, ராஜ்குமாரி, அஜய் ஆகிய புதிய விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியடைய; புதிய தொடர்பாளர்களான அஜோராம், முஹித்ராம், பிரேம்வதி, சவானா, தஸ்மத்பாய், சாய்பாய், ஈஸ்வரி, நந்தகுமாரி, பிரகாஷ்சந்த், அவரது மனைவி மற்றும் பெற்றோர் ஆகியோர் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை தைரியமாய் முன்வந்து அறிக்கையிட; சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள கபடா, குட்டர்குடி, மங்லி, கட்டியோடியா, சுரஜ்பூர், ஷிவ்பூர், பர்ஸாடா, சராய்சட், தின்டௌரி, மதன்பூர், ராம்கிபூர் கிராமங்களில் உள்ள மக்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

### சீத்தாபூர்:
### பத்வி சோமாலியா & மஹாலா ஷீலாபேன்

**துதிக்க:** புதிதாக 13 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நமது திட்ட அட்டவணைப்படி எல்லாப் பகுதிகளிலும் பின்தொடர் பணி ஊழியங்களைச் செய்ய தேவன் உதவி செய்தார். நமது விசுவாசிகள் பயிரிடுவதற்குத் தேவையான நல்ல மழையைக் கொடுத்து ஆசீர்வதித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சபை ஆராதனைகளில் கலந்து கொள்ளாமலிருக்கும் நமது விசுவாசிகள் பல்ராம், பல்ஸாய், ஷிவ்பிரசாத், வினோத் குமார், நரேந்திரா, சுரேந்திரா அனில், சுகு, புதனு, கோஸ்நாத், பன்னலால், சுனில், ஷில்வெஸ்டர், நரேஷ், ஷூட்டி, கிவியோரா ஆகியோர் மனம் மாறி தவறாமல் சபை ஆராதனையில் கலந்துகொள்ள; நமது விசுவாசிகள் மன்பஹால் & சுக்குமணி மழலை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட; மாதசரி சபை நிலத்தகராறு சுமூகமாகத் தீர்க்கப்பட ஜெபிப்போம்.

## 23 அக்டோபர்
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஜெயந்தி கிரேஸ் ஜெபக்குமார்

### பாண்டே: பாபுஜி முர்மு & வையலட் ஹன்ஸ்தா

**துதிக்க:** பாகுர்கல் திருச்சபையிலுள்ள விசுவாசி முரிக்கோவாச்சி சகவிசுவாசிகளுடன் ஏற்பட்ட தவறான புரிந்துகொள்ளுதலினால் சபையை விட்டு விலகிப்போயினும், மறுபடியும் மனம்மாறி சபைக்குக் கடந்துவர தேவன் உதவி செய்தார். பப்லி நரோடி, ரித்தேஷ் நரோடிக்கு வைரஸ் தொற்றுநோயிலிருந்து சுகம் கொடுத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அநேக எதிர்ப்புகளின் மத்தியில் இயேசுவை ஏற்றுக்கொண்ட நமது புதிய விசுவாசி ராஜு ஒர்தே தேவனுடைய வார்த்தையில் நிலைத்து நிற்க; புதிய தொடர்பாளர்கள் தாங்கள் அடிமைப் பட்டிருக்கும் குடிப்பழக்கத்திலிருந்து முற்றிலும் விடுதலையடைய; பிலிப் தோப்போவின் குழந்தை நெஞ்சு வலியிலிருந்து குணமடைய; மத்யா, அபுஜ் மதியா இனமக்கள் இரட்சிக்கப்பட பாரத்தோடு ஜெபிப்போம்.

## குஜராத்

### பாஜிபுரா:

### மார்கஸ் மால்தோ & சாரா மார்கஸ்

**துதிக்க:** முதன்முறையாகத் தனித்தாள் சுவிசேஷ ஊழியம் செய்ததின் விளைவாக 60 பேருக்கு சுவிசேஷம் சென்றடையவும், பத்து வேதாகமங்கள், பத்து புதிய ஏற்பாடு பிரதிகள் விநியோகிக்கவும் தேவன் கிருபை செய்துள்ளார். ராஜு பாய், ரவ்ஜீபாய் ஆகியோர் தன்னார்வமாக ஊழியம் செய்ய முன் வந்துள்ளனர். நமது விசுவாசிகளின் பிள்ளைகளான தானியேல், ஆகாஷ், ருத்துட், ஆகியோர் அவர்களது குடும்பங்களை ஆதரிக்கும்படியான வேலை கிடைக்க தேவன் கிருபை புரிந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காசுவாவ், பூத்வாடா ஆகிய கிராமங்களில் நடைபெறும் ஜெபக் குழுக்களில் கலந்து கொள்ளும் விசுவாசிகளின் மத்தியில் எழுப்புதல் உருவாகவும், ஜெபக்குழுக்கள் சுமூகமாக நடைபெறவும்; பாகுமாரா கிராமத்தில் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டும் ஏழு நபர்கள் கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; வாலிபர்கள் ஆலய காரியங்களில் அதிகமாகப் பங்கெடுக்க தேவன் உதவி செய்ய ஜெபிப்போம்.

## படைப்புகளை விட்டுப் படைத்தவரை சேவித்தல்!

*உத்தரகாண்ட் மாநிலம், நானக்மட்டா பணித்தளம். இஸ்லாம் நகரிலுள்ள புதிய தொடர்பாளரான சர்ஜீத் கௌர் குடும்பத்தினர் மூன்று தலைமுறைகளாக அரச மரத்தை வணங்கி வந்தனர். அசுத்த ஆவிகளின் தொந்தரவினால் குடும்பத்திலுள்ள இரண்டு நபர்கள் சமீபத்தில் இறந்துவிட்டனர். மிகுந்த பயத்தோடும், நடுக்கத்தோடும் குடும்பத்திலுள்ள பிற நபர்களை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடனும் சர்ஜீத் நமது மிஷனெரிகளை அணுகி, அவர்களைத் தனது வீட்டிற்கு ஜெபிக்கும்படி அழைத்தார். நமது மிஷனெரிகள் மிகுந்த பாரத்துடன் மூன்று நாட்கள் தொடர்ந்து ஜெபித்தனர். ஜெபத்தின் பலனாக தேவன் இவருடைய முழுக்குடும்பத்தையும் மரண பயத்திலிருந்து விடுதலையாக்கினதுமல்லாமல், சிருஷ்டிப்பை வணங்காதபடி சிருஷ்டி கர்த்தாவாகிய தேவனை நோக்கி ஆராதனை செய்யவும் கிருபை பாராட்டினார். எல்லாத் துதியும் கனமும் மகிமையும் தேவனுக்கே உண்டாவதாக!*

## 24 அக்டோபர் ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பியூலா ஜெபக்குமாரி பர்னபாஸ்
திருமதி. சீத்தாமணி கிஸ்கு

### மோட்டபொண்டா:

**சாமுவேல் சுப்பிரமணி & சுசிலா**

**துதிக்க:** உனாய் பணித்தளத்தில் கோலி சமுதாயத்தினரில் 95 பேர் கிறிஸ்துவை இரட்சகராக அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். பொய் வழக்கு கொடுத்த தினிமித்தம் கடந்த இரண்டரை வருட மாகச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நமது காட்சிக்லா திருச்சபை விசுவாசிகள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட தேவன் உதவி செய்தார். தொற்றுநோய்ப் பரவலுக் குப்பின் அனைத்து மாலை ஜெபக் கூடுகைகள், ஆலய ஆராதனைகளை மீண்டும் நடத்த தேவன் அநுக்கிரகம் பாராட்டினார். கோர்டி கிராமத்தின் விசுவாசி ஒருவர் அப்பகுதியில் ஆலயம் கட்ட நிலத்தை நன்கொடையாக வழங்கி யுள்ளார். தொற்று முடக்குதலின் சமயத்தில் வேலையை இழந்த நமது விசுவாசி ஜீத்தேஸ்பாய்க்கு மீண்டும் வேலை கிடைக்க தேவன் உதவினார். பத்தேபூர், வரோலி, ஓஜெர் ஆகிய கிராமங்களில் கட்டப்பட்டு வரும் ஆலயக்கட்டுமானப் பணிகள் கதவு நிலைகாலளவில் வருவதற்கு தேவன் கிருபை செய்தார். பவாரியா கிராமத்தைச் சார்ந்த நமது விசுவாசி ராமன்பாய் காட்டில் ஒரு நல்ல பழத்தை அடையாளம் கண்டு, அதைச் சந்தையில் விற்று தனது வாழ்வாதாரத்தைச் சந்திப்பதற்கு உதவின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசி பாலாஜிபாய் இயேசுகிறிஸ்துவை அறிக்கையிட்டதினால் அவருக்கு மறுக்கப்பட்ட அவரது குடும்பச் சொத்துக்களைத் திரும்பப் பெறுவதற்கு தேவன் கிருபை செய்ய; ஆலயக்கட்டுமானப் பணி வேலைகள் குறித்த நேரத்திற்குள் முடிக்கப்பட; தன் சொந்தக் குடும்பத்தினரால் எதிர்ப்புக்களைச் சந்திக்கும் சாந்திபேன் என்பவர் விசுவாசத்தில் வேரூன்றி நிலைத் திருக்க; தாப்லோன் கிராமத்தில் ஆலயம் கட்ட நல்ல நிலம் கிடைக்க; தேவையற்றப் பிரச்சனைகளை உருவாக்கும் சுதேச ஊழியரான மகேஷ்பாயின் மனந்திரும்பு தலுக்காக; இப்பணித்தளத்தில் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் நமது ஊழியரின் பயனுள்ள ஊழியத்திற்காக ஜெபிப்போம்.

### சூரத்:

**மாதவராய் & ஜெபதங்கம்**

**துதிக்க:** புதியதோர் கிராமத்தில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரா ஆகிய இடங்களிலிருந்து புதிதாகப் புலம் பெயர்ந்த மக்கள் ஆலய ஆராதனைகளில் கலந்து கொள்கிறார்கள். நமது விசுவாசி சமீரின் வாழ்வாதாரத் திற்காக நல்ல வேலை கிடைக்க தேவன் உதவி செய்தார். கீதாபேன் டெங்கு காய்ச்சலிலிருந்தும், நிகுஜ் வலிப்பு நோயிலிருந்தும் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சமீபத்தில் தன் கணவரை இழந் திருக்கும் சீமாபேனின் ஆறுதலுக்காகவும், ஆறுதலின் தேவன் மீது அவர் அதிகமாக நம்பிக்கை வைக்கவும்; பிசாசின் பிடியி னால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் சரிதா, சகுந்தலா, கவிதா ஆகியோர் அற்புதமாக விடுதலை பெற்றுக்கொள்ள; கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்த மாயிருக்கும் 12 நபர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; ஆலய ஆராதனைகளில் கலந்துகொள்ள விடாதபடி தடுக்கும் அனிதாபேனின் கணவர் மனந்திரும்ப; பாவா நகர் கிராமத்தில் பெண்கள் கூடுகை நடத்தப்பட ஜெபிப்போம்.

## 25 அக்டோபர்
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. பிரேமா ராஜதுரை N.

### தனக்லா:
**ஆசீர் மோசஸ் & அமிர்தா கோல்டா**

**துதிக்க:** தல்புரா கிராமத்தில் புதிதாகச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பிச்சிபுரா கிராமத்தில் நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சி மூலம் அநேகர் ஆசீர்வதிக்கப்பட்டனர். கராட்டி கிராம கோபால்பாய் குடும்பம் சுவிசேஷத்தை ஆர்வமாய் கேட்கின்றனர். வாவியாரா மக்கள் மத்தியில் சுவிசேஷத்திற்கான வாசலைத் திறந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிச்சிபுரா, தல்புரா கிராமங்களில் இன்னும் அதிகமாகச் சுவிசேஷம் அறிவிக்கப்பட திறந்த வாசலை தேவன் உண்டாக்க; நமது விசுவாசிகள் சங்கீதா & சுரேஷ் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட; சஞ்சனாபாய் & ஈஸ்வர்பாய் குடும்ப வாழ்க்கையில் அமைதியும் சமாதானமும் நிலவ; வாவியாரா கிராமத்தில் ஆலயம் கட்டுவதற்குத் தேவையான நிலம் கிடைக்க; சுக்லிவாசன் கிராம சஞ்சய்பாய் புற்றுநோயிலிருந்து குணமாக்கப்பட ஜெபிப்போம்.

## மகாராஷ்டிரா

### தஹானு: சங்கர் & ஆனந்தி

**துதிக்க:** ஷெரி, கொடிபிபாடா, நாபர்பாடா, தலோட்டி, சவ்தபாடா ஆகிய கிராமங்களில் கிறிஸ்துவின் நற்செய்தி விதைக்கப்பட்டுள்ளது. காடிபிபாடா கிராமத்தில் அனில்பாய், சுரேஷ்பாய், ராஜேஷ்பாய் ஆகியோர் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டுகின்றனர். குடும்பப் பிரச்சனையினால் தற்கொலைக்கு முயன்ற சங்கீதாபேன் அற்புதமாகப் பாதுகாக்கப்பட்டார். ஜார்லி கிராமத்தின் விசுவாசிகளுக்கு கிறிஸ்தவ முறைப்படி ஒரு அடக்க ஆராதனை நடத்த தேவன் உதவினார். பற்பல வியாதியிலிருந்து வனிதாபேன், மங்கிபேன், ஜெய்வந்திபேன் ஆகியோர் சுகம் பெற்றுள்ளனர். கொடிபிபாடா, அம்பிசாரி ஆகிய கிராமங்களில் பின்தொடர் பணி செய்ய தேவன் கிருபை நல்கினமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜார்லி திருச்சபையினர் ரய்தாலே என்ற இடத்தில் ஆலயம் கட்ட உள்ள நிலத்திற்கு அனுமதி கிடைக்க; மத்தில்பாடா கிராம விசுவாசிகள் தங்கள் சொந்த கிராமத்தினர் மற்றும் கிராமத்தலைவர்களின் எதிர்ப்புகளின் மத்தியில் கிறிஸ்துவின் மீது அதிக விசுவாசத்தில் உறுதியாய் இருக்க; புதிதாக வந்திருக்கும் விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; ஊழியத்திற்குப் பலவிதங்களில் தடை செய்யும் மத்தில்பாடா, அம்பிசாரி, வாரிபாடா ஆகிய கிராம மக்கள் மனந்திரும்பி கிறிஸ்துவை அறிக்கையிட ஜெபிப்போம்.

## *விரோதி தீவிர விசுவாசியானார்!*

*ஜார்க்கண்ட், ஜகன்நாத்பூர் பணித்தளம், நர்சிங்பூர் கிராமத்தலைவரின் பெயர் பால்மதி தாம்சய். இவர் ஒரு பெரும் ஐசுவரியவான் என்பதால், சுவிசேஷத்திற்குப் பலவிதங்களில் எதிர்ப்பு தெரிவித்து வந்தார். இவருடைய இரு சகோதரிகளின் கணவன்மார்களும் ஒருவர்பின்னொருவராக திடீரென மரித்துப் போயினர். அதனால் இவரது குடும்பம் நிம்மதியை இழந்தது. எனவே சமாதானத்தைத் தேடி, நமது சுவிசேஷ கூட்டத்திற்கு குடும்பமாக வந்து பங்கேற்றனர். கர்த்தர் அவர்கள் இதயங்களைத் தொட்டார். கர்த்தருக்கு விரோதமாய் இருந்த இவரது இதயம் கர்த்தரை விசுவாசிக்கத் தொடங்கியது. இன்று கரிகுடியா திருச்சபையினரோடு இணைந்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அவர்கள் அனைவரும் தொழுது வருகின்றனர். அல்லேலூயா!*

## 26 அக்டோபர்
செவ்வாய்

### டெக்கான் பிராந்தியம்:
**விஜயன் & ஜெபரோஸ்**

**துதிக்க:** புதிதாக 10 கிராமங்களில் சுவிசேஷம் சொல்லப்பட்டது. 26 பேர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். பார்திகுடா, அசிஃபாபாத் ஆகிய கிராமங்களில் புதிதாக ஆராதனைக் குழுக்கள் உருவாக, பாண்டர்காவ்டா பணித்தளத்தில் பார்வா பகுதியில் காணப் படும் மக்கள் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டுகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாகத் திறக்கப்பட்ட ஜிம்ம லாகட்டா, பாண்டே ஆகிய பணித் தளங்களில் அநேக ஆத்துமாக்கள் கிடைக்க; புறநகர் மையங்களான ஹட்டா, இர்பனார், தாபா, பரே ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு நல்ல திறந்த வாசல் உருவாகி, அநேக மக்கள் கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; புறநகர் பகுதியான வீருர், அம்ருத்குடா, ஹத்திகுடா, பார்வா, போடிகாவ், ஜிவட்டி, சோட்டேபட்டியா ஆகிய பகுதிகளில் சுவிசேஷம் அறிவிக்க அர்ப்பணமுள்ள தன்னார்வ ஊழியர்கள் நியமிக்கப்பட; நமது ஊழியர்கள் மற்றும் சுதேச ஊழியர்கள் சுவிசேஷம் அறிவித்தக் கிராமங்களில் ஆராதனைக்குழுக்கள் உருவாக்கப்பட; ஆலப்பள்ளி விடுதியில் படிப்பை முடித்த மாணவர்கள் எங்கிருந்தாலும் தேவனுக்குப் பிரியமாய்ச் சாட்சியுள்ள வாழ்க்கை வாழவும், கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்து ஆவிக்குரிய ஜீவியத்தில் வளரவும் தேவன் கிருபை பாராட்ட; மனநோயினால் அல்லல்படும் ஜனோபாய் மற்றும் சூசம்மா, பற்பல வியாதியினால் அவதியுறும் ஹம்சாபாய் அற்புதமான சுகத்தைப் பெற்றுக்கொள்ள; மிஷனெரிகள் ஊழியம் செய்யும் 242 கிராமங்களிலும் நல்ல புதிய தொடர்பாளர்கள் கிடைக்க ஜெபிப்போம்.

### காண்ட் பாரா:
**பாலாஜி நெட்டாலம் & ஜெகதீஷ்வரி**

**துதிக்க:** புதிதாக இரண்டு கிராமங்களில் சுவிசேஷ விதை விதைக்கப்பட்டுள்ளது. இரண்டு குடும்பத்தினர் கிறிஸ்துவை இரட்சகராக அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். விசுவாசத்தில் பின்வாங்கி யிருந்த மங்கல்தாதா, துயாசி ராம் ஆகியோர் மீண்டும் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். மௌலிபாடாவில் நடைபெற்ற முதியோர் கூடுகை மற்றும் மூன்று நாட்கள் தேசிய உபவாச ஜெபம் ஆசீர்வாதமாக நடைபெற தேவன் உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டும் கலா, நிர்மலா ஆகியோர் கிறிஸ்துவை அறிக்கையிட, வந்தனாபேன் வயிற்றுப் பிரச்சனையிலிருந்தும், சிவாராம் தாதா மூல வியாதியிலிருந்தும், மம்தா சிக்கில் செல் நோயிலிருந்தும் அற்புதமான சுகத்தைப் பெற்றுக்கொள்ள; காசாரா, கலம்பா, ரணாலா, ஜால்காவ், கஜுமந்த் பாடா ஆகிய இடங்களில் நடைபெற விருக்கும் பின்தொடர் பணிகள் ஆசீர் வாதமாக நடந்தேற; அநேக விதங்களில் சுவிசேஷத்திற்குத் தடைசெய்யும் பிரகாஷ், கிரண், பிரதாப், வீர்சிங், வினோத், தினேஷ் ஆகியோர் மனந் திரும்பி கிறிஸ்துவை அறிக்கையிட; டாங் கிராமத்தில் ஆலயக்கட்டுமானப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்பட கருத்தாய் ஜெபிப்போம்.

## 27 அக்டோபர்
புதன்
உபவாச ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ஜாண் M.

### தலாசரி:
**விஜய்பாபு & தேவ கிருபை**

**துதிக்க:** புதியதோர் கிராமத்தில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. 70 பேர் மலர்ச்சி பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். புதிய தோர் திருச்சபை உருவாக்கப்பட்டது. வயிறு எரிச்சலிலிருந்து ரஞ்ஜனாபேனும், நெஞ்சுவலியிலிருந்து வந்தனாபேனும், சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்து பாச்சுபாயும் சுகம் பெற்றுள்ளனர். கங்கா ராம் குடிப்பழக்கத்திலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நம்முடைய சுதேச ஊழியர்களை, விசுவாசிகளை அச்சுறுத்தும் சங்கரின் மனந்திரும்புதலுக்காகவும், விசுவாசிகள் விசுவாசத்தில் நிலைத்திருக்கவும் தேவன் கிருபை செய்ய; வயிற்று புற்றுநோயினால் கஷ்டப்படும் காசிபேன் பூரண சுகம் பெற; ரசுலாபேன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

### சிந்கேடா துணை - வடாலி:
**ஜக்மோகன் சிங் & ஸ்வாதி**

**துதிக்க:** ஜாட்டுடா, சிம்தானே ஆகிய கிராமங்கள் சுவிசேஷத்தால் சந்திக்கப் பட்டுள்ளன. நமது மிஷனெரியை வாகன விபத்திலிருந்து அற்புதமாகப் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரண்டு நபர்கள் புதிதாக ஆலய ஆராதனையில் பங்கு பெறுகின்றனர். கிறிஸ்தவ நற்பண்புகளிலிருந்து வழி தவறிய சதுர்கி கிராமத்தின் விசுவாசிகளின் மனந்திரும்புதலுக்காக; நமது விசுவாசி யான லதாபாயின் வீடு விரைவில் கட்டி முடிக்கப்பட; நீலாபாய் அனைத்து குடும்பப் பிரச்சனையையும் சமாளித்து, தேவனின் மீதான நம்பிக்கையில் உறுதியாக நிற்க; கலாதி கிராமத்தின் பாபா பிசாசின் பிடியி லிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

### மொல்கி: பரணிதரன் & செல்வராணி, பித்யுத் குமார் சிங்

**துதிக்க:** புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஜமானா பகுதியில் நடைபெற்ற இரவு ஜெபக் கூடுகையில் 25 நபர்கள் முதன் முதலாக கலந்து கொண்டு சுவிசேஷத் திற்குச் செவிசாய்த்து ஆசீர்வதிக்கப் பட்டனர். பர்கண்ட், தாப், தரபாடா, வால் கேடி, பௌதி, மதியாபரி கிராமங்களில் நமது விசுவாசிகளே இணைந்து இரவு ஜெபக்கூடுகைகளை நடத்துகின்றனர். பர்கண்ட்,. ஒல்பாடா, கோஞ்சி, கித்தாபரி கிராமங்களில் நடத்தப்பட்ட பெண்கள் கூடுகைகளில் அநேகர் சிறப்பாக ஆசீர் வதிக்கப்பட்டனர். ஊரடங்கிற்குப் பிறகு பன்பாரி, மோக் சபைகளில் மறுபடியும் ஆராதனைகள் துவங்க தேவன் கிருபை பாராட்டினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வாரி கிராமத்தில் சுவிசேஷத்திற் கான வாசல்கள் திறக்கப்பட; புதிதாக சபை ஆராதனைக்குக் கடந்து வரும் ஓர்தி கிராம ஜேத்துபாய், சப்தி கிராம முண்டு இவர் களின் தொண்டையில் காணப்படும் கட்டிகள் மறைய; வன்யதாதாவிலுள்ள விசுவாசக் குடும்பங்கள் இரட்சிக்கப்பட; இரத்த சம்பந்தமான நோயிலிருந்து தன்னார்வ ஊழியர் உவ்ரேஷ் சுகம் பெற; ராகேஷ் சிறுநீரகக்கல் பிரச்சனையி லிருந்து சுகம் பெற; ஹீராபாயின் கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெறவும், சபை ஆராதனைக்கு மனைவியைத் தடை செய்யும் இவரது குணங்கள் மாறி மனந் திரும்பவும் ஜெபிப்போம்.

## 28 அக்டோபர்
வியாழன்

# கர்நாடகா

## கோலார்:

### சாமுவேல் பெபர்தா

**துதிக்க:** எட்டு கிராமங்களில் புதிதாகச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புறநகர் ஊழிய நிகழ்ச்சியின் மூலம் 70 பேர் கிறிஸ்துவை அறிந்துள்ளனர். நமது புதிய தொடர்பாளர்களான சிவானி, ரோஜா, முனியம்மா, வெங்கடேசப்பா, பிரசன்னா, கங்காராஜு, மஞ்சுநாத், ரவிகுமார், மனோஜ் ஆகியோர் சுவிசேஷத்தின் மீது நம்பிக்கை வைத்து ஆர்வம் காட்டி வருகின்றனர். நமது விசுவாசிகளான பவன், சின்னப்பா குடும்பம் ஆகியோரின் வாழ்வாதாரத்திற்காக தேவன் நல்ல வேலைகளைக் கட்டளையிட்டார். லதா பிசாசின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற அருள் புரிந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக ஆராதனையில் கலந்து கொள்ளும் பார்வதி, ரூபா, ரகு, ஷில்பா, தர்ஷன் ஆகியோரின் இரட்சிப்பிற்காக; எதிர்ப்புகளைச் சந்தித்து வரும் இடுகூர் கிராமத்தைச் சார்ந்த நமது விசுவாசிகளான லக்ஷ்மம்மா, ஆனந்த் ஆகியோர் விசுவாசத்தில் நிலைத்திருக்கவும், தேவப் பாதுகாப்பிற்காகவும்; வாகன விபத்தினால் வாகனம் சேதமடைந்த பிரபுவிற்கு தேவன் தேவைகளைச் சந்திக்க; ஆலய மூப்பர்கள் ஆலயத்தைச் சரியான முறையில் செயல்படுத்தத் தேவையான பயிற்சிகள் கொடுக்கப்பட; சத்திரகலா கிராமத்தைச் சார்ந்த நாகபூஷன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெறவும், நல்ல வேலை கிடைக்கவும் ஊக்கத்தோடு ஜெபிப்போம்.

## மாலூர்:

### கிஷாந்த் லிமா & பிரமிளா சிங்

**துதிக்க:** இரண்டு கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. இரண்டு பேர் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். காது கேளாமலும் மற்றும் வாய்ப் பேச முடியாமலும் இருந்த மூன்று வயது சிறுவனை தேவன் சுகப்படுத்தினார். தவறான போதனைகளால் சிதறிப் போகாதபடி ஆலம்பாடி கிராம ஆலய விசுவாசிகள் தவறாமல் ஆலயத்திற்கு வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்தமாயிருப்போர் தைரியமாய் அறிக்கையிட; மாலூர் ஆலய ஆண்டு விழா கொண்டாட்டம் சுமூகமாக நடைபெறவும், விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்க்கையைப் புதுப்பிக்கவும் புத்துயிர் பெறவும், ஜெபிப்போம்.

## வேமகல் :

### பால் சம்பத் & ராஜம் சம்பத்

**துதிக்க:** விசுவாசிகளின் கூடுகை, சிறு குழுத்தலைவர் பயிற்சி, பெண் தலைவர்கள் பயிற்சி ஆகியவை நமது விசுவாசிகளின் ஆதரவுடன் ஆசீர்வாதமாக நடந்தேறியது. நமது விசுவாசி ஸ்ரீராம் உடல்நலக் குறைவினால் கஷ்டப்பட்ட நாராயணனுக்காக ஜெபித்தபோது தேவன் சுகத்தைத் தந்தார். ஜெபத்தின் மூலம் காந்த முரளியின் தனது இரண்டு ஏக்கர் நிலத்தில் பயிரிட தேவன் உதவினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஸ்ரீராம் குடும்பத்தில் காணப்படும் பிரச்சனையில் அமைதியான சூழ்நிலை நிலவ தேவன் உதவி செய்ய; நமது விசுவாசி முனிராஜின் நிலப் பிரச்சனை சுமூகமாகத் தீர்க்கப்படவும், விபத்தினால் காலில் ஏற்பட்ட காயத்திலிருந்து அவரது மகன் விரைவில் குணமடையவும் கருத்தாய் ஜெபிப்போம்.

# 29 அக்டோபர் வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஹட்நெயில்ஹிங் தல்சாகம்

**ஸ்ரீனிவாசபுரா: சுஷ்ஜிதா சேனாபதி**

**துதிக்க:** புதிதாக ஐந்து கிராமங்களில் சுவிசேஷம் சென்றடைந்துள்ளது. 180 பேர் முதன் முதலில் சுவிசேஷத்திற்கு செவிமடுத்தனர். நமது விசுவாசி ரக்சிதா பெரிய விபத்திலிருந்து ஜெபத்தின் மூலம் பாதுகாக்கப்பட்டார். ஆலயக் கட்டுமானப் பணிகள் தடையின்றி நடைபெற்று வருகிறது. காணாமல் போன மௌலா என்ற நான்கு வயதான சிறுவன் சில நாட்களுக்குப் பிறகு ஜெபத்தின் மூலம் வீடு திரும்பினதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்தமாயிருக்கும் ரக்சிதா, நந்தினி, ரேஷ்மா, சஞ்ஜய் ஆகியோரின் ஆவிக் குரிய வளர்ச்சிக்காக; விசுவாசிகளின் குழந்தைகளுக்கான கல்வி நிலை முறைப்படுத்தப்பட்டு, அவர்கள் ஆவிக் குரிய நிலையிலும் வளர; சிறுநீர் தொற்று காரணமாக அவதிப்பட்டு வரும் நாராயணம்மாவை தேவன் குணமாக்க; அஞ்சம்மாவின் குடும்பத்தேவைகள் அவரது சிறுத்தொழிலின் மூலம் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று ஊக்கத்தோடு ஜெபிப்போம்.

**தென் மண்டலம்: ஜெபராஜ் சாமுவேல் & ஜெய சௌந்தரி**

**துதிக்க:** புதிதாக இரண்டு திருச்சபைகளை உருவாக்க தேவன் உதவி செய்தார். வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் மூல மாகப் பெரும்பாலும் 50 கிராமங்களை தேவன் ஆசீர்வதித்தார். தேவனுடைய கிருபையால் எல்பர்கா கிராமத்தில் அநேக புதிய தொடர்பாளர்கள் கிடைத்தனர். நமது மூத்த மிஷனெரி பால் சம்பத் விலா எலும்பு முறிவிலிருந்து சுகம் அடைந்து வருவதற்காகதேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோவிட்-19 பாதிப்பினால் நிறுத்தப்பட்டிருந்த நமது ஜீப் குழு ஊழியங்கள் மறுபடியும் துவங்கப்பட; நமது சபைகள் தொடர்பான ஆவணங்களை அரசாங்கம் கோருகிற வண்ணமாக நாம் சரிசெய்து முடிக்க தேவன் நமக்கு உதவி செய்யும்படியாக; ஸ்ரீனிவாசபுரா சபை கட்டுமானப்பணி சீக்கிரமாய் முடிக்கப்பட; நமது சுதேச ஊழியர் ஜாண்சனின் குழந்தை சமீபத்தில் இறந்ததினிமித்தம் அப்பெற்றோர்களின் மனஆறுதலுக்காக; நமது மிஷனெரிகள் விஜயகுமார் டெங்கு காய்ச்சலிலிருந்தும், வினயராஜ் மூளைக்கட்டியிலிருந்தும், கென்னத் கரியப்பா நுரையீரல் தொற்றிலிருந்தும் சீக்கிரமாகக் குணமடைய ஜெபிப்போம்.

## தெலங்கானா

**அசிஃபாபாத்:**
**வசாவா ரமேஷ்பாய் & சுனிதாபேன்**

**துதிக்க:** புதிதாக 17 நபர்கள் இயேசு கிறிஸ்துவண்டை வந்துள்ளனர். புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. கோஸ்தாலா கிராமத்தில் 4 குடும்பங்கள் சுவிசேஷத்தின்மீது வாஞ்சை காட்டுகின்றனர். லாவண்யாவிற்கு கர்ப் பப்பை நோய்த்தொற்றிலிருந்தும், தாரம் மாவிற்கு கால் வீக்கத்திலிருந்தும் சுகம் கொடுத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பஞ்சாரா பகுதியிலுள்ள தும்ம குடா, பாபுநகர், மிட்கெட் ஆகிய 3 கிராமங்களில் உள்ள மக்களிடையே மாபெரும் மறுமலர்ச்சியை தேவன் தர; பில்லி சூனியங்களைச் செய்து நமது ஊழியத்திற்கு எதிர்ப்பாகச் செயல்படும் கணபதியின் மனந்திரும்புதலுக்காக; இருதய கோளாறினால் துன்புறும் குழந்தை பவனுக்காக ஜெபிப்போம்.

## 30 அக்டோபர்
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
செல்வி. எஸ்தர் G.

# ஆந்திரப் பிரதேசம்

## தாமலச்செருவு:

### பிரசாந்த் மீசலா & ரூபா குமாரி

**துதிக்க:** பண்டபகலா, கண்ட்லபள்ளி ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் சென்றடைந்துள்ளது. எர்ராபள்ளி, குண்டலபள்ளி ஆகிய பகுதிகளில் செய்யப்பட்ட தனித்தாள் சுவிசேஷ ஊழியத்தை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்தார். நமது விசுவாசிகள் தல்லுபுலப்பள்ளி கிராமத்தில் வசிக்கும் உறவினர்களுக்கு நற்செய்தியை அறிவித்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஒய்.எஸ். கேட், பண்டபகலா, மொரானப்பள்ளி, கண்ட்லபள்ளி, கஜுல மண்டியம் ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு செவிமடுத்தவர்கள் கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; நாராயணரெட்டிப்பள்ளி கிராமத்தைச் சார்ந்த மணிம்மா, ஹொல்லப்பள்ளியைச் சார்ந்த கல்பனா, பிலிகுண்டலபள்ளியைச் சார்ந்த ஜோதி, எர்ராபள்ளியைச் சார்ந்த பார்கவி ஆகிய புதிய தொடர்பாளர்கள் தைரியமாகக் 'கிறிஸ்துவே தேவன்' என்று அறிக்கையிட; கஜுலமண்டியம் கிராமத்தைச் சார்ந்த மகேஷ், கண்ட்லப்பள்ளி கிராமத்தைச் சார்ந்த தனசேகர் ஆகியோரின் இரட்சிப்பிற்காக; சின்ன சுப நாயுடு சிறுநீரகப்பிரச்சனையிலிருந்தும், நாகவர்தனம்மா புற்றுநோயிலிருந்தும் அற்புதமான சுகத்தைப் பெற்றுக்கொள்ள மன்றாடி ஜெபிப்போம்.

## மதனபள்ளி:

### வெங்கடேசன் & சசிகலா

**துதிக்க:** புதிதாக 12 பேர்கள் ஆலய ஆராதனையில் தவறாமல் கலந்து கொள்கின்றனர். சுகாலிகா சமுதாய மக்கள் மத்தியில் சுவிசேஷம் சென்றடைய திறந்த வாசல் உருவாகியுள்ளது. பய்ரெட்ல வாரிப்பள்ளி, பீமகனிபள்ளி ஆகிய கிராமங்களில் புதிதாகச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் டேவிட் குடும்பம் ஆலயம் கட்டிக்கொடுக்க முன் வந்துள்ளனர். அம்மசெருவுமிட்டா கிராமத்தில் சிறுஜெபக்குழுவும், தெக்குல பாளையம் காலனியில் ஆராதனைக் குழுவும் உருவாக்கப்பட தேவன் உதவினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தெண்டுலுரு பகுதியில் ஆலயம் கட்ட தேவையான நிலம் கிடைக்க; தெண்டுலுரு, தெக்குலபாளையம் ஆகிய கிராமங்களில் ஓய்வுநாள் பாடசாலை ஊழியம் ஒழுங்காக நடைபெற; பிசாசின் பிடியிலிருந்து சின்னப்பம்மாவும், பக்கவாதநோயிலிருந்து வெங்கட்ரமணாவும் சுகம் பெற கருத்தோடு ஜெபிப்போம்.

## கலக்கடா: வேடியப்பன் & லக்ஷ்மி

**துதிக்க:** ரெட்டிவாரிபள்ளி கிராமத்தில் புதிதாகச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. தாவனபள்ளி மற்றும் கொத்த பள்ளி சபைகளில் ஞாயிறு வேதாகமப் பள்ளிகளைத் துவங்க தேவன் உதவி செய்தார். நமது விசுவாசி சுதாகர் சுவாசப் பிரச்சனையிலிருந்து சுகமானதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சமீபத்தில் புஷ்பாவின் கணவர் இறந்து போனதினிமித்தம் அவரது குடும்ப ஆறுதலுக்காக; சுசீலா, ராம ஆஞ்சநேயலு குடும்பத்தில் சமாதானமும் அமைதியும் நிலவ; நமது புதிய தொடர்பாளர் கிரிஜா, விஜயகுமார் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

## 31 அக்டோபர்
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. சுச்சானோ யந்தன் த்சாங்சே சங்தம்

# தமிழ்நாடு

## இளம்பிள்ளை:
**வில்சன் & ஜெயா**

**துதிக்க:** ஊரடங்கு காலத்திலும் நமது விசுவாசிகளை இணையதளம் மூலமாக விசுவாசத்தில் வளர்க்க தேவன் கிருபை பாராட்டினார். இந்திராணியின் அறுவைசிகிட்சை நல்ல முறையில் நடந்தேறவும் சுகத்தோடு வீடு திரும்பவும், நமது விசுவாசிகளில் அநேகர் டெங்கு நோயிலிருந்தும், கோவிட்-19 நோய்த் தொற்றிலிருந்தும் சுகம் பெற தேவன் உதவி செய்தார். நமது விசுவாசியின் மகன் ஜெயக்குமாருக்கு பாலிடெக்னிக் பயிற்சியில் இடம் கிடைக்க தேவன் கிருபை பாராட்டியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எட்டிகுட்டைமேடு, ஏகாபரம், சின்னப்பம்பட்டி, வள்ளலார்புரம், காசு பள்ளி, பசலையூர் ஆகிய கிராமங்களில் பின்மாற்றமடைந்துள்ள விசுவாசிகள் மறுபடியும் தேவனை விசுவாசித்து இரட்சிப்பிற்குள் கடந்து வர; செல்வினின் தகப்பனார் மரித்ததினிமித்தம் அவரது குடும்ப ஆறுதலுக்காக; நமது பெண் விசுவாசிகளின் கணவர்கள் குடிப்பழக்கத்தி லிருந்து விடுதலை பெற; சீனிவாசன் வலிப்பு வியாதியிலிருந்து குணமடைய; சில மாதங்களாக வீட்டைவிட்டு வெளியேறி காணாமல் போயிருக்கும் அற்புதராஜ் சீக்கிரமாக வீடு திரும்ப ஜெபிப்போம்.

## *மிதித்தபோதும் பாம்பு தீண்டவில்லை!*

*மத்தியப்பிரதேசம், நேப்பா நகர் பணித்தளம். பம்லாபாட் கிராமத்தைச் சார்ந்த 50 வயது நிரம்பிய நமது பெண் விசுவாசி புர்கிபாய் ஒருநாள் தினசரி வேலைக்கென்று வயலுக்குச் சென்றிருக்கிறார். வேலை செய்து கொண்டிருக்கும்போது, அவர் தன் கால்களின் கீழே மிருதுவான பஞ்சு போன்ற உணர்வைப் பெற்றிருக்கிறார். உடனே கீழே கூர்ந்து கவனித்துப் பார்த்தபொழுது, தான் ஒரு நாகப்பாம்பின்மேல் நிற்பதைக் கண்டார். உடனே குதித்து விலகிப் போனார். ஆனால், கோபமடைந்த அந்தப் பாம்பு படமெடுத்து அவளை நோக்கிச் சீறியது. அருகாமையில் வேலை செய்து கொண்டிருந்த தனது கணவரையும் மகனையும் அந்தப் பெண் அழைக்க, அவர்கள் வந்து அந்த கருநாகத்தைக் கொன்றனர். உண்மையிலேயே அந்தப் பாம்பு அவரைத் தீண்டவில்லை; ஆனால் பாதி இரவில் அவருக்குக் காய்ச்சல் அதிகமாகி வாந்தி எடுக்க ஆரம்பித்தார். எனவே திகிலடைந்த அவருக்குப் 'பாம்பு தன்னைத் தீண்டியிருக்குமோ' என்ற பயமும் சந்தேகமும் வந்தது. அவருடைய கிராமம் சரியான போக்குவரத்து வசதி இல்லாததாயும், மருத்துவமனை வசதிக்கூட மிகத் தொலைவில் இருந்ததாலும் செய்வதறியாது தேவனை நோக்கி ஜெபம் செய்ய ஆரம்பித்தார். இவர் கிறிஸ்துவுக்குள் விசுவாசமுள்ள ஒரு சகோதரி. எனவே, ஜெபத்தைக் கேட்கிற ஆண்டவர், அவருக்குச் சிறிது நேரத்திலேயே பூரண சுகம் கொடுத்தார். காய்ச்சல் போனது! வாந்தி நின்றது! பயமும் விலகினது! அற்புதமாய்ப் பாதுகாத்த தேவனுக்குக் கோடான கோடி ஸ்தோத்திரங்கள். அல்லேலூயா!*

## மிஷனெரி ஆல்பம் 368

மேற்கு வங்காளம், ஜமகதா என்ற கிராமத்தில் கிறிஸ்தவரல்லாத பெற்றோருக்கு 2-வது பிள்ளையாக 20.03.1979-ல் மூத்த சகோதரி ஒருவருக்கும் இளைய சகோதரன் ஒருவருக்குமிடையில் திரு. பிமல் சந்திர முர்மு பிறந்தார். இவர் 5 வயது சிறுவனாகயிருக்கும்போதே தாயார் மரித்துவிட்டார்; தந்தையார்தான் இவர்களை வளர்த்தார். இவரது கிராமத்தில் முதலாவது இயேசுவை விசுவாசித்து ஏற்றுக்கொண்ட இவரது மூத்த உறவினர் ஒருவரின் மூலம் இவர் இயேசுவைக் குறித்து அறியலாயினார். கிரமமாக ஜெபக்கூட்டங்களுக்கும், கிறிஸ்தவ நிகழ்ச்சிகளுக்கும் இவரை அவ்வுறவினர் வழிநடத்தினார். 1996-ம் ஆண்டில் ஒருமுறை இவர் ஒரு ஆலய ஆராதனையில் கலந்துகொண்டபோது, அன்று பேசியவர் இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்துப் பேசினார். அத்தேவசெய்தியின் மூலம் தேவாவியானவர் இவருள்ளத்தில் கிரியை செய்ததின் விளைவாக இவர் இயேசுவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். இவர் தனது இரட்சிப்பின் அனுபவத்தைத் தன்னுடைய நண்பர்களிடமும், உறவினர்களிடமும் பகர்ந்துக்கொண்டார். பின்பு இவர் வித்யாசாகர் பல்கலைக்கழகத்தில் B.A., பட்டப்படிப்பை முடிக்க தேவன் உதவி செய்தார்.

கல்கத்தா வேதாகமக்கல்லூரியில் B.Th., படிக்கும்போது இவருக்கு முழுநேர ஊழியராகச் செல்வதற்குரிய எண்ணமில்லை. பின்பு இவர் பல்வேறு ஆவிக்குரிய கூட்டங்களில் பங்குப்பெறும்போது, தேவன் இவரை முழுநேர ஊழியப்பணிக்கென அழைத்தார். அதன்பின் இவர் ஜார்க்கண்ட், கிரேஸ் வேதாகமக்கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினாலும், அவரது உள்ளம் சுவிசேஷத்தை ஒருமுறைகூட கேட்டிராத மக்கள் மத்தியில் பணிசெய்ய ஏங்கியது. எனவே, 2006-ல் இவர் நமது இயக்கத்தில் முழுநேர ஊழியராக இணைந்து, ஒருவருட மிஷனெரிப்பயிற்சியை உத்தரப்பிரதேசத்திலுள்ள ஜான்சி NIM-ல் நிறைவு செய்து, 2007-ல் மேற்கு வங்காளம், சுந்தர்பான் பணித்தளத்திற்கு முன்னோடி மிஷனெரியாக அனுப்பப்பட்டார். பின்பு 2009-லிருந்து 2011-வரை ஜார்க்கண்ட், டூண்ட்டோ பணித்தளத்தில் பணிபுரிந்தார்.

சகோதரி. சீத்தாமணி கிஸ்கு, கிறிஸ்தவரல்லாத பெற்றோருக்கு 4-வது பிள்ளையாக 4 சகோதரர்கள் மற்றும் 3 சகோதரிகளுடன் ஜார்க்கண்ட், ஆண்டரியா என்ற கிராமத்தில் அக்டோபர் 24-ம் தேதி, 1990-ல் பிறந்தார். 2005-ம் ஆண்டில் டியூசோலே என்ற கிராமத்தில் வைத்து நடந்த ஒரு சிறிய கிறிஸ்தவ கூடுகையில் இவர் பங்குப்பெற்றபோது இயேசுகிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். பின்பு 2006-ல் இவரது முழுக்குடும்பமும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, திருச்சபையில் இணைந்தனர். பின்னர் அங்குள்ள உள்ளூர் போதகரோடும், சபையோடும் இணைந்து வெளிப்புற சந்திப்பு ஊழியங்களிலும் இவர் ஈடுபடத் தொடங்கினார். அதன்பின் 2011-ல் இவர் தனது 12-ம் வகுப்புப் படிப்பை முடித்தபின், ஆண்ட்டியாக் வேதாகமக்கல்லூரியில் வேதாகமப்படிப்பு படிக்க தேவன் இவரை வழிநடத்தினார். அப்படிப்பை நிறைவுசெய்தபின், இவர் நமது இயக்கத்தில் இணைந்தார்.

கர்த்தருடைய சித்தப்படி, சகோ. பிமல் முர்முவும் சகோதரி. சீத்தாமணியும் மே 3-ம் தேதி, 2011-ல் திருமணம் செய்துகொண்டனர். பின்னர், 2011-லிருந்து 2012 வரை உ.பி. - ஜான்சியிலும், ஒடிசா - கியோன்ஜார் பணித்தளத்தில் 2012-2013 வரையிலும், 2013-2014 வரை ஜார்க்கண்ட் - ஜகனாத்பூர் பணித்தளத்திலும்,2014-2019 வரை மத்தியப்பிரதேசம் - குணா பணித்தளத்திலும், பின்னர் 2019-லிருந்து தற்போது வரை மத்தியப் பிரதேசம் - பிந்த் பணித்தளத்திலும் பணிபுரிந்து வருகின்றனர்.

கர்த்தர் இம்மிஷனெரித் தம்பதியருக்கு மூன்று மகள்களைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். மூத்த மகள் கிருத்திகா முர்மு (D.O.B. 23.06.2015) இரண்டாவது மகள் ஆஷினா முர்மு (D.O.B. 29.07.2017), மூன்றாவது மகள் எஸ்தர் (D.O.B. 13.11.2020) இவர்களில் இருவர் பள்ளிப்படிப்பு படித்து வருகின்றனர்.

இம்மிஷனெரிக் குடும்பத்தை நமது ஜெபங்களின் மூலம் தாங்குவோம்.



திரு. பிமல் சந்திர முர்மு & திருமதி. சீத்தாமணி குடும்பம்

Regd. Newspaper for India No.17759/69

# நிதி அலுவலகத்திலிருந்து

**Online Banking**

## இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விவரங்கள்

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

ICICI - A/c No. 602701216912 - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb01@icic**

SBI - A/c No. 10402752621 - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

Indian Bank - A/c No. 406157474 - IFS Code IDIB000A599 - Branch: Venkatapuram

தாங்கள் காணிக்கை அனுப்புகிறபோது remark column பகுதியில் தங்களது பெயர், விலாசம் மற்றும் பிரத்தியேக எண் ஆகியவற்றைப் பூர்த்திசெய்து அனுப்பவும். முதல் முறையாக online-இல் அனுப்பும்போது முகவரியுடன் எந்த வகை ஊழியத்திற்கு பயன்படுத்தப்படவேண்டும் என்பதையும் **receiptsfinance@fmpb.org** என்ற மின்னஞ்சல் வழியாக, **WhatsApp: 7904648270** உடனுக்குடன் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**கௌரவ முன்னேற்றப்பணி செயலர்கள் மற்றும் ஜெபக்குழுத் தலைவர்கள் கவனத்திற்கு:** காணிக்கை செலுத்தும் படிவத்தில் தங்களின் கைப்பேசி எண்ணை தயவுசெய்து தெரியப்படுத்துங்கள்.

## நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கவனத்திற்கு....

இணையதளம் மூலமாக பணம் பரிவர்த்தனை செய்ய, பாரத ஸ்டேட் வங்கியில் கட்டண நுழைவாயில் **(Payment gateway)** மூலமாக அனைவரும் பணம் செலுத்தும் வசதி பெற்றுள்ளோம். நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**FMPB SB COLLECT** என்ற இணையதளத்தின் மூலமாக பணம் அனுப்பும்போது எந்த நோக்கத்திற்காக பணம் செலுத்துகிறீர்கள் என்பதைத் தெரிவிக்கும்படி பட்சமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

கட்டண நுழைவாயிலுக்குள் நுழைவதற்கு உங்கள் இணையதளத்தில் **FMPB SB COLLECT Online subscription** என்ற வார்த்தைகளைப் பதிவு செய்து பிற தகவல்களையும் பரிமாற்றம் செய்ய தயவுடன் வேண்டுகிறோம்.

**Online Fund Transfer**

In google search type: **FMPB SB Collect**

it will show **State Bank Collect - Online SBI**

**Tick the box**

☑ (Click check box to proceed for payment)

**Proceed** State of Corporate / Institution: Select **All India**

Type of Corporate / Institution: Select **Religious Institutions**

**Go** Religious Institutions Name: **Friends Missionary Prayer Band**

**Submit** Select Payment Category: **Donations and subscriptions**

***Published by:*** S. Sutharsan Thomas Jeyaraj on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. Sutharsan Thomas Jeyaraj***